# திட்டம்

மாத இதழ்

மலர் 48
இதழ் 9

மே 2017
வைஷாக - ஜேஷ்ட 1938-39



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ.இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :
துணை இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை -600 006.
தொலைபேசி : 2827 2382



- புதிய இந்தியாவின் கதை
  - எம். வெங்கையா நாயுடு
- திறன் பயிற்சி மற்றும் புத்தாக்க முயற்சிகளால் இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல்
  - டாக்டர் ஜதீந்தர் சிங்
- ஸ்வச் பாரத் இயக்கம்: ஒவ்வொருவரின் கடமை
  - பரமேஸ்வரன் ஐயர்
- நேர்மையான, வெளிப்படையான பொருளாதாரத்தை நோக்கி
  - M.V. பானுமதி மற்றும் ரோஹித் தியோ ஜா
- பொது நிதியியலில் மின்னணு முன்னேற்றங்கள் : வளங்களை திறம்பட பயன்படுத்துதல்
  - லேகா சக்ரவர்த்தி - சமிக்ஷா அகர்வால்
- சிறப்பான நிதிமேலாண்மைக்கு ஏழுபடிகள்
  - ஷிஷிர் சின்ஹா
- வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குதல்
  - டேனிஷ் ஏ.ஹாஷிம் மற்றும் ஐஸ்வர்யா நஹாதா
- டிஜிட்டல் இந்தியா திட்டம்: இந்தியாவை டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமுதாயமாகவும் அறிவார்ந்த பொருளாதாரமாகவும் மாற்றும் திட்டம்
  - டாக்டர் ஓம்கார் ராய்
- ஆரவாரமில்லாத பன்னாட்டுப் பொருளாதாரச்சூழலில் இந்தியா ஒரு பிரகாசமான புள்ளி.
  - D.S.மாலிக்
- இந்தியாவின் உள்கட்டமைப்பிற்கு மோடி அரசு தரும் உந்துதல்
  - K.R. சுதாமன்



Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

# புதிய இந்தியாவின் கதை

- எம். வெங்கையா நாயுடு
நகர்ப்புற வறுமை ஒழிப்பு, வீட்டுவசதி, தகவல் ஒலிபரப்பு ஆகிய துறைகளுக்கான மத்திய அமைச்சர்

புதிய இந்தியாவை உருவாக்கும் வகையில் வண்ணக் கண்ணாடி அணிந்து கொண்டு மரியாதைக்குரிய நாடுகளால காணப்பட்ட காட்சிகளையும் எண்ணங்களையும் அழித்து நிர்வாக முன்னுதாரணங்களில் புதிய வடிவங்களை உருவாக்கி உலகளாவிய பூலோக பொருளாதார தளத்தில் தனது வளர்ச்சிக் கதையை இந்தியா மீட்டெழுதி வருகிறது.

இன்றைய தினம் இந்தியா அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தப்படியாக சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான மூன்றாவது பெரும் பொருளாதாரமாக வலுவாகவும் வேகமாகவும் வளர்ந்து வருகிறது, தற்போதுள்ள நிலையை தொடர்ந்து எதிர்கொண்டு வரும் இந்தியாவின் மாறி வரும் முகத்தில், கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு துறைகளில் முன்னிலை வகிக்கும் தலைமையின் உதாரணங்கள் நிரம்பி வழிகின்றன. அரசு மேற்கொண்ட முயற்சிகளால் மக்களின் மனநிலை மற்றும் நடத்தைகளில் ஆழமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியா பற்றிய ஒரேமாதிரியான பிரதிநிதித்துவங்கள் நீக்கப்பட்டு, உலகளாவிய அச்சுறுத்தல்கள் மற்றும் சிக்கல்களுக்கு பதிலாக மறு எழுச்சி, நெகிழ்திறன் மற்றும் பிரகாசமான புதிய இந்தியாவின் கதைக்கான தேவையின் நேரம் வந்துவிட்டது.

மும்முனைத் தாக்குதலான கறுப்பு பணம், கள்ள ரூபாய் நோட்டு மற்றும் ஊழல் ஆகியவற்றுக்கு எதிராக சமீபத்தில் எடுக்கப்பட்ட ரூ. 500, ரூ. 1000 மதிப்பு கொண்ட நோட்டுக்களின் ரொக்க மதிப்பிழப்பு அறிவிப்பை முதலில் எடுத்துக் கொள்வோம். இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டது முதல் 2.5 வருடங்களில் இந்த பிரச்சனையில் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளான, சுவிஸ் வங்கி அதிகாரிகளுடன் இணைந்து செயல்பாடு, சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து வரி ஏய்ப்பு செய்த தனிநபர் வழக்கு விசாரணை, ரூ. 65,000 கோடி வரி வருவாய்க்கு வழி வகுத்து தானாக முன்வந்து வருமானத்தை வெளியிடும் திட்டம் ஆகியவற்றின் தொடர்ச்சியாக இந்த நடவடிக்கை ஒரு கிளைமாக்ஸ் ஆக மேற்கொள்ளப்பட்டது. பொருளாதாரத்தில் இருந்து கறுப்புப் பணத்தை களையெடுப்பதற்கான இந்த நடவடிக்கை திறனை மேம்படுத்துவது மட்டுமின்றி, ஊழலைக் குறைப்பது மட்டுமின்றி, அரசும் மத்திய வங்கியும் வரி விகிதம் மற்றும் வட்டி விகிதத்தைக் குறைக்கவும், முதலீடுகளை ஈர்க்கவும் வழி செய்திருப்பதுடன் நிதி பற்றாக்குறையைக் குறைத்து வளர்ச்சி இலக்குகளை அடையவும் வகை செய்துள்ளது. இதுதான் மீண்டெழுந்த இந்தியாவின் கதை.

ரொக்க மதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பின்னர் டிஜிட்டல் கட்டண சூழலை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அதற்குத் தேவையான ஊக்கம் கிடைத்து இந்தியாவின் டிஜிட்டல் தலைமை கண்ணுக்குத் தெளிவாகப் புலப்பட்டது. ரொக்கமில்லா பரிவர்த்தனைகளை மேம்படுத்தி ஒரு பழக்க வழக்க மாற்றத்தை ஏற்படுத்தி, இந்தியாவை ஒரு குறைந்த ரொக்க சமுதாயமாக மாற்றி, அதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பிக்கையை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். பீம் செயலி அறிமுகம் செய்யப்பட்ட வெறும் இரண்டு மாதங்களிலேயே சுமார் 1.5 மக்கள் அதைப் பயன்படுத்த தொடங்கியிருப்பது உற்சாகத்தை அளிக்கிறது. டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு உதவும் வகையில், ஜன் தன் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அளிக்கப்பட்டது தவிர 50 கோடி ரூபே அட்டைகளை அரசு வழங்கி இருக்கிறது. லக்கி கிராஹக் திட்டத்தின் கீழ் 12.5 லட்சம் மக்களும், டிஜி தன் வியாபார் திட்டத்தின் கீழ் 70,000 வியாபாரிகளும் பரிசுகளை வென்றுள்ளனர். பிரதம மந்திரி கரீப் கல்யாண் திட்டம், வரி ஏய்ப்போர் தங்களது வருவாயை வெளியிடவும், அதன் மூலம் திரட்டப்படும் வருவாய் ஏழை மக்களின் நல்வாழ்வுக்கு அளிக்கப்படும் என்ற அறிவிப்பு வரி ஏய்ப்போருக்கான ஒரு கடைசி வாய்ப்பாக அமைந்தது. ஊழல் மற்றும் கறுப்புப் பணத்தை ஊதித் தள்ளுவதற்கான ஒரு டிஜிட்டல் புரட்சியை உருவாக்குவதற்கான ஒரு பிரத்யோக வாய்ப்பை ரொக்க மதிப்பிழப்பு நமக்கு அளித்துள்ளது. ஆன்லைன் மூலமான கட்டண முறைகள் ரொக்கத் தேவையை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைப்பதுடன், நிதி தொடர்புடையவற்றில் வெளிப்படைத் தன்மையையும் ஏற்படுத்துகிறது. கட்டணம் செலுத்துவதற்கான டிஜிட்டல் முறைகளில் நல்ல அறிவாற்றல் கொண்டவர்கள் இதனை தெரியாதவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், ஊழல் மற்றும் கறுப்புப் பணத்தை ஒழிப்பதும், ஒரு போராகும். இந்த சமூக போரை நாம் இணைந்து போராட வேண்டும். இதுதான் டிஜிட்டல் இந்தியாவின் கதை.

பிரதம மந்திரி ஜன் தன் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருப்பது, சமையல் எரிவாயுவுக்கான மானியத்தை நேரடியாக ரொக்க பரிமாற்றத் திட்டம் அல்லது பஹல் திட்டத்தின் கீழ் விநியோகிப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஏழைக் குடுமபங்களுக்கு பயன்களை மாற்றம் செய்வதற்கு ஓர் உலகளாவிய சிறந்த நடைமுறையாக மாறுவதற்கான பெரும் வாய்ப்புகள் இந்த சீர்திருத்த முயற்சியில் உள்ளது.16 கோடி பதிவு செய்த பயனாளிகளுடன் இது உலகின் மிகப்பெரிய நேரடி ரொக்க பரிமாற்ற திட்டமாக திகழ்கிறது. இந்த மானிய சீர்திருத்த திட்டத்தின் முதன்மை நோக்கம் என்பது மானியங்களை ஒழிக்காமல், அவை செல்ல வேண்டிய பயனாளிகளுக்கு செல்வதில் அதிக வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வந்து மிக நீண்ட மதிப்பு சங்கிலியில் ஊழலையும் கசிவையும் போக்குவதாகும். அறிமுகம் செய்யப்பட்டது முதல் சமையல் எரிவாயு மானியத்தில் மட்டும் அரசு ரூ. 22,000 கோடியை சேமித்துள்ளது.

பொருளாதார கோளத்தில் ரொக்க மதிப்பிழப்பு மற்றும் இதர முடிவுகள் ஒவ்வொரு குடிமகனையும் வங்கி வலயத்துக்குள் கொண்டு வரும் மற்றும் உலகளாவிய நிதி உள்ளடக்கத்தை எட்டுவதற்குமான தீவிர இயக்கத்துடன் கையோடு கை இணைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 28.13 கோடி கணக்குகள் பிரதம மந்திரி ஜன் தன் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டு, அதன் மூலம் நிதி உள்ளடக்கத்தை அடைவது மற்றும் நிதி தீண்டாமை இலக்கை எட்டுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடு சுதந்திரம் பெற்றது முதல் 2014 ஆகஸ்ட் வரை தொடங்கப்பட்ட வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கையை விட அதிக வங்கிக் கணக்குகள் திறக்கப்படுவதற்கு இந்தத் திட்டம் வழி செய்துள்ளது. இதுதான் உள்ளடக்கிய இந்தியாவின் கதை.

பஹல் திட்டத்தின் மறுபக்கம் தான் ‘கிவ் இட் அப்’ எனப்படும் கைவிடும் திட்டம். ஆண்டுக்கு ரூ. 10 லட்சம் மற்றும் அதற்கு மேல் வருவாய் ஈட்டுபவர்கள் தங்களது சமையல் எரிவாயு இணைப்புக்கான மானியத்தை தானாக முன் வந்து கைவிட இந்த இயக்கம் ஊக்குவித்தது. இதன் மூலம் சேமிக்கப்பட்ட நிதி சமையல் செய்ய விறகு அல்லது மண்ணெண்ணெய்யை இப்போதும் பயன்படுத்தி வரும் 65 லட்சம் பேருக்குப் புதிய சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்க பயன்படுத்தப்பட்டது. ஒரு கோடிக்கும் கூடுதலான நுகர்வோர் தானாக முன் வந்து மானிய பயன்களைக் கைவிட்டு அதன் மூலம் அரசு கஜானா சுமார் ரூ. 5,000 கோடி சேமிக்க வகை செய்தனர். இதுதான் சீர்குலையாத இந்தியாவின் கதை.

மேக் இன் இந்தியா இயக்கம் என்பது இந்த அரசின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றாகும். இந்தியாவை ஒரு உலகளாவிய உற்பத்தித் தொகுப்பாக ஆக்கி, சிறந்த உள்கட்டமைப்பு, சிறந்த வேலை வாய்ப்புகள் ஆகியவற்றை இந்தியாவின் பெரும் மக்கள் தொகையை பயன்படுத்தி பெறுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். நிகர அந்நிய நேரடி முதலீடு வருகை இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்து 2017 தொடக்கத்திலேயே 3.35 பில்லியன் டாலரை எட்டியிருப்பதுடன், நடப்பு கணக்கு பற்றாக்குறைக்கு கூடுதலாக நிதி அளித்துள்ளது. மேக் இன் இந்தியா திட்டம் தொடங்கப்பட்ட பின்னர் அந்நிய முதலீடுகள் சுமார் 46% அதிகரித்துள்ளது. இதுதான் முதலீட்டாளர்களுக்கு நட்பான இந்தியாவின் கதை.

சரக்கு மற்றும் சேவை வரி எனப்படும் ஜி.எஸ்.டி. சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது வரி நடைமுறைகளை எளிமைப்படுத்தி, சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு தேசம் தழுவிய சந்தையை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் பரந்த வரித்தளத்தை அளித்துள்ளது. அரசு வருவாய் அதிகரிக்கும், சரக்கு போக்குவரத்து, விவரப்பட்டியல் செலவினங்கள், வரி ஏய்ப்புக் குறைந்து, உற்பத்திப் பொருட்களின் விலை குறையும். ஒரே நாடு ஒரே வரி என்ற கனவு தற்போது நனவாகி இருக்கிறது. இது அரசின் உறுதிப்பாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கிறது. அடுக்கடுக்கான வரி, மாநிலங்களுக்கு இடையிலான வரி, கூடுதல் சரக்குப் போக்குவரத்து செலவுகள் மற்றும் துண்டு துண்டான சந்தை ஆகியவை குறித்து ஜி.எஸ்.டி கவனிக்கிறது. ஜி.எஸ்.டி. உரிய எதிர்மறை தீர்வையை அளிப்பதால் இறக்குமதிகளில் இருந்து அதிக பாதுகாப்பு கிடைக்கிறது. இதுதான் நிலைமாற்றத்திற்கான இந்தியாவின் கதை.

கூடுதல் திறன் கொண்ட பொருளாதாரம் என்ற கனவை நனவாக்கும் விதமாக டிஜிட்டல் உள்கட்டமைப்பை அதிகரிக்கவும், டிஜிட்டல் கல்வியை மேம்படுத்தவும் டிஜிட்டல் இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டது. மின்னணு நிர்வாகம் கொண்டு வருவது திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதுடன், நடைமுறைகளை பின்பற்றுவதில் கூடுதல் நேரத்தையும் மிச்சப்படுத்துகிறது. இது தொடக்க நிலையிலேயே உள்ள போதிலும் இந்தத் திட்டத்தை பல மொழி மேடைகளில் பரவச்செய்வது மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் இணையதள வசதிகளை மேம்படுத்துவது ஆகியவை இந்த முயற்சியை மேலும் விரிவுபடுத்த உதவும். போதிய அளவிலான உள்கட்டமைப்பு இருப்பதன் முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. அதனால்தான் நாங்கள் 2.5 லட்சம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இணையதள இணைப்பு அளிக்கும் பாரத் பிராட்பேண்ட்டை அமைப்பதில் உறுதியுடன் இருக்கிறோம். 2017 ஜனவரி 29 அன்றுவரை 76,089 கிராமப் பஞ் சாயத்துக்களில் 1,72,257 கிலோமீட்டர் தொலைவுக்கு கண்ணாடி இழை கேபிள்கள் பதிக்கப்பட்டுள்ளதால். 16,335 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு பிராட்பேண்ட் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதுதான் டிஜிட்டல் இந்தியாவின் கதை.

ஸ்வச் பாரத் அபியான் எனப்படும் தூய்மை இந்தியா இயக்கம் இந்த அரசுடன் ஒத்திசைவு

கொண்ட ஒரு முயற்சியாக இருப்பதுடன், 2019ம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து திறந்தவெளி கழிப்பிட முறையை முற்றிலும் அகற்ற வேண்டும் என்ற உயர்ந்த இலக்கைக் கொண்டிருப்பது நாட்டை மாற்றியமைக்கும் முயற்சியாக பாராட்டப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கழிவறைகளின் எண்ணிக்கை அடிப்படையிலான உள்கட்டமைப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் கழிவறைகளை பயன்படுத்துவதை தடுக்கும் பழைமையான பண்பாடு, சமூக மற்றும் மத விதிமுறைகளில் இருந்து அவர்களை மீட்டெடுத்து அவர்களின் பழக்க வழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது இந்த அரசின் அடுத்த கண்ணோட்டமாகும். இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 4 கோடிக்கும் அதிகமான கழிவறைகள் கட்டப்பட்டு, 573 நகரங்கள், 1,88,008 கிராமங்கள், 130 மாவட்டங்கள் திறந்தவெளிக் கழிப்பிடங்கள் அற்றவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தூய்மை இந்தியாவின் கதை.

திறன் மேம்பாட்டைப் பொருத்தவரையில் பிரதம மந்திரி கவுசல் விகாஸ் திட்டம் இந்த அரசின் முன்னோடித் திட்டமாகும். அதிக எண்ணிக்கையிலான் இந்திய இளைஞர்கள் துறை சார்ந்த திறன் பயிற்சிகளைப் பெற்று, அதன் மூலம் அவர்கள் சிறந்த வாழ்வாதாரத்தைப் பெற வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். கவுசல் பாரத் குஷால் பாரத் என்ற சுலோகத்துடன் 19.85 லட்சம் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, 2016 நிதியாண்டில் 2.49 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு 296 மாவட்டங்களில் 8479 பயிற்சி மையங்கள் இந்தத் திட்டத்தின் மூலம் திறக்கப்பட்டுள்ளது. இதுதான் திறன் இந்தியாவின் கதை.

குறைந்த அரசு அதிக நிர்வாகம் என்ற மந்திரத்தில் நம்பிக்கை கொண்டு இந்த அரசு செயல்படுவதை அரசின் பணி நெறிமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் இருந்து பார்க்கலாம். தற்போதைய தலைமை நிபுணத்துவ பணி புதுமையுடன் நிர்வாகத்தை நிறுவனமயமாக்கி அரசில் புதிய பணிக் கலாச்சாரத்தை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கொண்ட வழக்கமான ஆய்வு கூட்டங்கள், வீடியோ கன்ஃபரன்சிங் மூலம் நாடு முழுவதும் உள்ள அதிகாரிகளுடன் குறிப்பிட்ட கால அளவில் கலந்துரையாடல் புதிய நடைமுறைகளாகும். நடைமுறைகளில் பரவலாக உள்ள ஊழலை ஒழிப்பது, மற்றும் நிலக்கரி படுகை ஒதுக்கீடுகளில் காணப்பட்ட தாமதங்கள் மற்றும் நிர்வாகத் தடைகளை நீக்கியது இந்த அரசின் பெரும் சாதனையாகும். இதுதான் வெளிப்படையான இந்தியாவின் கதை.

பிரதம மந்திரி ஃபசல் பீமா திட்டம், பிரதம மந்திரி கிரிஷி சின்சாயி திட்டம், மண் ஆரோக்கிய அட்டைத் திட்டம், வேம்பு பூசப்பட்ட யூரியா, குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிப்பது உள்ளிட்ட வேளாண்மைத் துறைக்கான திட்டங்கள் பருவ மழை தவறிய காலங்களிலும் நமது நாட்டின் விவசாயிகளுக்கு நல்ல முறையில் சேவையாற்றி உள்ளது. 2014-17 காலக்கட்டத்தில் சொட்டு நீர் பாசம முறையின் கீழ் கொண்டு வரப்பட்ட சுமார் 15.86 லட்சம் ஹெக்டேர் நிலம் சொட்டு நீர் பாசனத் திட்டத்தில் ஒரு சொட்டு நீரில் இருந்து அதிக பயிர் என்ற தாரக மந்திரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது, இதுவரை 6.20 கோடி மண் ஆரோக்கிய அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பயிர்க் காப்பீட்டைப் பொறுத்த வரையில் 2016 கரீப் பருவத்தில் 23 மாநிலங்களில் 390 லட்சம் விவசாயிகள் உள்ளடக்கப்பட்டு, 386.75 லட்சம் ஹெக்டேர் பரப்பிலான நிலங்கள் ரூ. 1,41,883.30 கோடிக்கு காப்பீடு செய்யப்பட்டது. ரபி பருவத்தின் போது 167 லட்சம் விவசாயிகள் உள்ளடக்கிய 193.35ம் லட்சம் ஹெக்டேர் நிலம் ரூ. 71,728.59 கோடிக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டுக்கு உணவு அளிப்பவர்களின் நல்வாழ்வில் இந்த அரசின் உறுதிப்பாடு குறித்து இந்த எண்ணிக்கை பல மடங்கு பேசும்.

உள்கட்டமைப்புகளைப் பொறுத்தவரையில் நவீன நகரங்கள் திட்டம், அம்ருத் இயக்கம், பிரதமர் மந்திரி வீட்டு வசதித் திட்டம், மானியத்துடன் கூடிய கடன் திட்டம், பிரதம மந்திரி சன்சத் ஆதர்ஷ் கிராமத் திட்டம், ரெரா நிறைவேற்றம் உள்ளிட்டவை இந்தத் துறையின் செயல்திறனை விரிவுபடுத்தியுள்ளது.

பேட்டி பச்சாவோ, பேட்டி படாவோ, அடல் ஓய்வூதிய திட்டம், ஜீவன் ஜோதி பீமா திட்டம், கிரிஷி சின்ச்சாய் திட்டம், முத்ரா வங்கித் திட்டம், சுகன்யா சம்ருத்தி திட்டம், நயி மன்சில் திட்டம் உள்ளிட்டவை பெண் குழந்தைகள், மூத்த குடிமக்கள், விவசாயிகள், சிறுபான்மையினர், நகர்ப்புறங்களில் வசிப்போர் மற்றும் கிராமப்புறங்களில் இருப்போர் என சமுதாயத்தின் அனைத்து துறைகள் சமநிலையில் இருப்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கிறது. அரசின் திட்டங்கள் சமுதாயத்தின் அனைத்து பிரிவினரையும் சென்றடைந்து அவர்களின் வாழ்வை எளிதாக ஆக்கியுள்ளது. இதுதான் மாறிவரும் இந்தியாவில் பயன்களைப் பெறும் ஏழைகள், விவசாயிகள் மற்றும் மகளிரின் கதை.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைப் பார்க்கும் போது, அரசின் முயற்சிகள் அதிக தீவிரத்துடன் இருப்பதும், பிரதமர் 6 கண்டங்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு வெறும் இரண்டு ஆண்டுகளை விட சிறிது அதிகமான காலக்கட்டத்திற்குள் பயணம் மேற்கொண்டுள்ளார். பதவி ஏற்பு விழாவுக்கு அனைத்து சார்க் தலைவர்களையும் அழைப்பது என்ற முதலாவது முடிவு, தற்போதுள்ள அரசியல் சூழலில் அண்டை நாடுகளுடன் இணைந்து செயல்படவே தில்லி

விரும்புகிறது என்ற வலிமையான செய்தியை தூதரக வட்டங்களில் பரப்பியதால் அது மிகவும் பாராட்டுக்குரியதாக அமந்தது. இருதரப்பு பயணத்திற்காக தேர்வு செய்யப்பட்ட முதல் நாடாக பூடான் அமைந்தது இதற்கு மேலும் வலு சேர்த்தது. மேலும் பிரதமர் அண்டை நாடுகள் அனைத்துக்கும் குறைந்தது ஒருமுறையாவது சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் இருந்து வரும் பயங்கரவாத தாக்குதல்களுக்கு யுக்திபூர்வமான கட்டுப்பாடு என்ற நிலையில் இருந்து அதற்கு பதிலடி கொடுப்பதில் அதிக உறுதி என்ற நிலைப்பாட்டிற்கு மாறியது. தெளிவான இருதரப்பு உறவை இந்தியா விரும்புகின்றது என்ற போதிலும், பிரிவினைவாதிகளுடன் பாகிஸ்தான் பேச்சுக்கள் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை வெளீயுறவுத் துறை செயலர்கள் மட்டத்திலான பேச்சுக்களை ரத்து செய்தது, பிராந்திய உச்சி மாநாடுகளில் இருந்து வெளியாறியது (சார்க் உச்சி மாநாடு) ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தியது. சர்ஜிகல் ஸ்டிரைக் எனப்படும் திடீர் தாக்குதல் மூலம் இந்திய ராணுவத்தின் மீதான தாக்குதலுக்கு பதிலடி, இந்த நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தியது. சார்க் உச்சிமாநாட்டைப் புறக்கணித்தது, பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்கும் தீர்மானத்தை கொண்டு வருவது குறித்து உலகின் சக்தி மிகுந்த நாடுகள் பரிசீலிக்க கடுமையான செய்தியை அனுப்பியது.

பலதரப்பு சந்திப்புகளின் போது, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராகும் இந்தியாவின் முயற்சிக்கு பலர் ஆதரவு தெரிவித்ததுடன், அணு வினியோக குழுவில் இந்தியா நுழையும் விவகாரத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. பிரிக்ஸ், சார்க், பிம்ஸ்டெக் போன்ற பிராந்திய குழுக்களில் இந்தியாவின் ஈடுபாடு பலன் அளிப்பதாக அமைந்தது. பலதரப்பு பேச்சுக்களின் போது வளரும் நாடுகளுக்காக பருவ நிலை பிரச்சனையில் (பாரில் உச்சிமாநாட்டில்) மற்றும் உலக வர்த்தக அமைப்பில் வர்த்தக் பேச்சுக்களிலும் குரல் கொடுத்தது.

நடப்பு தலைமையின் கீழ் இந்திய அமெரிக்க உறவுகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அமெரிக்காவின் முக்கியத் தலைவர்களுடன் நல்ல உறவை உருவாக்கிக் கொள்ள உயிர்ப்பான நடவடிக்கைகளை எடுத்த பிரதமர், அதிபர் ஒபாமாவை வெறும் 24 மாதங்களில் ஆறு முறை சந்தித்ததுடன் மூன்று முறை அமெரிக்காவிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவுகள் ஒரு மேல்நோக்கிய உறுதியான வளர்ச்சிப் பாதையில் பயணித்தது. இந்தியா தனது பாரம்பரிய உறவு நாடுகளுடனான ஜப்பான் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுடன் தீவிர ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொண்டு, தெற்காசிய பிராந்தியத்தில் தனது செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளும் சீனாவின் விருப்பத்திற்கு தடை ஏற்படுத்தியது. டபி மற்றும் சப்பஹார் துறைமுக ஒப்பந்தங்கள் போன்ற திட்டங்கள் இந்த பிராந்தியத்தில் சீனாவின் மேலாககத்திற்கு எதிராக அமைந்தது.

பாரம்பரியமிக்க நட்பு நாடுகளுடன் ஈடுபாடு செய்து கொள்வது மட்டுமின்றி, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவில் புதிய நாடுகளுடன் யுக்திபூர்வமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் அரசு கண்ணோட்டம் செலுத்தி வருகிறது; இயற்கை வளங்கள் மிகுந்த நாடுகள் மற்றும் குறிப்பிடத்தக்க யுக்திபூர்வமான முக்கியத்துவம் கொண்ட நாடுகளுடன் உறவுகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு இயல்பான தலைவராக உருவெடுக்கும் திசையில் இந்தியா இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுதான் வளரும் இந்தியாவின் கதை

நேபாளத்தில் தாக்கிய பூகம்பம் அல்லது ஏமனில் சிக்கித் தவித்த இந்தியர்கள், அல்லது காஷ்மீரில் தாக்கிய வெள்ளம், அல்லது கேரளா ஆலயம் ஒன்றில் ஏற்பட்ட தீ என எந்த மோசமான நிகழ்வுகளின் போதும் மத்திய அரசு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டது. சர்வதேச யோகா தினம் போன்றவற்றில் இந்தியாவின் மென் திறன்கள் வெளிப்பட்டது. இதுதான் கவனிக்கும் இந்தியாவின் கதை.

வரும் ஆண்டுகளில் நாடு மேலும் முன்னேறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்வதற்கான அடிக்கல் கடந்த 3 ஆண்டுகளில் நாட்டப்பட்டுள்ளது. பெரும்பாலான இந்த முயற்சிகள் பல்வேறு தொடர்பு முறைகளான பத்திரிகையாளர் சந்திப்புகள், தொலைக்காட்சி, வானொலி, அச்சு ஊடகம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் தீவிரமாக வெளியிடப்பட்டது. மனதின் குரல் என்னும் மாதாந்திர நிகழ்ச்சி மூலம் அகில இந்திய வானொலியில் பிரதமர் நேரடியாக மக்களைச் சென்றடைகிறார். அரசு, எதிர்க்கட்சி, நிர்வாகம், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் இணைந்து எடுக்கும் முயற்சிகள் உலகளாவிய பெரும் சக்தியாக உருவெடுக்க வளர்ந்த நாடாக திகழ வேண்டும் என்ற கனவு நனவாக உதவும். இதுதான் தொடர்பு கொள்ளும் இந்தியாவின் கதை.

நமது கதை மீண்டும் மீண்டும் சொல்லப்பட வேண்டும் என்பதுடன் இந்தியாவை ஒரு வண்ணக் கண்ணாடியின் மூலம் பார்வையிடும் பழக்கத்தில் இருந்து மாற வேண்டும். மேற்கூறப்பட்ட கதைகள் புதிய சக்தி கொண்ட புதிய இந்தியா மற்றும் பிரதமர் நரேந்திர மோடி உருவாக்கி வரும் உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டும் சில கதைகள் தான். இதுதான் வளரும் இந்தியாவை உருவாக்கும் மோடி இயக்கத்தின் கதை.

●

# திறன் பயிற்சி மற்றும் புத்தாக்க முயற்சிகளால் இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல்

- டாக்டர் ஜதீந்தர் சிங்
வணிக, தொழில் அரங்கின் மூத்த செயலாளர், மனிதவளத்தலைவர்

மாற்றங்களின் பிறப்பிடமாகத் திகழும் இளைஞர்கள், புதிய பரிசோதனை முயற்சிகளைத் தயங்காது மேற்கொள்வதோடு, புதிய கருத்தாக்கங்களை முன்வைத்து வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் சக்தியாகவும் விளங்குகிறார்கள். இளைஞர்கள் வருங்காலத்தின் தலைவர்கள் என்பதோடு வளர்ச்சியின் பங்காளிகள் என்பதால், தங்களுடைய கருத்துக்கள் செவிமடுக்கப்படவேண்டும் என்றும், கவனிக்கப்படவேண்டும் என்றும் விரும்புகிறார்கள். எனவே, வளர்ச்சிப்பாதையின் வேகவிசைக்குள் இந்தியா அடியெடுத்து வைக்கின்ற தருணத்தில், நம்முடைய இளைஞர்களுக்குத் தேவையான திறன் பயிற்சிகளையும் அறிவு விளக்கத்தையும் அளிப்பது தற்போதைய அவசியத் தேவையாகும்.

இந்தியவரலாற்றில் இந்தக்காலகட்டம் மிக உன்னதமானது. ஏனெனில் நமது மொத்த மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். 2020ஆம் ஆண்டில் நம் மக்கள் தொகையின் சராசரி வயது 29ஆக இருக்கும்போது, சுமார் நான்கு கோடியே 70லட்சம் இளைஞர்கள் வேலைத்திறனுடன் உபரியாக இருப்பார்கள் எனவே திறன் பயிற்சி மற்றும் தொழில் முனைவு ஆகியவற்றில் அவர்களை நெறிப்படுத்த வேண்டும். இந்தியாவின் உழைக்க கூடிய மக்களின் எண்ணிக்கை 2040ஆம் ஆண்டுவரை அதிகரித்துக் கொண்டேபோக வாய்ப்பு உள்ளதால், 'வளர்ந்து வரும் நாடு' என்ற நிலையில் இருந்து 'வளர்ந்த நாடு' அந்தஸ்தை எட்டிவிடக்கூடும் என்று உலகவங்கி ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இளைஞர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதன் மூலமாக வளர்ச்சிப் பாதையில் தேசத்தை முன்நடத்திச் செல்ல முடியும் என்பதே தெளிந்த முடிவாகும். எனவே புதிய சிந்தனைப்போக்குகளை ஊக்குவித்தல், புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடல், முடிவெடுத்தலில் இளைஞர்களையும் சேர்த்துக் கொள்ளுதல் போன்றவை கவனம் பெற வேண்டும். இவற்றுக்கு அடித்தளமாக, வேலை செய்யும் ஆற்றல் மிக்கவர்களாக்கும் திறன்களை இளைஞர்களுக்குக் கற்பித்தாக வேண்டும். இதற்கென பலமுனை உத்திகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. இந்தியாவில் தயாரிப்போம், திறன்மிகு இந்தியா இயக்கம், தொடங்கிடு இந்தியா, எழுக இந்தியா, டிஜிட்டல் இந்தியா என்பன அந்த உத்திகளாகும்.

### இந்தியாவில் தயாரித்தல்:

2022ஆம் ஆண்டுக்குள் பத்துகோடி பேருக்கும் புதிய வேலைவாய்புகளை உருவாக்கக் கூடிய இத்திட்டம், முதலீடு, துரிதமான புத்தாக்கம், அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பு போன்றவற்றுக்கு உத்வேகம் அளிக்கும். இத்திட்டத்தால் பலதுறைகளிலும் ஏற்படும் அடுத்தடுத்த சாதகமான விளைவுகளால் எண்ணற்ற வாழ்வாதார வாய்ப்புகள் இளைஞர்களுக்குக் கிடைக்கும். உலகநாடுகளின் உற்பத்திக் கூடமாக இந்தியாவை மாற்றிவிடக் கூடிய இத்திட்டத்தினால், நமது நாட்டின் மொத்த வருவாய், உற்பத்தித்துறையின் பங்கு அடுத்த ஐந்தாண்டுகளில் 25 சதவீதமாக உயர்ந்துவிடும். கட்டுமானம், ஜவுளித் தொழில், உணவு பதனத் தொழில், வான்வழிப் போக்குவரத்து, பாதுகாப்புத் தளவாடங்கள், மின்னணுப்பொருள்கள் போன்ற 25 துறைகளில் இந்தியத் தயாரிப்பு நடைமுறைகளைச் செயல்படுத்தலாம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கென அந்நியமுதலீடுகளுக்கான விதிமுறைகளைத் தளர்த்தியுள்ள மத்திய அரசு, இந்திய நிறுவனங்களையும் இங்கே பெருமளவு முதலீடு செய்து, உற்பத்தி செய்து, உலக அளவில் விற்பனை செய்வதை ஊக்குவிக்கிறது. இவற்றுக்குப் புதிய, நவீன தொழில் நுட்பங்கள் அவசியம். அத்தகைய நவீன தொழில் நுட்பங்களைக் கையாள்வதற்குத் தற்போதுள்ள தொழிலாளர்களுக்கும், இனி வருங்காலத்தில் பணியமர்த்தப்படக் கூடியவர்களுக்கும் தொழில்திறன் பயிற்சி அளித்தாக வேண்டும். பொலிவுறு நகரத்திட்டத்தால், சூரியசக்தி மின்னுற்பத்தி, பசுமைக்கட்டடங்கள், போன்றவற்றிலும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

### திறன் மிகு இந்தியா

மக்கள் தொகை வளர்ச்சியின் அனுகூலமான, உழைக்கும் சக்தி கொண்ட தொழிலாளர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களை வேலைக்கு அமர்த்துகிறவர்கள் எதிர்பார்க்கிற திறன்களை அவர்களுக்கு அளிப்பது மிகவும் சவாலான பணியாகவே உள்ளது. ஆண்டு தோறும் சுமார் ஒரு கோடியே 20லட்சம் பேர், வேலைவாய்ப்புச் சந்தையில் புதிதாக நுழைந்தாலும், அவர்களில் சுமார் இரண்டு சதவீதம் பேர் மட்டுமே முறையான பயிற்சியைப் பெற்றுள்ளனர். தகுதியுள்ள அனைவருக்கும் திறன் பயிற்சிகளை அளிக்கவும், அத்தகைய பயிற்சித்திட்டங்களை ஒருங்கிணைக்கவும், 'திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம்' என்ற புதிய அமைச்சகத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. திறன்மேம்பாடு மற்றும் தொழில் முனைவுக்கான முதலாவது ஒருங்கிணைந்த தேசியக் கொள்கை 2015, இளைஞர்களின் திறன் மேம்பாட்டும் பயிற்சிக்கு மட்டுமல்லாது, உயர்நுட்பத்திறன் தேவைப்படுகிற வேலைகளைப் பெறுவதற்கும், அத்தகு தொழில்களை அவர்களே தொடங்கிட ஊக்குவிக்கவுமான அடித்தளத்தை நிறுவியுள்ளது. ''பெருமளவிலான இளைஞர்களுக்கு மிகதுரிதமாகவும், தரமானதாகவும் திறன் பயிற்சிகளை

அளிக்கும் சூழல் உருவாகியுள்ளது இதனால், புத்தாக்க முயற்சிகள் கொண்ட தொழில் முனைவுகள் மேற்கொள்ளப்பட்டு, வேலைவாய்ப்பும் செல்ல வளமும் பெருகுவதுடன், குடிமக்கள் அனைவருக்கும் நிலையான வருவாய் கிடைத்து, வாழ்க்கைத் தரம் தொடர்ந்து மேம்பட்டுக் கொண்டே இருக்கும் என்று கொள்கை விளக்க அறிக்கை கூறுகிறது.

தற்போதைய சூழலில் தொழில்நுட்பச் செயல்பாடுகளிலும் வாணிக நடவடிக்கைகளிலும் பெருத்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, புதிய வேலைவாய்ப்புகள் என்பது உடல் உழைப்பு வேலை என்றோ, மூளை உழைப்பு வேலை என்று பிரித்தறியப் படாமல், புதிய உழைப்புத்தளம் என்றுதான் பார்க்கப்படும். செயற்கை நுண்ணறிவு தானியக்கம், இணைய தள உலாவல், புள்ளிவிவரப் பகுப்பாய்வு, போன்றவை உயர்நுட்பத்திறன் மிக்க வேலைகளாகும். இத்தகு பணிகளை வழங்கும் நிறுவனங்களும் அதிகத் திறன் பெற்றவர்களையே தேடித்தேடிப் பிடிப்பதால், நமது இளைஞர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளும் சர்வதேசத் தரத்தில் இருக்கவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

தேசியத்திறன் வளர்ச்சிக்கழகம், ஒவ்வொரு தொழில்துறையும் வேண்டுகிற திறன்களை அளிப்பதற்காக பிரத்யேகத் திறன் கவுன்சில்களை ஏற்படுத்தியுள்ளது. தேசிய வேலைத்திறன் தரம் (National Occupation Standard) என்ற அளவு கோலை இவை வரையறுத்துள்ளன. இந்தத் தரத்தை எட்டுவதாக, இளைஞர்களுக்கான பயிற்சிகள் அமைய வேண்டும். தேசியத்திறன் தகுதிக் கட்டமைப்பு (National Skills Quolification Frame work) தொழிற்பயிற்சிக் கல்விக்கும், பொதுக்கல்விக்கும் இடையேயான இணைப்புகளை ஏற்படுத்துகிறது.

**புத்தாக்கம் தொழில் அடைகாக்கும் நிலை, எழுக இந்தியா, தொடங்கிடு இந்தியா**

பெரும் பெரும் புத்தாக்க முயற்சிகளுக்குக் களமாக இந்தியா எப்போதுமே திகழ்ந்துவருகிறது. நம்நாட்டு விஞ்ஞானிகளின் அயராத உழைப்பினால் உருவாக்கப்பட்ட 'மங்கள்யான்' ஒன்றே இதற்குப் போதுமான சான்றாகும் செவ்வாய்க்கிரஹத்தை நோக்கிய 65 கோடி கி.மீ தூரத்திற்கான பயணச் செலவை சராசரியாக ஒரு கி.மீ. க்கு ஏழு ரூபாய்க்குள் அடக்கிவிட்டனர் நமது விஞ்ஞானிகள்

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இளைஞர்கள் பட்டாளம். பிரமாதமான கருத்துருக்களையும், நவீன சிந்தனைப் போக்குகளையும் கொண்டதாக இருப்பதை மறுப்பதற்கில்லை. அவர்களுடைய புதிய யோசனைகளை செயல்படுத்தும் விதமாக, அவர்களைக் கைப்பிடித்து வழி நடத்துவது நமது பொறுப்பாகும். பள்ளி அளவிலேயே, புதிய சிந்தனைகளுக்கு ஊக்கும் தரும் பணிகள். முடுக்கிவிடப்பட்டுள்ளன. புதிய திட்டங்கள், முழுமையான வடிவத்தைப் பெறுவதற்குப் பலபடிகளைக் கடந்து வரவேண்டிய இடங்களில் 'அடைகாப்பு' மையங்களை அரசு ஏற்படுத்தி வருகிறது. பெரிய தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறை, அறிவியல் மற்றும் தொழில் ஆய்வுக்கவுன்சில் போன்றவையும் 'அடைகாப்பு' மையங்களை நிறுவவும், தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும் உதவி வருகின்றன. மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் தொடர்ந்து புதியமுயற்சிகளையும், புத்தாக்கங்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவற்றுக்கான நிதி ஆதரவு, தொழில்நுட்ப ஆலோசனை போன்றவற்றை வழங்கவும் அரசு கவனம் செலுத்துகிறது.

பொதுவாக புதியதாக ஒரு நுட்பத்தை உருவாக்கி, உற்பத்தியில் இறங்கும் தொழில் முனைவோர், பெரும்பாலும் தமது உறவினர்கள் நண்பர்களின் பொருள் உதவியை மட்டுமே நம்பி இறங்குகின்றனர். அரசு மற்றும் பெரும் தொழில் நிறுவனங்கள் நிறுவியுள்ள 'அடைகாப்பு' மையங்கள், இதுபோன்ற புதிய முயற்சிகளுக்குப் பொருளாதார ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் ஆதரவுக்கரம் நீட்டுகின்றன. தற்போது பெரும்பாலான 'அடைகாப்பு மையங்கள்' கல்வி நிறுவன வளாகங்களிலேயே செயல்படுகின்றன. அவற்றுள் 118 மையங்களை மத்திய அரசின் தொழில்-வாணிகத்துறை, தொடங்கிடு இந்தியா திட்டத்தின் கீழ் அங்கீகரித்துள்ளது. தற்போது நம் நாட்டில் சுமார் பத்தாயிரம் முயற்சிகள் தொடங்கிடு இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை 2020 ஆண்டில் 11,500 ஆக அதிகரித்திடக் கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013படி, தொழில் நிறுவனங்கள் தாம் ஈட்டுகின்ற இலாபத்தில் இரண்டு சதவீதத்தை சமூகப் பொறுப்புடைமை திட்டத்தில் செலவிடவேண்டும். அவ்வாறு, சமூக மேம்பாட்டுக்காகச் செலவிடப்படும் தொகையை 'அடைகாப்பு' மையங்களை ஏற்படுத்தவும் செலவிடலாம் என்று வகைசெய்யப்பட்டுள்ளது.

எழுக இந்தியா திட்டம் என்பது, பெண்களும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரும் புதிய தொழில் முனைவோராக ஆவதற்கு ஊக்கம் அளிக்கும் திட்டமாகும். இவர்களுக்கு பத்து லட்ச ரூபாய் முதல், ஒரு கோடி ரூபாய் வரை புதிய தொழில் தொடங்குவதற்காகக் கடன் அளிக்கப்படும். இதனை ஏழாண்டுகள் வரையில் திருப்பிச் செலுத்தலாம். ஆன்லைன் வாணிகம், மின்னணு வியாபாரத்தலம் போன்றவற்றில் இவர்கள் ஈடுபடுத்தவும் இத்திட்டம் ஊக்குவிக்கிறது.

**இளைஞர் சக்தி:**

தொழில் மயமாகி விட்ட நாடுகளில் அடுத்த இருபது ஆண்டுகளில் வேலை செய்யும் திறனுடைய மக்களின் எண்ணிக்கை சுமார் நான்கு சதவீதம் குறைந்துவிடும் என்று கூறுகின்றனர். அதே சமயத்தில் இந்தியாவின் மக்கள் தொகையில் வேலை செய்யும் திறனுடையவர்களின் எண்ணிக்கை 32 சதவீதம் அதிகரிக்கும். எனவே, இந்த மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, நமது இளைஞர்களுக்குத் தரமான திறன்பயிற்சிகளை அளிப்பதால், புதிய இந்தியா மலரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பது உறுதி. ●

# ஸ்வச் பாரத் இயக்கம்: ஒவ்வொருவரின் கடமை

- பரமேஸ்வரன் ஐயர்
இந்திய அரசின் குடிநீர் மற்றும் துப்புரவுத்துறை அமைச்சகத்தின் செயலாளர்

ஸ்வச்பாரத் இயக்கம் எனப்படும் தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டு பாதி தூரம் கடந்துள்ள நிலையில், இந்த இயக்கத்தின் செயல்பாடுகளில் வேகம் ஏற்பட்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. செங்கோட்டையில் இருந்து முதல்முறையாக நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர் குறிப்பிட்டது போல் இந்த இயக்கம் படிப்படியாக ஒரு மக்கள் இயக்கமாக மாறிவிட்டது. கடந்த 2014 அக்டோபர் மாதம் இந்த திட்டம் தொடங்கப்பட்டது முதல், நாட்டின் கிராமப்புறங்களில் துப்புரவு உள்ளடக்கம் 42% முதல் 63 சதவிகிதமாக அதிகரித்திருப்பதுடன், இந்திய கிராமப்புறங்களில் திறந்த வெளியில் இயற்கை உபாதையைக் கழிப்பவர்களின் எண்ணிக்கை 550 மில்லியனில் இருந்து 330 மில்லியனாக குறைந்திருப்பதுடன், 190,000 கிராமங்கள், 130 மாவட்டங்கள் மற்றும் மூன்று மாநிலங்கள் திறந்தவெளி கழிப்பிடங்கள் அற்றவையாக மாறியுள்ளன. 2019 அக்டோபர் 2ஆம் தேதி திறந்தவெளி கழிப்பிடங்கள் அற்ற இந்தியா என்ற நிலையை அடையும் வகையில் இந்தத் திட்டம் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

துப்புரவுக்கு முன்னுரிமை அளிப்பது பல்வேறு காரணங்களால் முக்கியமாகிறது. ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் வயிற்றுப் போக்கு பாதிப்பால் அவதிப்படுவதற்கு போதிய கழிவறைகள் இல்லாததே காரணமாக அமைந்து, அதனால் குழந்தைகள் மனங்குன்றி போவதுடன் தவிர்க்கக்கூடிய பல்வேறு குழந்தைகள் மரணத்துக்கும் காரணமாக அமைகிறது. துப்புரவு என்பது பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். ஒரு பெரும் பொருளாதாரமாகத் திகழ பல்வேறு போராட்டங்களை நடத்தி வரும் இந்தியா, அதற்காக திறந்தவெளிக் கழிப்பிடங்களை அகற்றுவது முக்கியமானதாக உள்ளது.

முந்தைய துப்புரவுத் திட்டங்களைப் போல் இன்றி தூய்மை இந்தியா இயக்கம் என்பது வெறும் கழிவறை கட்டும் திட்டமாக மட்டுமல்லாமல், மக்களின் பழக்க வழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு திட்டமாகும். சாலை போடுவது, பாலம் கட்டுவது அல்லது விமான நிலையம் அமைப்பது போன்ற பணிகள் மனிதர்களின் பழக்க வழக்கத்தை மாற்றுவதற்கான முயற்சியுடன் ஒப்பிடுகையில் எளிதான பணியாகவே இருக்கும். 50 கோடிக்கும் அதிகமான மக்கள் பிறந்தது முதல் தங்களது வாழ்நாள் முழுவதும் செய்து வரும் ஒரு பழக்கமான திறந்த வெளியில் கழிப்பதை விட்டு விட்டு அவர்கள் கழிவறைகளை பயன்படுத்த வேண்டும் என்று கூறி அவர்களை சம்மதிக்க வைப்பது ஒரு இமாலயப் பணியாகும். மக்களை சென்றடைவதற்கான ஊடக இயக்கங்கள் பயன் தரக்கூடியவை என்ற போதிலும், அடிமட்டத்தில் பழக்க வழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது பயிற்சி பெற்ற ஊக்கம் பெற்ற நபர்களின் தனிப்பட்ட முறையிலான கலந்துரையாடல்கள் மூலம் மட்டுமே சாத்தியமாகும். நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள் இத்தகைய ஊக்கமளிக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்ற போதிலும் இது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதுடன், நாடு முழுவதும் ஒரு கிராமத்திற்கு ஒருவர் என்ற அளவிலாவது இது இருக்க வேண்டும்.

தூய்மை இந்தியா இயக்கம் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு திறன் மேம்பாடு, மனித ஆதாரங்கள், பழக்க வழக்க மாற்றத்திற்கான தொடர்பு, அறிவாற்றல் பகிர்வு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு உள்ளிட்டவை மூலம் மாநில அரசுகளுக்கு குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் ஆதரவு அளித்து வருகிறது. சிறந்த நடைமுறைகளை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்கள் பகிர்ந்து கொள்ள, பல்வேறு இடங்களில் உள்ள நூற்றுக்கணக்கான கண்காணிப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்க இணைய வகுப்புகள் ஆகியவற்றுக்காக ஸ்வச்சங்கரஹ் எனப்படும் தூய்மை இந்தியா இயக்கத்திற்கான இணையதளம் போன்ற முயற்சிகள் இத்திட்டத்தில் தொழில்நுட்பம் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும். மேலும் ஒருவரிடம் இருந்து மற்றவர் கற்றுக்கொள்ளவும், ஊக்கமளிக்கவும் பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான பயிலரங்குகளும், நிகழ்ச்சிகளும் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. உள்ளாட்சி நிர்வாகிகள், குறிப்பாக பெண்

நிர்வாகிகள் போன்ற அடிமட்ட பிரமுகர்கள் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதில் கூடுதல் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.சமீபத்தில் மகளிர் தினத்தன்று மார்ச் 8ஆம் தேதி அன்று நிறைவடைந்த ஸ்வச் சக்தி நிகழ்ச்சியில், இந்தியா முழுவதிலிருந்தும் மகளிர் உள்ளாட்சி நிர்வாகிகளை ஒன்றாகக் கொண்டு வரப்பட்டு ஸ்வச் பாரத் இயக்கத்தின் வெற்றி கொண்டாடப்பட்டது. காந்திநகரில் கூடியிருந்தவர்களிடையே பேசிய பிரதமர், ஸ்வச் பாரத் இயக்கம் மற்றும் இதர முன்னோடி திட்டங்களான பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ போன்றவற்றிலும் பெண் உள்ளாட்சி நிர்வாகிகளின் முன்னிலைப் பங்களிப்பைப் போற்றினார். தங்கள் சமூக உறுப்பினர்களுக்கு ஊக்கமளித்த மகளிர் ஸ்வச் சாம்பியன்களுக்கு அவர் விருதுகளையும் வழங்கினார்.

ஸ்வச் பாரத் இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுவதுடன், கழிப்பறைத் தொழில்நுட்பம் மற்றும் நடைமுறைகளை மாற்றி அமைக்க வேண்டியதும் முக்கியமாகும். செலவும் மறுபயன்பாடு மற்றும் நீடித்திருப்பது ஆகியவற்றில் கிராமப்புறப் பகுதிகளுக்கு இரட்டை குழி மாதிரி ஏற்ற தொழில்நுட்பமாக இருக்கும். கிராமப்புற இந்தியாவில் இந்த மாதிரி முன்னுதாரமாக உள்ளது என்ற போதிலும், இதனை கிராமப்புற வீடுகள் ஏற்றுக்கொள்வதற்கு அதிக சந்தைப்படுத்துதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இரட்டைக் கழிப்பறை தொட்டியில் ஒன்று முழுமையடையும் போது அதை வீட்டிலிருப்பவரே காலி செய்வது எளிமையான, பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பணியாகும். இது விவசாயப் பணிகளுக்கு இயற்கை உரமாகவும் மாறும். மூத்த அதிகாரிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கழிவறைத் தொட்டிகளை அவர்கள் தாங்களே சுத்தம் செய்யும் போது அது மற்றவர்களுக்கு உதாரணமாக ஆகி, வீட்டிலிருப்பவர்கள் தாங்களே சுத்தம் செய்ய ஊக்கமளிக்கும் என்பதுடன், இந்தத் தொழில்நுட்பம் விரைவாக ஏற்றுக்கொள்ளவும் வழி ஏற்படும்.

பழக்க வழக்க மாற்றம் மற்றும் உரிய தொழில்நுட்ப முறைகள் கடைப்பிடிக்கப்படுவதுடன் தூய்மை என்பது ஒவ்வொரு தனிப்பட்ட கடமையாக வேண்டும். இதில் தனியார் உள்ளிட்ட அனைத்து துறைகளும் ஈடுபாடு காட்ட வேண்டும். தனியார் பங்களிப்பு அதிகரிப்பதை எடுத்துக்காட்டும் வகையில் டாடா டிரஸ்ட் நிறுவனம் மாவட்டம் ஒன்றுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் 600 பேரை நியமித்து அவர்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. பிரதமரின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பொதுத் துறையும் செயல்படுகிறது. இருவாரங்களுக்கு ஒருமுறை தூய்மை இருவாரம் கொண்டாடப்படுவதுடன், ஒவ்வொரு மத்திய அமைச்சகமும் தூய்மைக்கான செயல் திட்டத்தை உருவாக்கி அதற்கு நிதி ஒதுக்கீடும் செய்து வருகிறது. 2017-18இல் தூய்மைப் பணிகளுக்காக அனைத்து அமைச்சகங்களும் இணைந்து தூய்மை தொடர்பான பணிகளுக்காக ரூ. 5000 கோடி செலவிட திட்டமிட்டுள்ளன. பொற்கோயில், திருமலை திருப்பதி கோயில் போன்ற முக்கியமான இடங்களைத் தூய்மைப்படுத்த பணிகள் நடத்தப்பட்டு வருவது அனைத்து துறைகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு உதாரணமாகும்.

தூய்மைப் பணியின் முடிவுகளை ஆய்வு செய்வதும் அவற்றைத் தக்க வைத்துக் கொள்வதும் இந்த இயக்கத்தின் மிகவும் முக்கியமான அம்சமாகும். இது இந்தத் திட்டத்தின் நம்பகத்தன்மைக்கு மிகவும் முக்கியமானதாகும். தற்போது மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் மூன்றாவது நபர் ஆய்வு முறை பின்பற்றப்பட்டு வருகிறது. வரும் காலங்களில் இந்த முயற்சிகள் வலுப்படுத்தப்பட வேண்டும். திறந்தவெளிக் கழிப்பிடங்கள் நீக்கப்படுவது நீடிக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாகும். இதனை அடைவது முக்கியம் என்ற போதிலும் இது உள்ளூர் நுணுக்கங்கள் மற்றும் ஊக்கங்கள் மூலம் நீட்டிக்கப்பட வேண்டும் என்பது மற்றொரு முக்கியமான தேவையாகும்.

திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை என்பதும் இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாகும். திறந்தவெளிக் கழிப்பிடங்கள் இல்லை எனற மாநிலங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். கிராமத்தூய்மைக்கான குறியீடு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கிராம மக்கள் தாங்களாகவே குறிஈட்டை நிர்ணயித்துக்கொள்வார்கள்.

ஸ்வச் பாரத் இயக்கம் பாதி நிலையை அடைந்துள்ள போதிலும் மத்தியிலும் மாநிலத்திலும் உள்ள குழுக்கள் இன்னும் கடக்க வேண்டிய தொலைவு மற்றும் சவால்கள் அதிகம் என்பதை உணர்ந்துள்ளனர். பிரதமரின் தலைமையில் அரசியல் கட்சித் தலைவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் முக்கியமாக அடிமட்டத்தில் உள்ள உள்ளாட்சி நிர்வாகிகள் குறிப்பாக மகளிர் உள்ளாட்சி நிர்வாகிகள் ஆதரவுடன் இந்த மாபெரும் மக்கள் இயக்கம் நாடு தழுவிய அளவில் பெரும் வெற்றியைப் பெறும் என்ற தெளிவான உணர்வு காணப்படுகிறது.

●

# நேர்மையான, வெளிப்படையான பொருளாதாரத்தை நோக்கி

- M.V. பானுமதி - இந்திய வருவாய் சேவைத் துறையின் மூத்த அதிகாரி, வருமான வரித்துறை (புலனாய்வு) பிரிவின் முதன்மை இயக்குநர் - புதுதில்லி

- ரோஹித் தியோ ஜா - இந்திய வருவாய் சேவைத் துறையின் அதிகாரி, வருமான வரித்துறை (புலனாய்வு) பிரிவின் உதவி இயக்குநர் - புதுதில்லி

ஒரு வளமான ஆளுநர் தன்னுடைய நாட்டை சிறப்பாக ஆளுவார். மக்களுக்கு நலப்பணிகளை மேற்கொண்டு, பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பார். அதனால், விரைவில் மக்களும் வளம் பெறுவர் சாணக்கியர்.

ஐக்கிய நாடுகள், மனித வள மேம்பாட்டுக் குறியீட்டில் இந்தியாவின் நிலைமை மிகவும் தாழ்மையாகவே உள்ளது. மக்களும் பெரும்பாலும் ஏழைகளாகவே இருந்தனர். கடந்த ஆண்டு (HDI – 2014) அது, 188 நாடுகளில் 131ஆக இருந்தது.

ஆனால், தற்போது, சீர்திருத்தங்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவும், இதுவரை பொருளாதார வளர்ச்சியில் பயனடையாதவர்களுக்கு பயன்களை அளிக்கவும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முக்கிய தூண்களாக அனைவரையும் உள்ளடக்கிய மேம்பாடு, வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்பாட்டை பரவலாக்குவது ஆகியவையாகும். இப்படி இந்த மூன்று தூண்களையும் சிறப்பாக செயல்படுத்துவதன் மூலம், முதன்முறையாக பலன்கள் மக்களுக்கு நேரடியாக சென்றடைய உள்ளது.

இந்த மூன்று பிரிவுகளில் எல்லோரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு வெளிப்படைத்தன்மை மிகவும் முக்கிய நிலைமையாகும். நம் நாட்டில் எவ்வளவு நல்ல திட்டங்கள் இருந்திருந்தாலும் லஞ்சத்தால் அவை அனைத்தும் பாழாயின. லஞ்சத்தால், கருப்புப்பண புழக்கம் ஏற்பட்டு மக்கள் நலப்பணிகள் பாதிக்கப்படுகின்றன. அரசுக்கு வரும் வருமானம் தடைபட்டு, அது நல்ல திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளது. பொருளாதார மேம்பாட்டுக்கு வேண்டிய அந்நிய முதலீட்டையும், தொழில்நுட்பத்தையும் அது பாதிக்கிறது. இதனால், புதிய வேலைகளை உருவாக்குவது, தடைபட்டு, இளைஞர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

உலக வங்கியின்படி வளரும் நாடுகளுக்கு லஞ்சமே முதல் எதிரி. இதனால், ஏழை மக்கள்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு இந்தியா ஒரு விதி விலக்கல்ல.

நல்ல வேளையாக தற்போதைய அரசு, கருப்புப்பணத்திற்கு எதிராக மிகப்பெரிய போரைத் தொடர்ந்ததோடு, ஏழை மக்கள் லஞ்சத்தால் பாதிக்கப்படாத வண்ணம் அரசு விநியோக முறைகளில் புதிய உத்திகளை கையாண்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள், இந்த கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ளன.

### சுத்தமான பொருளாதாரத்தை நோக்கி

இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வரிகளின் பங்கு 16.6 சதவிகிதம் மட்டுமே. மொத்தம் உள்ள 5.5 கோடி வரி செலுத்துபவர்களில் நிறுவனங்கள், தனியார் மற்றும் இதர வியாபார அமைப்புகள் உள்ளன. 201617 பொருளாதார ஆய்வறிக்கையின்படி 100 வாக்காளர்களில் 7 பேர் மட்டுமே வரி செலுத்துகிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் 1.25 கோடி மோட்டார் கார்கள் விற்பனை செய்யப்பட்ட நிலையிலும், 2015ல் மட்டும் 2 கோடி மக்களுக்கும் மேல் வெளிநாடுகளுக்கு சென்றுள்ள நிலையில் 1.72 லட்சம் பேர் மட்டுமே 50 லட்சத்துக்கும் மேலான வருமானத்தை வரிக்காக காட்டியுள்ளனர் என்பது எந்த அளவுக்கு வரி ஏய்ப்பு நடக்கிறது என்பதை விளக்குகிறது.

வரி ஏய்ப்பு மூலம் உருவாகும் கருப்புப் பணம் ஒரு பொருளாதார சவாலாக மட்டும் இல்லாமல் அது ஒரு சமூக பிரச்சினையாகவும் உள்ளது. அது, லஞ் சத்தை ஊக்குவித்து, தேர்தல்களில் ஊழல்களை உருவாக்கி, பல குற்றங்களுக்கு வித்திட்டு ஆடம்பரமான வாழ்க்கையையும் ஏற்படுத்தி, பொருளாதார திட்டமிடுதலையும் நாட்டின் நிதி நேர்மையையும் குலைக்கிறது. மொத்தத்தில், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி நாட்டின் சமூக அடிப்படையையே பாதிக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கருப்புப் பணத்திற்கு எதிரான ஒரு போரைப் போலவே, அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது, சட்டமன்றங்கள், நிர்வாக முயற்சிகள் ஆகியவைகள் சிறப்பான செயல்களை திறன் வளர்ப்பு மற்றும் தகவல்களின் அடிப்படையில், கண்காணிப்பு முறைகள் ஆகியவைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளின் அடிப்படையிலான சீர்திருத்தங்களாகும்.

**சுத்தமான பொருளாதாரத்திற்கான வரிகள் மேலாண்மை**

| |
|---|
| • கருப்புப் பணத்தை ஒழிக்க கீழ்க்கண்ட புதுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கருப்புப்பணம் பற்றி விசாரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி M.B. ஷா தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைப்பு. |
| • கருப்புப் பணத்தையும், வெளிநாட்டில் பதுக்கப்பட்டுள்ள பணத்தையும் கொண்டுவர மூன்று முதல் பத்து ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை போன்ற கடுமையான தண்டனைகள் கொண்ட “கருப்புப் பணம் (தெரிவிக்கப்படாத அந்நிய வருமானம் மற்றும் சொத்துக்கள்) மற்றும் வரிவிதிப்பு சட்டம் 2015 இயற்றப்பட்டுள்ளது. முறையற்ற பண பரிமாற்றம் தடுப்பு சட்டம் (PMLA)ன் படி வரி ஏய்ப்பு ஒரு சீரிய குற்றமாக கருதப்படுகிறது. |
| • பல கஷ்டங்களுக்கு பின்னும் இந்தியர்கள் வெளிநாட்டு வங்கிகளில் சட்டப்படி இல்லாமல் வைத்திருந்த ரூ.8186 கோடி வரி அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. |
| • பனாமா பேப்பர் கசிவுகள் சம்மந்தப்பட்ட வழக்குகளை விரைவாக விசாரணை செய்ய பலமுனை அமைப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. |
| • இரண்டு நாடுகளில் வரி செலுத்த வேண்டாதபடி மற்ற நாடுகளோடு ஒப்பந்தங்கள், வரி சார்ந்த தகவல் பரிமாற்றம், பல நாடுகளுடனான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கருப்புப் பணத்திற்கு எதிரான உலகளவிலான முயற்சிகளுக்கான உடனடியாக தகவல் பெறுவதற்கான பன்னாட்டு சிறப்பு அமைப்புகளோடு ஒப்பந்தங்கள். |
| • அமெரிக்காவின் வெளிநாட்டு கணக்குகள், வரி சட்டத்தின் அடிப்படையில் அந்நாட்டுடன் தகவல் பரிமாற்றத்திற்கான ஒப்பந்தங்கள். மொரிஷியஸ், சிங்கப்பூர் மற்றும் சைப்ரஸ் நாடுகளில் இரு நாட்டில் வரி செலுத்த வேண்டாத நிலை சார்ந்த ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதனால், இந்த ஒப்பந்தங்களை தவறாக பயன்படுத்தி வரிகளை ஏய்ப்பது தடுக்கப்பட்டுள்ளது. |
| • கருப்புப் பணத்திற்கான சிறப்பு புலனாய்வுக் குழு பங்குபெறும் பத்திரங்கள், அந்நிய முதலீட்டை பெற வழி செய்தாலும் கருப்புப் பணத்தை புழக்கத்திற்கு விட அது பயன்படுத்தப்படுகிறது என்று கூறுகிறது. இதனைக் கட்டுப்படுத்த செபி அமைப்பு பல தகவல் வெளியீடுகளை நிர்ணயித்துள்ளது. இதனால், பங்குபெறும் பத்திரங்கள் மூலம் கருப்புப் பண பரிமாற்றம் தடுக்கப்பட்டுள்ளது. பினாமி பரிவர்த்தனைகள் (தடை திருத்தச் சட்டம்) 2016 இயற்றப்பட்டு இதனால் மற்றவர்கள் பெயரிலேயோ கற்பனை பெயரிலேயோ பினாமி பெயரிலேயோ உள்ள சொத்துக்களை எந்தவொரு இழப்பீடும் கொடுக்காமல் அரசு எடுத்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின்படி ஒருவருக்கு 7 ஆண்டு சிறை தண்டனை அளிக்க முடியும். வருவாய் துறையின்படி இதுவரை, 245க்கு மேற்பட்ட பினாமி பரிவர்த்தனைகள் கண்டறியப்பட்டு முதல் கட்ட சொத்து மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 124 வழக்குகளில் இதன் மதிப்பு ரூ.55 கோடியாகும். |
| • இதுவரை, 23064 சோதனைகள், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருமான வரி 17525, சுங்க வரி 2509, மத்திய கலால் வரி 1913, சேவை வரி 1120. இதனால், ரூ.1.37 லட்சம் கோடி (வருமான வரி 69434; சுங்கவரி 11,405 மத்திய கலால் வரி 13,952, சேவை வரி 42727) |
| • 2814 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு 3893 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். |
| • அமலாக்க இயக்குநரகம் 519 வழக்குகளை பதிவு செய்து 396 சோதனைகளை மேற்கொண்டு, 79 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ரூ.14933 கோடி அளவு சொத்துக்களுக்கு பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| • வருமான தெரிவிப்பு திட்டம் 2017ன் கீழ் 64,275 பேர் ரூ.65,250 கோடி வரையிலான வருமானத்தை தெரிவு செய்துள்ளனர். இதனால், உள் நாட்டில் கருப்புப் பணம் சேமித்து வைத்திருப்பவர்கள், குற்றங்களை ஒப்புக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. |

## பட்ஜெட் 2017-18 மாற்றியமை, ஆற்றல் அளி மற்றும் சுத்தமான இந்தியா

| |
|---|
| கருப்புப் பணத்திற்கு எதிரான போரை முன் நடத்தி, நிதியமைச்சர் கீழ்க்கண்ட முக்கிய சீர்திருத்தங்களை அறிவித்திருக்கிறார்: |
| • வியாபாரங்களில் பண பரிவர்;த்தனை மூலம் செய்யப்படும் செலவுகளின் உயர் அளவு ரூ.10,000மாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| • அறக்கட்டளைகள் தனி ஒரு மூலத்திடமிருந்து ரூ.2,000 வரைதான் காசாக நன்கொடைகளை பெற முடியும். 2000க்கு மேற்பட்ட எந்தவொரு செலவையும் பண பரிவர்த்தனையாக செய்ய முடியாது. அப்படி செய்தால் அதற்கு இணையான, பெனால்டி விதிக்கப்படும். |
| • கருப்புப்பணம் எளிதாக புழங்கும் ஆரம்ப விவசாய, கடன் வழங்கு சொசைட்டிகளை கணிணிமயமாக்கி அவைகளை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் அடிப்படை வங்கி செயல்பாட்டுடன் இணைத்தது. நீண்டகால முதலீட்டு லாப வரிக்கான விலக்கு பங்குகள் பரிவர்த்தனை சட்டம் செலுத்தியவர்களுக்கு மட்டுமே பொருந்தும். (இது அல்லாமல், பொது நிதி வழங்கு உண்மையான நிகழ்வுகளுக்கும் பொருந்தும்.) இதனால், போலி பரிவர்த்தனைகள் மூலம் வரி ஏய்ப்பது தடுக்கப்படும். |
| • பொருளாதார மற்றும் பிற குற்றங்கள் செய்தவர்கள் இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு தப்பி ஓடியவர்கள், இந்திய சட்டங்களுக்கு உட்படும் வரையில் அவர்களுடைய சொத்துக்களை முடக்க சட்டம் தெரிவுபடுத்தப்பட்டுள்ளது. |
| • வருமான வரி படிவங்களை சமர்ப்பிக்கவும், PAN அட்டைகளை பெறுவதற்கும், தக்க வைப்பதற்கும், ஆதார் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால், பல PAN எண்களை வைத்திருப்பது தவிர்க்கப்பட்டு, வங்கிகளில் வாடிக்கையாளர்களை அறிந்து கொள்ளும் முறைகள் வலுவாக்கப்பட்டுள்ளன. |
| • நேர்மையாக வரி செலுத்துபவர்களுக்கு வெகுமதிகள். |

அரசு வரியின் அடித்தளத்தை அதிகரித்து அதனால், எதிர்பார்க்கக் கூடிய ஸ்திரமான வரி அமைப்பை உருவாக்கி அதனை முதலிடுபவர்களுக்கு ஏதுவாகவும், வளர்ச்சியை உருவாக்க நினைக்கிறது. சிறந்த வரி நிர்வாகத்திற்கான சில முக்கியமான முயற்சிகளும், கொள்கை மாற்றங்களும் பின் வருவன:

| |
|---|
| • கடந்த காலங்களுக்கான நிலைமைகளுக்கு வரி விதிக்கக்கூடிய அரசு அதிகாரத்தை இழந்து விடாமல், இந்த திட்டம் மிகவும் கண்காணிப்போடும், நியாயமாகவும் செயல்படுத்தப்படும் என்று தெளிவுபடுத்தியுள்ளது. |
| • ஏழு நகரங்களில் வலைதளம்சார் வரி நிவர்த்தி முறைகள் செயல்படுத்தப்பட்டு வரி செலுத்துபவரும், துறையும் நேரடியாக சந்திக்க வேண்டாத நிலையில் செலவும், நேரமும் குறைக்கப்பட்டுள்ளது. |
| • வருமான வரி செலுத்துபவர் ஒருவரின் படிவத்தை சோதிக்கும் போது, சிறிதளவு வருமான வரி செலுத்துபவர்கள் அதிகம் பாதிக்கப்படாத வண்ணம், வலைதளம் மூலம் தீர்வு காண 2015ல் இசஹயோக் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. |
| • தொழில் மற்றும் வர்த்தக துறையோடு, தொடர்பு கொள்ள அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவுக்கு நேர்முக வரிகள் மத்திய வாரியம் மற்றும் கலால் மற்றும் சுங்க வரி மத்திய வாரியம் அவ்வப்போது விளக்கங்களை அளிக்கும். |
| • ஒரு அளவுக்கு மேல் வருமான வரி கட்ட வேண்டிய நிலையில் உள்ள இந்தியா வாழ் வரி செலுத்துபவர்கள் அது பற்றி முன்கூட்டியே தீர்ப்புகளை கேட்டு பெற முடியும். |
| • வருமான வரி செலுத்துவோர் பலரும் வாய்ப்பை பயன்படுத்தும் வண்ணம் வருமான வரித் தீர்வை கமிஷனின் பணிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. |
| • பிரதம மந்திரி அலுவலகம் கண்காணிக்கும் மத்திய பொதுமக்கள் குறைதீர்க்கும் மற்றும் கண்காணிக்கும் அமைப்பும் ''இ நிர்வாண்'' வலைதள சேவையும் அமைக்கப்பட்டு வரி செலுத்துவோரின் குறைகள் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் தீர்க்கப்படும். |
| • சில வருமான வரி செலுத்துபவர்களுக்கு ''சஹஜ்'' என்ற எளிதான வருமான வரி கணக்கு தெரிவிக்கும் படிவம். ஒரே பக்கத்தில். |
| • மக்கள் எல்லோரும் வரி செலுத்துகிறார்களா என்பதை ஆராய மக்களுக்கு தொல்லை கொடுக்காமல் தகவல் சேகரிக்கும் ''ப்ராஜக்ட் இன்சைட்'' என்ற திட்டத்தை வருமான வரித்துறை செயல்படுத்த உள்ளது. |

## ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகாமை

ரூபாய் 500 மற்றும் ரூபாய் 1000 நோட்டுக்கள் செல்லுபடியாகாது என்ற அறிவிப்பினால் வரி ஏய்ப்பு மிகவும் பிரச்சினைகளை உருவாக்கும் என்ற நிலைமையும் லஞ்சத்தின் அடிப்படையையும் பாதித்துள்ளது. இந்த திட்டத்தினால், பிற நன்மைகளாக போலி ரூபாய் நோட்டுக்கள் ஒழிப்பு, பொருளாதாரத்தை மேன்மேலும் மின்மயமாக்கல். நிதி சேமிப்பு அதிகரிப்பு மற்றும் பொருளாதாரத்தை மேலும் முறைப்படுத்தி அதனால், உள் நாட்டு மொத்த உற்பத்தி அளவு அதிகரிக்கவும், மக்கள் வரிகளை நேர்மையாக செலுத்தவும் வரிகளின் வரவு உயரவும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகாது என்று அறிவித்ததற்கு பின்பு, கிட்டத்தட்ட புழக்கத்திலிருந்த அனைத்துப் பணமும் வங்கிகளில் செலுத்தப் பட்டுள்ளதால், அரசின் கண்காணிப்பு அமைப்புகள், பண போக்குவரத்தை ஆராயமுடியும். செலுத்தப்பட்ட பணத்தைப் பற்றி விசாரணை செய்த போது, பல மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் சில விற்பனை தேதியை முன் தேதிக்கு பதிவு செய்தல், மற்றவர்கள் பெயரில் பணத்தை வங்கிகளில் செலுத்துதல். அடையாளம் இல்லாத நபர்களுக்கு பேன் நம்பர் பதிவு செய்யாமல் நகை, தங்கம், வெள்ளி, கரன்சி உயர்மதிப்பு பொருட்கள் விற்பனை, பேன் பதிவு செய்வதை தவிர்ப்பதற்காக, விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பை பங்கீடு செய்வதும் வாடிக்கையாளர்கள் பற்றிய முழுமையான விவரங்கள் வைத்திராத கூட்டுறவு வங்கிகளில் பணத்தை செலுத்துவது, ஒரே பேன் நம்பரில் பல கணக்குகளில் பணத்தை செலுத்துவது ஆகியவையாகும்.

ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகாது என்று அறிவித்ததற்கு பின்பு 1.09 கோடி கணக்குகளில் ரூ.5.48 லட்சம் கோடி அளவிற்கு ரூ.2 லட்சம் முதல் ரூ.80 லட்சம் வரை வங்கிக் கணக்குகளில் பணம் செலுத்தப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில், 1.48 லட்சம் கணக்குகளில் மட்டும் ரூ.80 லட்சத்திற்கும் மேல் செலுத்தப்பட்ட தொகையான ரூ.4.89 லட்சம் கோடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நிதி நிலைமையை சுத்தப்படுத்தும் திட்டத்தின் ஒரு அங்கமாக வருமான வரித்துறை முதல் கட்டமாக, 18 லட்சம் பேருக்கு மின்னஞ்சல்களும், கைப்பேசி குறுஞ்செய்திகளையும் அனுப்பியுள்ளது. இந்தத் துறையின் வலைதளம் மூலமாக, 12 லட்சம் கணக்குகளுக்கு பதில் கிடைத்துள்ளன. இதனால், மேலும் புலனாய்வு செய்ய வேண்டாத உண்மையானவர்களை விடுவிக்க இது வருமான வரித்துறைக்கு உதவியாக இருக்கும். ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகாது என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டபின் 1100 சோதனைகள் செய்யப்பட்டதில் ரூ.600 கோடி வரை பணமாகவோ, உயர் மதிப்பு பொருட்களாகவும் வருமான வரித்துறையால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் மாநிலங்கள் அவையில் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் தங்களுடைய வருமானத்தை தெளிவுபடுத்தி, சுத்தப்படுத்திக் கொள்ள ஏதுவாக பிரதம மந்திரி ஏழை மக்கள் நல திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இதன்படி 2017 மார்ச் 31க்குள் ஒருவர், தன்னிடம் உள்ள ரொக்கப்பணத்தை அறிவித்து வங்கிகளில் செலுத்தினால், அவர் அந்தத் தொகையில் 50 சதவிகித வரியை கட்டிவிட்டு தெரிவிக்கப்பட்ட தொகையில் 25 சதவிகிதத்தை வட்டி அல்லாத பிரதம மந்திரி ஏழை மக்கள நல திட்டத்தில் நான்காண்டுகளுக்கு வரவு வைக்க வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியின் தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால், தவறான வழியில் பணம் சேர்த்தவர்கள், அதிலிருந்து வெளிவர ஒரு நல்ல திட்டமாக இது உள்ளது.

## மின்னணு பொருளாதாரம்

பொருளாதாரத்தில் பணப்பயன்பாடு பிரதானமாக இருப்பதால்தான் பெருமளவு வரி ஏய்ப்பு ஏற்படுகிறது. 2015ல் பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸின் அறிக்கையின்படி மொத்த அளவில் எல்லா பரிவர்த்தனைகளிலும் 98 சதவிகிதமும், எல்லா பரிவர்த்தனைகளின் மதிப்பில் 68 சதவிகிதமும் பணமாகவே நடத்தப்படுகிறது என்று தெரிய வருகிறது. ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகாது என்ற அறிவிப்பினால் மின்னணு பரிவர்த்தனைகளுக்கு நல்ல உந்துதல் ஏற்பட்டுள்ளது. மின்னணு பொருளாதாரத்தால், பல பலன்கள் உள்ள நிலையில் அதனால், வெளிப்படைத் தன்மை ஏற்படுகிறது. டிரான்ஸ்பரன்சி இண்டர்நேசனல் என்ற அமைப்பின் ஒரு நாட்டின் ஊழல் நிலைமை தரப்பட்டியலில் உள்ள சிறந்த நாடுகளில் பத்து சதவிகிதம் மட்டுமே பணப் பரிவர்த்தனை ஏற்படுகிறது. இந்த பட்டியலில் இந்தியா 79 இடத்தில் உள்ளது.

நேஷனல் பேமண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா என்ற அமைப்பு ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை மின்னணு வசதியை சிறப்பாக உருவாக்கி உள்ளது; பீம் என்று பெயரிடப்பட்ட இதை 196 லட்சம் மக்கள் பதிவிறக்கம் செய்துள்ளனர். இதோடு ஆதார் பே மூலமும், வலைதளம் மூலம் ஒருவர் மற்றவருக்கும், கடைகளில் பொருட்கள் வாங்கும் போதும், மின்னணு பணப்பரிவர்த்தனை

செய்யலாம். இதனால், விளைந்துள்ள பலன்களை இந்திய ரிசர்வ் வங்கியின் தகவல்களிலிருந்து தெரிய வருகிறது. இப்படிப்பட்ட மின்னணு பரிவர்த்தனைகள் மார்ச் 17ல் 20 சதவிகிதம் உயர்ந்து ரூ.2000 கோடியில் உள்ளது.

மின்னணு பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்க ரூ.2 கோடிக்கும் குறைவாக விற்பனை செய்யும் சிறு மற்றும் நடுத்தர வருமான வரி செலுத்துபவர்களின் பணமற்ற பரிவர்த்தனைகளுக்கு விதிக்கப்படும் அனுமான வரி 8 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இது அல்லாமல், கடைகளில் மின்னணு பணப்பரிமாற்றம் செய்யும் கருவிகளுக்கும் சிறு பண வழங்கு இயந்திரங்களுக்கு மீதான சில வரிகள் விலக்கப்பட்டுள்ளன.

பேனுடன் ஆதார் இணைப்பை கட்டாயமாக்கியுள்ள அரசு அடுத்த கட்டமாக ரூ.50,000க்கும் மேற்பட்ட பணப்பரிவர்த்தனைகளுக்கு ஆதார் பதிவு அவசியம் என்று மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

### பொருள்கள் மற்றும் சேவைகள் வரி (GST)

இந்தியா சுதந்திரமடைந்ததற்குப் பின்பு மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய வரி சீர்திருத்தமான ஜிஎஸ்டி மிகவும் சிக்கலான மறைமுக வரிகள் சூழ்நிலையை எளிதாக்குகிறது. இதனால், ஒருங்கிணைந்த இந்திய சந்தை உருவாக்கப்பட்டு வரி நிர்வாகம் முறைப்படுத்தப்பட்டு, வரி செலுத்துவது அதிகரித்து முதலீடும், வளர்ச்சியும் மிகுந்து அதனால் அரசின் வருவாய் உயரும். இதன்படி, சுங்க வரி தவிர, மத்திய மாநில அரசுகள் விதிக்கும் எல்லா வித மறைமுக வரிகளும் ஒருங்கிணைக்கப்படும். நாடாளுமன்றத்தின் ஜிஎஸ்டி சம்மந்தப்பட்ட நான்கு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டபின் ஜூலை முதல் தேதியிலிருந்து இது செயல்பட வாய்ப்புள்ளது. அதி நவீன ஜிஎஸ்டி தகவல் தொழில்நுட்ப அமைப்பும், வரி ஏய்ப்பவர்களுக்கு கடுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்டுள்ள நிலையில் பின்வரும் ஆண்டுகளில் உள் நாட்டு மொத்த உற்பத்தியில் வரிகளின் பங்கு உயரக்கூடும். இது அல்லாமல், வியாபார பரிவர்த்தனைகள் சரியாக பதிவு செய்யப்படும் போது நேரடி வரிகளும், நேரடி வரி வசூலும் கூடும்.

### தேர்தல் செலவுக்கு அரசு செலவிடும் சீர்திருத்தங்கள்

ஜனநாயக சீர்திருத்தக் கூட்டமைப்பு என்ற அமைப்பின் அறிக்கையின்படி 2004-05 முதல் 2014-15 வரையிலான அரசியல் கட்சிகள் அவைகளின் 69 சதவிகித மொத்த வருமானமாக ரூ.7,833 கோடி அளவிற்கு பெயர் தெரியாதவரிடமிருந்து நிதி பெற்றுள்ளன. தொழில் மற்றும் வியாபாரங்கள் நிறுவனங்கள், அரசியல் கட்சிகளுக்கு நிதி அளிப்பது ஊழலுக்கு வித்திடுகிறது. இதனால், அரசியலுக்கும், வியாபாரத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு அரசியல் வாதிகள் தங்களுக்கு கிடைத்த பணத்திற்கு சலுகைகள் வழங்குவதால் ஜனநாயகமும் மக்களின் உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, நேர்மையான பொருளாதாரம் உருவாவதற்கு அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்படும் நிதி வெளிப்படையாக இருக்க வேண்டும்.

2017 பட்ஜெட்டில் இதற்கான ஒரு சிறு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, ஒரு மூலத்திடமிருந்து அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்படும் பணபரிவர்த்தனையின் உயர் அளவு ரூ.2000ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் அளிக்கும் தொகை பிரபலப்படுத்தப்படாமல் ஆனால், அரசு, அறியும் வகையில் இருக்கும்.

### ஊழலை தவிர்த்து

இந்தியா சுதந்திரமடைந்ததற்கு பிறகு, ஏழை மக்களுக்கு உதவ பல நலதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இதற்கான நலன்களை மக்களுக்கு வழங்கும் போது, லஞ்சமும், கசிவும் ஏற்பட்டு தேவையற்றவர்களுக்கு பணம் போய் சேருகிறது. 201516 நிதியாண்டின் பொருளாதார ஆய்வறிக்கையின்படி இந்தியாவின் மிகப்பெரிய திட்டமான பொது விநியோக திட்டத்தில் சுமார் 40 முதல் 50 சதவிகிதம் வரை பலன்கள் மக்களுக்கு சென்றடையாமல் கசிவு ஏற்படுகிறது. ஆகவே, ஊழலைத் தவிர்க்க, மக்களுக்கான பலன்களின் பணத்தொகையை அவர்களின் வங்கிக் கணக்குகளிலேயே நேரடியாக செலுத்தும் ஒரு புதிய முயற்சியை அரசு மேற்கொண்டுள்ளது. இப்படி நேரடியாக பணம் வழங்குவதற்காக 2014ல் மிகப்பெரிய திட்டம் செயல்படுத்தப்பட்டு ஏழைமக்கள் வங்கிக் கணக்கு துவங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மூன்று திட்டங்களான ஜன்தன் (25.7 கோடி கணக்குகள் துவக்கப்பட்டுள்ளன), ஆதார் (112 கோடி மக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.) மற்றும் கைப்பேசி பணப் பரிமாற்றம் ஆகியவைகளினால், வெளிப்படைத் தன்மைக்கும் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைமைக்கும் நல்ல அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில், 17 அமைச்சகங்களில் 84 திட்டங்களில் நேரடி பலன்பரிவர்த்தனை மூலம் ரூ.50,000 கோடி சேமிக்கப்பட்டுள்ளது. பயன்பெறுபவர்களின் பட்டியலை வலைதளங்களை வெளியிடுவதன் மூலம் மேலும் வெளிப்படைத் தன்மையை கொண்டுவருவது அடுத்த திட்டமாக இருக்கலாம்.

மெகா ஊழல்கள் நடப்பதை தடுக்கும் வகையில் இயற்கை வளங்களை ஒதுக்குவதற்கு

கட்டாய ஏலம் நடத்தப்பட வேண்டும் என்று திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் திருத்தப்பட்டுள்ளது. அரசு அமைச்சகங்கள் / துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தானியங்கி அமைப்புகள் பொருள்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்யும் போது அதனை அரசு வலைதள சந்தை மூலம் மேற்கொள்ளும் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், ஊழலின் ஆணி வேர் அறுக்கப்பட்டு, நாட்டு வளர்ச்சி பணிகளுக்கு ஆதாயங்கள் பெருகும்.

**முடிவுறாத பணிகள்**

சுத்தமான இந்தியாவை உருவாக்க அரசு மேற்கொண்டுள்ள தைரியமான கொள்கை பிடிப்பு நடவடிக்கைகளை நாம் பாராட்டும் அதே நேரத்தில் கீழ்க்கண்ட தொடர் மற்றும் அமைப்பு சார்ந்த தீர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவைகள், உதாரணத்திற்காக மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன, முழுவதுமாக அல்ல.

- சிறப்பான ஊழலற்ற வரி நிர்வாகத்திற்கு எளிதாக்கப்பட்ட வரி சட்டங்களும், செயல்முறைகளும் அடிப்படையாகும். இவைகளை செயல்படுத்தும் போது, தனி ஒருவரின் விருப்பத்திற்கு சாதகமாக இருக்கக் கூடாது. வழக்குகளும் இருக்கக்கூடாது. 201617 பட்ஜெட்டில் தெரிவித்துள்ளதுபடி முதலாவது, அப்பீல் ஆணையத்தின் முன் 3 லட்சம் வரி வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றின் மொத்தத் தொகை ரூ.5.5 லட்சம் கோடிகளாகும்.
- ‘‘சட்ட ரீதியான நபர்’’ என்ற முறை வலுவாக்கப்பட்டு அதில் ஏற்படும் முறைகேடுகள் தவிர்க்கப்பட வேண்டும். நிறுவனங்களுக்கான எளிதாக்கப்பட்ட வரி முறைகளை போலி நிறுவனங்கள் தவறாக பயன்படுத்துகின்றன. ஒரே விலாசத்தில் நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளின் மூலதனம் மிகக்குறைவு. அவற்றில் ஒரு பணியாளரோ, இயக்குனரோ, அல்லது அது கூட அல்லாமலும் இருக்கும். அவர்களுக்கும் எந்த ஆதாரமும் இருக்காது. பல ஆண்டுகளாக அப்படிப்பட்ட போலி நிறுவனங்கள் மிகவும் கட்டமைப்பாக செயல்பட்டு போலி ரசீதுகள், போலியான மூலதன பங்குகள், போலியான கடன்கள் மற்றும் நிதிசார் பரிவர்த்தனைகளை நிகழ்த்தியுள்ளன. ஏராளமான எண்ணிக்கையில் உள்ளதால், அவைகளை கண்டுபிடித்து தற்போதுள்ள ஆதாரங்கள் அமைப்பு முறையில் நிரூபிப்பதும் கடினம். 201314முதல் 201516 வரையிலான கால கட்டத்தில் வருமான வரித்துறை சார்ந்த சோதனைகளை அடுத்து இப்படிப்பட்ட 1155 போலி நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதைச் சாலீந்த 22,000 பயனாளிகள் ரூ.13,300 கோடி போலி பரிவர்த்தனைகளை காட்டியுள்ளனர். ஆனால், இந்த வழக்குகளை நீதி மன்றத்தில் எடுத்துச் சென்ற போது, சுமாரான பலனே கிடைத்துள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட போலியான நிறுவனங்களையும், குற்றங்களையும், போலியான பரிவர்த்தனைகளையும் திட்டமிட்டு செய்யும் குற்றங்களையும் தகுந்த முறையில் விளக்கி அதற்கேற்ற குற்றவியல் சட்டத்தை இயற்ற வேண்டும்.
- வரி செலுத்துபவர்களுக்கும், வரி அலுவலர்களுக்கும் இடையேயான நேரடி உறவுகள் குறைக்கப்பட வேண்டும். குறைந்தபட்ச குறுக்கீடுகள் மட்டும் அனுமதிக்கப்பட்டு அவைகளை உயரதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். இந்த முறையில் கணிணிசார் வருமானவரித்துறை செயலாக்கம் ஒரு நல்ல முயற்சியாகும்.
- பைனான்சியல் ஆக்~ன் டாஸ்க் ஃபோர்ஸ் என்ற பன்னாட்டு அமைப்பில் இந்தியா ஒரு அங்கத்தினர். அதன் பரிந்துரையின்படி, உறுப்பு நாடுகள் தங்களுடைய நிதி நிறுவனங்களுக்கும், அரசியல் பிரபலங்களுக்கும் இடையே உள்ள வியாபார உறவுகளை கணித்து தவறுகள் நேராமல் இருக்க சரியான வழி முறைகளை மேற்கொள்ள வேண்டும்.
- மத்திய மாநில நிலைமைகளில் உள்ள சட்ட செயல்பாடு அமைப்புகளுக்கிடையே பிணையில்லாத ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும்.

**தொடரவேண்டும் முயற்சிகள்**

ஊழலை ஒழிக்கவும், பொருளாதாரத்தை நேர்மையாக்கவும் அரசு மேற்கொண்ட துணிகரமான முயற்சிகள் சிறந்த பலன்களை தந்துள்ளது. இந்த இயக்கம், இதே உற்சாகத்துடனும், சிறந்த செயலாக்கத்துடனும் தொடரப்பட்டால் ஒரு சிறந்த பொருளாதார கட்டமைப்பை உருவாக்கி ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் மிகுந்த பலன்களை வழங்கி, ஏழ்மையை ஒழித்து, பலருக்கு வேலை வாய்ப்பை மேம்படுத்தி, மக்களுடைய திறமைகளை மேம்படுத்த முடியும். இடைப்பட்ட காலத்தில் சில தவிர்க்கமுடியாத தொல்லைகள் ஏற்படலாம். எந்த ஒரு, அர்ப்பணிப்பும் இல்லாமல் எதிலும் வெற்றியடைய முடியாது. இந்த சிறு அர்ப்பணிப்புகள், நேர்மையான, வெளிப்படையான பொருளாதாரத்தை உருவாக்கும். •

# பொது நிதியியலில் மின்னணு முன்னேற்றங்கள் : வளங்களை திறம்பட பயன்படுத்துதல்

- **லேகா சக்ரவர்த்தி** - பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனத்தில் கூடுதல் பேராசிரியர்

- **சமிக்ஷா அகர்வால்** - பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனத்தில் உள்ளுறைவாளர்

சில ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகாது என்று அறிவிக்கப்பட்டபின் இந்தியாவின் உயர்மட்டக் கொள்கை வடிவமைப்பாளர்களுக்கு பொது நிதியியலில் மின்னணு முன்னேற்றங்கள் என்பது இன்றைய முக்கிய நிலையாகக் கருதப்படுகிறது. நிதியியலில் இந்தியா மூன்று மின்னணுசார் முன்னேற்றங்களை மேற்கொண்டுள்ளது. பொருளாதார ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல் மின்னணு நிதிச் சேவைகளை வழங்குவதன் மூலம் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையை அது வெளிப்படுத்துகிறது. அதன்படி நிதியியலில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்னணு முன்னேற்றங்களினால் அரசு பயன்படுத்தும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப உதவி பெறும் பயனாளிகளை துல்லியமாகக் கண்டுபிடிக்க முடிகிறது. அது மட்டுமல்லாமல், போலியான பயனாளிகளை விலக்கி, தவறுகளை சரி செய்து வீணான கசிவுகளை அடைக்க முடிந்தது. இந்தியாவின் நிதியியலில் மின்னணு முன்னேற்றங்கள் ஏற்பட்ட பிறகு ஆரம்பத் தகவல்களின் அடிப்படையில் மக்கள் நலப் பலன்களை அவர்களுக்கு அளிக்கும் திட்டங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிப்பாடு திட்டத்தின் கீழ் 41 சதவிகித பலன் கிடைத்திருக்கிறது. அதைப்போலவே, சமையல் எரிவாயு உதவித் திட்டமான பஹல் திட்டத்தில் 37 சதவிகிதமும் தேசிய சமூக உதவித் திட்டத்தில் 14 சதவிகிதமும் தேசிய கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் 7 சதவிகிதப் பயன்பாடும் கிடைத்துள்ளன. (இந்திய பொருளாதார அறிக்கை 2015-16)

பொது நிதியியலில் மற்றொரு வெற்றிகரமான மின்னணு முன்னேற்றம் பிரதம மந்திரி ஜனதன் திட்டம் ஆகும். பொது மக்கள் ஏராளமானோர், சேமிப்பு வங்கிக் கணக்கை துவங்கியுள்ளதன் மூலம் உண்மையான பயனாளிகளுக்குப் பணம் போய்ச் சேரும் வகையில் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி சார் நிலைமை உருவாகி உள்ளது.

மற்றொரு முயற்சியாக, ஆதார் அட்டைகளைக் கூறலாம். அதன்படி ஒவ்வொருவருக்கும் தனித்துவமான வலைதளம் சார் அடையாளம் அளிக்கப்பட்டு சேவைச் செயல்பாடுகள் எளிதாகும் வண்ணம் அவர்களுடைய வங்கிக் கணக்குகளும், கைப்பேசி எண்களும் இதோடு சேர்க்கப்பட்டுள்ளன. கைப்பேசி மூலம் வேகமாக பணப்பரிமாற்றம் செய்வதன் மூலம் வங்கிகளின் சேவைகளை பெருக்குவதற்கு வேண்டிய முயற்சிகளுக்கும் உற்சாகம் அளிக்கப்பட்டுள்ளது. ஜனதன் வங்கிக் கணக்குகள், ஆதார் அட்டைகள் மற்றும் கைப்பேசி மூலம் வங்கிசார் சேவைகளை மேற்கொள்வதன் மூலம் இந்தியா மின்னணுப் புரட்சியில் ஒரு படி மேலே சென்றுள்ளது.

இப்படிப்பட்ட நிதியியல்சார் மின்னணு முன்னேற்றங்கள் கென்யாவில் ஏற்பட்டுள்ளன. அங்கு, மின்னணு சூழ்நிலைகளுக்கு ஏற்ப எந்த அளவுக்கு நிதி நிறுவனங்கள், முன்னேறி உள்ளன என்பதும் மேல்மட்ட அளவில் ஆராயப்பட்டுள்ளது. கென்யா நாட்டில் "நிதி கிடைக்கும் மையங்கள்" ஐந்து கிலோமீட்டர் தொலைவிற்குள்ளாகவே பெரும்பாலும் உள்ளன. கென்யாவில், கைப்பேசி மூலம், பணப்பரிவர்த்தனைகள் செய்வது பெரிதும் முன்னேறி உள்ளது - பத்தே ஆண்டுகளில் பூஜ்ஜியம் நிலைமையிலிருந்து வயது வந்தவர்களின் எண்ணிக்கையில் 75 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. (Ndung'uNjuguna, Armando Morales, and Lydia Ndirangu2016)[2]

உலகளாவிய அனுபவத்தைப் பயன்படுத்திய இந்தியா வளங்களை திறம்பட பயன்படுத்த ஜன்தன், ஆதார் மற்றும் கைப்பேசிசார் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக மானியங்களை மக்களுக்கு வழங்குவதில் இந்தியச் சூழ்நிலையில் திறமற்ற நிலையில் கசிவுகளும், போலியான பயன்பாட்டாளர்களும் காணப்படுகிறார்கள். உதாரணமாக, பொது விநியோகப் பொருட்கள் வழங்குதலில் பல தவறுகள் ஏற்படுகின்றன. அங்கு போலியான பயனாளிகள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதைப் போலவே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்திலும்

லேகா சக்ரவர்த்தி, பொது நிதியியல் மற்றும் கொள்கைக்கழகத்தின் கூடுதல் பேராசிரியர் சமிக்ஷா அகர்வால், இக்கழகத்தின் உதவிப்பேராசிரியர்

செயல்பாடுகளில் பல குறைகள் உள்ளன. சமையல் எரிவாயு மானியத்தை எடுத்துக் கொண்டால் மக்கட்தொகையில் மேல்மட்டத்தில் உள்ள 20 சதவிகித மக்களுக்கு 60 சதவிகித மானியம் நேரடியாகக் கிடைத்துள்ளது. அடித்தளத்திலுள்ள 50 சதகிவித மக்களுக்கு 8 சதவிகிதம்தான் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.[3] (நிலைத்து நிற்கும் மேம்பாடுசார் பன்னாட்டுக் கழகம் 2014) இந்த பிரச்சினைகளை சமாளிக்க செயல்பாடுகளை மின்னணுமயமாக்குவதுதான் சரியான தீர்வாக இருக்கும்.

ஆதார் சார்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட பணம் வழங்கும் அமைப்பை ஏற்படுத்தி மானியங்களை ஏழை மக்களுக்குத் திறம்படவும், குறைந்த செலவிலும் வழங்க 2011ல் நிலே கணி பணிக்குழு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழு, மானியங்கள் மக்களுக்கு நேரடியாக பணமாக மாற்றப்பட வேண்டும் என்று கூறியது. அதனை அடுத்து அதற்கான சிறந்த வழிமுறையை உருவாக்குமாறு அதற்கு பொறுப்பு அளிக்கப்பட்டது.[4] 2012இல் தேசிய பொது நிதியியல் மற்றும் கொள்கைக் கழகம் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி பொது விநியோகத் திட்டத்தில் பயனாளிகள் ஆதாரோடு இணைக்கப்பட்டபின் அவர்களுக்கு வழங்கப்படும் பயன்கள் உறுதி செய்யப்படும் என்று கூறியது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கூலித்தொகை ஆதார் மூலம் செயல்படுத்தப்பட்டால் ஐந்து சதவிகித கசிவுகள் தவிர்க்கப்பட முடியும். (தேசிய பொது நிதியியல் மற்றும் கொள்கைக் கழகம் 2012) ஆனால், அடிப்படை அடையாளத் தகவல்கள், சரியாக இல்லாவிட்டால் குற்றங்களும், மோசடிகளும் மேற்கொள்ளப்பட வாய்ப்பு உள்ளது என்று சரஃப் ஆகியோர் (2016) கூறுகின்றனர்.

சமீபத்திய பொருளாதார ஆய்வின்படி 2015இல் வாரத்திற்கு நான்கு மில்லியன் அட்டைகள் என 210 மில்லியன் ஆதார் அட்டைகள் உருவாக்கப்பட்டன. இது அல்லாமல் தற்போது 975 மில்லியன் மக்கள் ஆதார் அட்டை வைத்துள்ளனர். இது, மொத்த மக்கள் தொகையில் 75 சதவிகிதமும் வயது வந்தோரின் மக்கள்தொகையின் 95 சதவிகிதமும் ஆகும். எல்லா மாநிலங்களிலும் ஆதார் அட்டை வழங்குவது பரவலாக உள்ளது. (பொருளாதார ஆய்வு, இந்திய அரசு, 201516)

முதலாம் அட்டவணையில் இந்தியாவில் ஜன்தன் திட்டம் செயல்படுவது பற்றிய விவரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி ஜனதன் திட்டத்தின் கீழ் பொது மக்கள் வங்கிக் கணக்குகளை துவக்கி அதன் மூலம் உண்மையான பயனாளிகள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய மானியத் தொகைகளை வங்கிக் கணக்கிலேயே நேரடியாகப் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.[5]

2. மற்ற வளர்ந்துவரும் நாடுகளை விட கென்யாவில் வங்கிகள் தொலைத்தொடர்பு நிறுவனங்களோடும், காப்பீட்டுத் துறையோடும் நெருங்கிச் செயல்பட்டதால் அவர்களுக்கு சந்தையில் உயர்மதிப்பு கிடைத்துள்ளது என்று Ndung'uNjuguna, Armando Morales, and Lydia Ndirangu2016 கூறுகின்றனர். ஒழுங்குமுறை செயல் அமைப்புகள் நிலைமைக்கு ஏற்ப தொடர் அமைப்பு உருவாக்கியதாலும் நிதிசார் உள் கட்டமைப்பு வசதிகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாலும் கென்யா மக்களின் செயல்திறமை மற்றும் திறன்களில் வேகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டதாலும் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பணம் பரிவர்த்தனை செய்வது, கட்டணங்களை அளிப்பது, வியாபாரம் சார்ந்த நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்வது, ஆகியவை பெருமளவு கைப்பேசி மூலமாக மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நாளும் இப்படி மேற்கொள்ப்பட்ட நிதிப் பரிவர்த்தனைகளின் அளவு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 4.5 சதவிகிதமாக இருந்தது. மெய் நிகர் சேமிப்புக் கணக்குகள், மற்ற நாடுகளுக்கு செலுத்தும் கணினிசார் நிதி சேவைகள் ஆகியவைகள் வளர்ச்சி அடைந்ததை அடுத்து கென்யாவில் மின்னணு முன்னேற்றங்கள் ஏற்பட்டு அதனால் நிதிசார் மேம்பாடு ஏற்பட்டு நிதி சார்ந்த செயல்பாடுகளில் செலவு குறைந்து எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை ஏற்பட்டு எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஏற்பட்டது. விவரங்களுக்கு அணுகவும். http://www.imf.org/external/pubs/ft/fandd/2016/06/ndungu.htm

3. நிலைத்து நிற்கும் மேம்பாடுசார் பன்னாட்டுக் கழகம் (2014) ''இந்தியாவில் சமையல் எரிவாயுவிற்கான மானியங்கள்: சமீபத்திய சீர்த்திருத்தங்கள் பற்றிய ஓர் ஆய்வு'' நிலைத்து நிற்கும் மேம்பாடுசார் பன்னாட்டுக் கழகம் (மார்ச் 2014) பார்க்க: https://www.iisd.org/gsi/sites/default/files/ffs_india_lpg_overview_2014.pdf

4. ஆதார் எண் என்பது ஒருவரின் நிதிசார் முகவரியாகும். அதனடிப்படையில் அவருக்கு சேர வேண்டிய பணம் அதோடு இணைக்கப்பட்டுள்ள கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும். ஆதாரோடு இணைக்கப்பட்ட சேவைகளிலிருந்து கிடைக்கப் பெறும் மக்கள் நலப் பரிவர்த்தனைகள் அவர்களுடைய கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டு உரிய பயனாளிக்கு சென்றடைகிறது. அதே சமயம் ஆதார் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளினால் போலி மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட அடையாளங்கள் வைத்திருப்பது தவிர்க்கப்பட்டு உரியவர்களுக்கு மட்டும் பணம் போய்ச் சேரும். இதற்கு முக்கியமான அடிப்படை எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையை உருவாக்குவதாகும். ஆனால், தற்போது, இப்படிச் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் பாதுகாப்பு கவலைக்கிடமாக மாறி வருகிறது. (விவரங்களுக்கு பார்க்க http://www.hindustantimes.com/india-news/what-s-really-happening-when-you-swipe-your-aadhaar-card-to-make-a-payment/story-2fLTO5oNPhq1wyvZrwgNgJ.html and http://www.epw.in/journal/ 2016/42/commentary/framework-issuing-using-and-validating-identification-documents.html)

5. கைப்பேசிசார் வணிகப் பரிவர்த்தனைகளால் இந்தியாவில் எல்லோருக்கும் வங்கிச் சேவை கிடைப்பதில் இருந்த கடைநிலைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறது. வங்கிக் கணக்கிற்கு பணம் வந்து சேர்ந்த போதும் அது குடும்பங்களின் கையில் கிடைப்பது சவாலாகவே உள்ளது. இதற்குத் தீர்வாக, கைப்பேசி மூலமாக துரிதமாகவும் பாதுகாப்பாகவும் பணம் பெறும் வசதி ஊக்குவிக்கப்படுகிறது. ஆகவே, ஜனதன், ஆதார் மற்றும் கைப்பேசி சார்ந்த இந்த மூன்று திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இந்தியப் பொருளாதார அறிக்கை 2015-16) பார்க்க http://indiabudget.nic.in/budget2016-2017/es2015-16/echapvol1-03.pdf

**அட்டவணை 1**

**பொது நிதியியலை மின்னணுமயமாக்கல் : நிதிசார் சேவைகள் மூலம் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை (கோடிகளில்)**

| வங்கியின் பெயர் | கிராமப்புறம் | நகர்ப்புறம் | மொத்தம் | ரூபே அட்டைகளின் எண்ணிக்கை | ஆதார் இணைப்பு | கணக்குகளில் உள்ள தொகை |
|---|---|---|---|---|---|---|
| பொதுத்துறை வங்கிகள் | 12.32 | 10.22 | 22.54 | 17.58 | 14.93 | 49266.04 |
| பகுதி கிராம வங்கிகள் | 3.97 | 0.66 | 4.63 | 3.53 | 2.76 | 11708.05 |
| தனியார் வங்கிகள் | 0.55 | 0.37 | 0.91 | 0.84 | 0.44 | 2127.40 |
| மொத்தம் | 16.84 | 11.24 | 28.08 | 21.95 | 18.13 | 63101.49 |

குறிப்புகள் : இது 22, மார்ச் 2017 வரை பிரதம மந்திரி ஜனதன் திட்டத்தின் கீழ் துவக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கையாகும். (கோடிகளில்) இந்தத் தகவல், ஏப்ரல் 2, 2017 வரை திருத்தப்பட்டுள்ளது. ஆதாரம் இந்திய அரசு (2017) பிரதம மந்திரி ஜனதன் திட்டம்.

பஹல் எனப்படும் சமையல் எரிவாயு பயன்பாட்டாளர்கள் நேரடி மானிய வழங்கு திட்டம் 2014இல் மீண்டும் துவக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அதிக சலுகை அளிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்கு கீழே வசிப்பவர்களுக்கு சுத்தமான சமையல் எரிவாயு வழங்கப்படுகிறது. இது மிகவும் முக்கியமான அம்சமாகும். ஏனெனில், மலேரியா நோயால் மக்கள் இறப்பதைவிட பெண்களும் குழந்தைகளும் வீட்டிற்குள் பாதுகாப்பற்ற எரிபொருள்களை சமையலுக்காக பயன்படுத்துவதால் ஏற்படும் மாசு காரணமாக இறக்கிறார்கள் என்று தெரியவருகிறது. அவர்கள் இந்த எரிபொருளையும் சேகரிக்க நெடுந்துரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் இதற்காக எடுத்துக்கொண்ட நேரமும், சிரமம் பற்றிய தகவல்கள் இந்திய புள்ளியியல் மையத்தின் ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது. (சக்கரவர்த்தி, 2016 மற்றும் 2014) லஹோட்டி மற்றவர்களின் ஆய்வின்படி (2012) பஹல் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு சமையல் எரிவாயு நகர்ப்புறங்களிலும், குறிப்பாக பொருளாதார வசதி பெற்றவர்கள் மட்டுமே பயனடைந்தனர். இந்த ஆய்வின்படி சமையல் எரிவாயு சுத்தமான, சுகாதாரமான எரிபொருளாக இருந்தும்கூட நாட்டின் பெரும்பான்மையான குடும்பங்கள் திடவடிவ எரிபொருள்களையே பயன்படுத்துவதால் அவர்களுக்கு உடல்நலக் கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே, கெட்டி எரிபொருள்களைப் பயன்படுத்தும் ஏழை மக்களுக்கு சமையல் வாயு எரிசக்தியை வழங்கும் திட்டத்திற்கு இன்னும் முழுமையான பயன்கள் கிடைக்கவில்லை (லஹோட்டி மற்றவர்கள், 2012).

ஆதார் இணைந்த பணம் வழங்கு முறையால், பஹல் திட்டம் இப்போது நல்ல வெற்றியடைந்துள்ளது. இந்த திட்டத்தின்கீழ் நுகர்வோருக்கு சிலிண்டர்கள் சந்தைவிலையில் அளிக்கப்பட்டு வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு மானியம் அவர்களுடைய கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது. இந்த மானியத்தைப் பெறுவதற்கு நுகர்வோர் தங்களுடைய ஆதார் அட்டையை வங்கிக் கணக்கோடு இணைக்க வேண்டும்

ஆதார் அட்டையில்லாதவர்கள் தங்களுடைய வங்கிக் கணக்கை 17 எண் சமையல் எரிவாயு சிலிண்டர் அடையாளத்தோடு இணைக்க வேண்டும். இது, நாட்டிலுள்ள 676 மாவட்டங்களிலுள்ள 15.3 கோடி நுகர்வோருக்கு பயன்படும் வகையில் துவக்கப்பட்டு தற்போது, நாடெங்கிலும் செயல்பட்டு வருகிறது (இந்திய அரசு 2014).[6] இந்த பஹல் திட்டம் பெரும் வெற்றியடைந்துள்ளது என்று இந்திய அரசு கூறுகிறது. 2015-16இன் இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கையின்படி இப்படி பயன்களை மக்களுக்கு நேரடியாக வழங்கியதன் மூலம் சலுகை விலையில் அளிக்கப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களினால் இதுவரை ஏற்பட்ட கசிவுகள், 24 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. உண்மையான சில பயனாளிகளும் பாதிக்கப்பட்டிருக்கலாம் (2015-16 இந்திய பொருளாதார ஆய்வறிக்கை) இது அல்லாமல், சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனையில் இருந்த கள்ளச் சந்தையும் கடுமையாக்கப்பட்டுள்ளது. இன்று வரை பஹல் திட்டம் மூலம் ரூ.45,412 கோடி வரை பணம் நேரடியாக பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 1,05,46,388 பேர் தங்களுடைய சமையல் எரிவாயு

6. பத்திரிகைத் தகவல் அலுவலகம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம், இந்திய அரசு, 31 டிசம்பர் 2014. பார்க்க http://pib.nic.in/newsite/PrintRelease.aspx?relid=114245

சிலிண்டர் மானியத்தை விட்டுக் கொடுத்துள்ளனர்.[7] (இந்திய அரசு பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம், 2014).

மேற்கூறப்பட்ட ஜனதன், ஆதார் மற்றும் கைப்பேசிசார் பணப்பரிவர்த்தனைகள் மூலம் மற்ற பிற திட்டங்களில் பெருமளவு கசிவு ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்றும் இதனால், நிதி சேமிப்பு மிகவும் உயரும் என்றும் கருதப்படுகிறது. மத்திய அரசின் உயர் கட்டுப்பாட்டில் உள்ள உரங்கள் வழங்குதலில் பெருமளவிலான அதாவது 40 சதகிவிகதம் வரை கசிவுகள் உள்ளதாக கருதப்படுகிறது. ஆகவே, உரங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள் விஷயத்திலும் இந்த மூன்றும் இணைந்த திட்டம் செயல்படுத்துவதற்கு தக்க காரணங்கள் உள்ளன. இது அல்லாமல், மாநில மற்றும் உள்ளாட்சி அரசு அமைப்புகளும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டுள்ள சில வியாபாரப் பரிவர்த்தனைகளிலும் மத்திய அரசிலிருந்து, மானியங்கள் நிலைமையைப் போலவே, பணப்பரிமாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜனதன், ஆதார் மற்றும் கைப்பேசி மூலம் பணப்பரிவர்த்தனையால் கசிவுகளும் தாமதமும், நிர்வாக வலுவும் குறைக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதைப்பயன்படுத்தி அரசு பணப்பரிமாற்றம் செய்தால் குறைந்த செலவில் மிகுந்த திறனைப் பெற முடியும். இப்படிப்பட்ட பெரிய சீர்திருத்தங்களுக்குப் பிறகும் இந்த மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுவதில் பிரச்சினைகள் உள்ளன. மேற்கண்ட முறையில் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டு, இதில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள், விலக்கப்படுபவர்கள் ஆகியவை சார்ந்த குறைபாடுகள் குறைக்கப்பட்ட பின்னும் இந்தத் திட்டங்களை நிர்வகிப்பதில் பெருமளவு மனித வளமும், பிற வளங்களும் செலவாகின்றன.

2015-16 பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பாக, மின்சாரத்திற்கான மானியங்களில் ஏழைகள் அல்லாதவர்களுக்கு மானியம் அதிகமாக கிடைப்பது காணப்படுகிறது. இதுபோலவே, சமையல் எரிவாயு சிலிண்டரை பயன்படுத்துபவர்களுக்கு 36 சதவிகித மானியத்தொகை கிடைக்கிறது.

ஆனால், சமையல் எரிவாயு சிலிண்டரை பயன்படுத்தும் ஏழைமக்கள் 9 சதவிகிதம் பேர்தான். ஆகவே, வசதி படைத்தோரே 91 சதவிகிதம் மானியம் பெறுவது தெரிய வந்துள்ளது. முடிவாக, பொருட்களாக, வழங்கப்படும்போது, மக்களின் குறிப்பிட்ட தேவைக்கு ஏற்ப அவை அமைவதில்லை (கடக், 2016).[8] ஆகவே, தற்போது நடைமுறையில் உள்ள அமைப்பை மேலும் சீர்திருத்தம் செய்வதற்கு ஒரே மாதிரியான அடிப்படை வருமானக் கொள்கை தேவையா என்பது பற்றி பொருளாதார நிபுணர்கள் விவாதித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட கொள்கைகள் இருந்தால், அரசு ஏழை, பணக்காரர்கள் என்று இல்லாமல் எல்லோருக்கும் எந்த கட்டுப்பாடுகளும் இல்லாமல் ஒரே மாதிரியாக பணமாற்றம் செய்ய முடியும். 2016-17 இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கையின்படி ஒரே மாதிரியான அடிப்படை வருமானக் கொள்கையை செயல்படுத்தினால் தவறானவர்களுக்கு பணம் பரிவர்த்தனை செய்வதும், கசிவுகளும் பெருமளவு தவிர்க்கப்படும். மானியங்கள், பயனாளிகளுக்கு நேரடியாக அவர்களுடைய வங்கிக் கணக்குகளுக்கே மாற்றப்படுவதால், நலத் திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரிகளின் செயல்பாடுகள் குறையும்.

பர்தன் (2016) அவர்களின் பரிந்துரையின்படி வறுமை கோட்டில் 75 சதவிகிதத்தை அடிப்படை வருமானமாக ஏற்றுக்கொண்டால், சில மக்கள் நலத் திட்டங்கள் தவிர்க்கப்படும். ஆனால், ஒட்டு மொத்தமாக எல்லாத் திட்டங்களும் அல்ல. அவரின் பரிந்துரையின்படி பொதுக்கல்வி, மருத்துவ வசதி, குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டங்கள், பொதுப்பணி வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்கள் ஆகியவை அவசியமாக தக்கவைக்கப்படுவன. நிதி நிலைமை சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயும் போது, ஒரே மாதிரியான அடிப்படை வருமானத் தொகையை ஒருவருக்கு ரூபாய் 10,000 என்று கணக்கிட்டு அதை 2014-15 விலைவாசி யோடு இணைத்தால் தேவையான தொகை ஒவ்வொரு ஆண்டின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் பத்து சதவிகிதம்தான் இருக்கும். இதை நாம் எளிதாக சமாளிக்க முடியும். ஏனெனில் மக்கள் நலத் திட்டங்களில், பெருமளவு மானியக் கசிவும் திறமையற்ற செயல்பாடும் இதைவிட அதிகம்.[9]

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் மற்றும் பொது விநியோகத் திட்டங்கள் சரியான பயனாளிகளுக்கு மட்டுமே என்று செயல்படுத்த முடியாத நிலைமை உள்ளது என்று பானர்ஜி (2016) மற்றும் கடக் (2016) குறிப்பிட்டுள்ளனர்.[10] இந்தியாவில் எல்லோருக்கும் ஒரே நிலையான அடிப்படை வருமான அளவு

7.பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம், இந்திய அரசு, 2014. http://petroleum.nic.in/dbt/index.php

8. கடக், மைத்ரீஷ் (2016) "ஒரே மாதிரியான அடிப்படை வருமான திட்டத்திற்கு இந்தியா தயாரா?" இந்தியாவுக்கான உத்திகள், 28 செப்டம்பர் 2016 பார்க்க. http://www.ideasforindia.in/article.aspx?article_id=1696

9. பர்தன், பிரனாப் (2016) "ஏழ்மையான நாட்டில் அடிப்படை வருமானம்" இந்தியாவுக்கான உத்திகள். பார்க்க http://ideasforindia.in/profile.aspx?id=32

10. பானர்ஜி, அபிஜித் (2016) உலகளாவிய அடிப்படை வருமானம், இந்தியாவுக்கான அபிஜித்தின் உத்திகள், செப்டம்பர் 27,2016. பார்க்க http://ideasforindia.in/profile.aspx?id=3

சாத்தியமானதுதான். இதனை மானியங்களைக் குறைப்பதன் மூலமாகவும், தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்து, வரி முறைகளை சீர்திருத்தம் செய்வதன் மூலமும் ஈடுகட்ட முடியும். எல்லோருக்கும் ஒரே மாதிரியான அடிப்படை வருமான வரம்பை உள்நாட்டு மொத்த உற்பத்தியில் ஒரு சதவிகிதமாக நிர்ணயம் செய்து, இப்போது மெதுவாக இந்தியாவில் வளர்ந்து வரும் மின்னணு பணம் வழங்கு முறைகளையும் ஆதார் சார்ந்த மின்னணு அடையாளத் திட்டத்தையும் பயன்படுத்தி, இந்தக் கொள்கை மூலம் பல மட்ட அரசு அமைப்பை குறைத்து, இந்தியாவின் ஏழ்மையை நாம் சமாளிக்க முடியும் என்று ரே(2016) சுட்டிக்காட்டுகிறார்.[11] எல்லோருக்கும் ஒரே மாதிரியான அடிப்படை வருமானக் கொள்கை, பயனீட்டாளர்களை அடையாளம் கண்டு கொள்வதில் உள்ள பிரச்சினையை தவிர்த்து எல்லோருக்குமாக, பணப் பரிவர்த்தனை செய்கிறது. இதை, பொருளாதார வளர்ச்சியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சமாளிக்கும் ஒரு உத்தியாகவும் மேற்கொள்ளலாம்.

நிதிசார் ஒருங்கிணைப்பு மற்றும் நிதிசார் கொள்கைகளை பார்க்கும் போது இந்தியாவின் நிதிசார் பற்றாக்குறை உள்நாட்டு மொத்த உற்பத்தியில் மூன்று சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருக்க வேண்டும். (சக்கரவர்த்தி, 2016 b). ஆகவே, மின்னணு பரிவர்த்தனை மூலம் மானியங்களை வழங்கும் நிர்வாகத்திலும், எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையை ஏற்படுத்துவதிலும் நல்ல பலன் கிடைக்க வாய்ப்புள்ளது. இதனால் நம்முடைய வளங்களை நாம் திறமையாக பயன்படுத்த முடியும்.

**குறிப்புகள்**


பானர்ஜி, அபிஜித் (2016) உலகளாவிய அடிப்படை வருமானம், இந்தியாவுக்கான அபிஜித்தின் உத்திகள், செப்டம்பர் 27, 2016. பார்க்க http://www.ideasforindia.in/article.aspx?article_id=1695

பர்தன், பிரனாப் (2016) ''ஏழ்மையான நாட்டில் அடிப்படை வருமானம்'' இந்தியாவுக்கான உத்திகள். பார்க்க http://ideasforindia.in/profile.aspx?id=32

சக்கரவர்த்தி, லேகா 2016a, ''ஆசியாவில் ஆண்பெண்சார் பட்ஜெட்டுகள்''. ஒரு ஆய்வு, ''செயல் கட்டுரை 150, பன்னாட்டு நிதி நிதியம், வாஷிங்டன் DC.

சக்கரவர்த்தி, லேகா 2016b, ''நிதி நிலை ஒருங்கிணைப்பு, பட்ஜெட் பற்றாக்குறை மற்றும் மேல்மட்ட பொருளாதாரம், சேஜ் பதிப்பகம், UK.

சக்கரவர்த்தி, லேகா (2014), ''பொதுக் கொள்கைகளை ஒருங்கிணைக்கும் தருணம்'' ஆண் பெண் சார் அடிப்படை நிலைமைகளும், பட்ஜெட் இடுதலும் செயல் கட்டுரை எண்.785, நியூயார்க்.

''ஒரே மாதிரியான அடிப்படை வருமான திட்டத்திற்கு இந்தியா தயாரா?'' இந்தியாவுக்கான உத்திகள், செப்டம்பர் 2016. http://www.ideasforindia.in/article.aspx?article_id=1696

இந்திய அரசு ''இந்தியப் பொருளாதார ஆய்வு, 2016-17'' நிதி அமைச்சகம், புது டெல்லி.

இந்திய அரசு (2016), ''இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கை 201516'' நிதியமைச்சகம், புது டெல்லி.

நிலேகணி (2012), ஆதார் ஏதுவான ஒருங்கிணைக்கப்பட்ட பணப் பரிவர்த்தனை உள்கட்டமைப்புக்கான பணிக்குழுவின் அறிக்கை, பிப்ரவரி 2012.

தேசிய பொது நிதியியல் மற்றும் கொள்கைக் கழகத்தின் ஆதார் திட்டம் செயல்படுத்துவதில் செலவுகள் பயன்கள் பற்றிய ஆய்வு, நவம்பர் 9, 2012 புதுடெல்லி.

இந்திய அரசு(2014), ''பஹல் திட்டம் நாடெங்கிலும் துவக்கம்'' ஜனவரி 1, 2015'' பத்திரிகைத் தகவல் அலுவலகம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம், 31, டிசம்பர் 2014 புதுடெல்லி.

உத்திகள் (2016), இந்தியாவுக்கான உத்திகள் வலைதளம்சார் பயிலரங்கம் இந்தியாவில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான அடிப்படை வருமானக் கொள்கை, நவம்பர் 6, 2016.

நிலைத்து நிற்கும் மேம்பாட்டிற்கான பன்னாட்டுக் கழகம் (2014) : ''இந்தியாவில் சமையல் எரிவாயுக்கான மானியங்கள்: சமீப சீர்திருத்தங்களின் ஓர் ஆய்வு''. நிலைத்து நிற்கும் மேம்பாட்டிற்கான பன்னாட்டுக் கழகம் மார்ச் 2014.

லோஹித், ராகுல், மற்றவர்கள் (2012), ''மானியங்கள் யாருக்காக? இந்தியாவில் சமையல் எரிவாயு நிலைமை'' பொது கொள்கை மையம், இந்திய மேலாண்மைக் கழகம், 2012.

Ndung'uNjuguna, Armando Morales, and Lydia Ndirangu (2016), மின்னணு புரட்சியை பயன்படுத்துதல், நிதி மற்றும் மேம்பாடு. பன்னாட்டு நிதி நிதியம் 2016, தொகுப்பு 53 ழே.2.

ரே, தேவராஜ் (2016), ''அனைவருக்குமான அடிப்படை பங்கு'', இந்தியாவுக்கான உத்திகள். 29 செப்டம்பர் 2016, பார்க்க http://ideasforindia.in/article.aspx?article_id=1697

சரஃப், அனுபம் மற்றவர்கள் (2016) ''அடையாள ஆவணங்களை வழங்கி, பயன்படுத்தி, உறுதி செய்ய அமைப்பு முறை'' எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி தொகுப்பு 51, வெளியீடு 42, 15 அக்டோபர் 2016.


11. ரே, தேவராஜ் (2016), ''அனைவருக்குமான அடிப்படைப் பங்கு'', இந்தியாவுக்கான உத்திகள். 29 செப்டம்பர் 2016, பார்க்க http://ideasforindia.in/article.aspx?article_id=1697

# சிறப்பான நிதிமேலாண்மைக்கு ஏழுபடிகள்

- ஷிஷிர் சின்ஹா

21 ஆண்டுகளாக பொருளாதார, வணிகப் பத்திரிகையாளர்

தேர்தல் மூலம் அமையும் ஓர் அரசு பலதரப்பினரையும் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. ஒரு பிரிவு வாக்காளர்கள் - அதாவது ஆளும் கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு ஆதரவாக வக்களித்தவர்களும், அவ்வாறு வாக்களிக்காதவர்களும் அடங்கிய பிரிவினர். இன்னொரு பிரிவு, பொருளாதாரம் பகுப்பாய்வாளர்கள் மற்றும் தரமதிப்பீட்டுக்குழுவினரை உள்ளடக்கிய பொருளாதார நிபுணர்கள். வாக்காளர்கள், தங்கள் நலனை மேம்படுத்தும் திட்டங்களை மேலும் மேலும் அரசு மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். பொருளாதார நிபுணர்களோ மூலதனச் செலவுகளில் அதிகப்படியாக அரசு கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்துகின்றனர். தொழில் நிறுவனங்களைக் கொண்ட மூன்றாவது பிரிவும் உண்டு. தொழில்துறைக்கு அதிகப்படியான வரிச்சலுகைகளை வழங்கவேண்டும் என்று கூறுகிற இவர்கள், மக்கள் நலத்திட்டங்களுக்கானச் செலவு பொதுமக்களைக் கவரும் நோக்கிலானது என்கின்றனர்.

எந்த ஒரு நிதியமைச்சரானாலும் இந்த மூன்று பிரிவினரையும் ஒருசேர திருப்திப்படுத்துவது மிகவும் சிரமமானது. அடுத்த முறை மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டுமானால், வாக்காளர்களான மக்களைக் குளிர்விக்க வேண்டும், பொருளாதார நிபுணர்கள் நாட்டின் வளர்ச்சித் தர மதிப்பீடுகளை நல்லமுறையில் எடுத்துரைத்தால் தான் முதலீடுகள் பெருகும். அன்னிய முதலீடுகள் மட்டும் போதுமா? உள்நாட்டு முதலீடுகளும் போதிய அளவு வேண்டும். அதற்குத் தொழில்துறையினரை ஊக்கப்படுகிற சலுகைகளை அளித்தாக வேண்டும். இப்படிப்பட்ட சூழலில், எல்லாத் தரப்பினரையும் திருப்திப்படுத்தும் பொதுவான ஏற்பாடு எதுவாக இருக்க முடியும்? அதுவே சிறப்பான நிதி மேலாண்மை. அதன் மூலமே நிதித்துறை ஒருங்கிணைப்பையும் உருவாக்க முடியும்.

சிறப்பான நிதி மேலாண்மை என்பது சாதாரண கணக்கு வழக்குகள் மட்டுமல்ல. எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்கின்ற வகையில், மனிதாபிமான உணர்வுகளோடு நடைமுறைப் படுத்த வேண்டிய செயல் அது. இதனை மனதில் கொண்டு கீழ்க்காணும் ஏழு முக்கிய படிகளின் செயல்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

**1. நிலக்கரி, கனிமங்கள், அலைக்கற்றை ஏலம்:**

''முதலில் வந்தவர்களுக்கு முன்னுரிமை'' என்றவாறு, இந்த இயற்கை வளங்களை ஒதுக்கியதால் பெரும் ஊழலுக்கு வழி ஏற்பட்டது என்பதை 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் தேதியின்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு உறுதிப்படுத்தியது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட 204 நிலக்கரி வயல்களுக்கான குத்தகையும் ரத்து செய்யப்பட்டது அதனையடுத்து ஏல முறைப்படி அதிகப்படியாகப் பணம் செலுத்துபவர்களுக்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு மட்டும் இயற்கை வளங்களை, வணிக ரீதியாகத் தொழில்புரிய அனுமதிக்கலாம் என்று முடிவானது. அதற்கென அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பின்னர் அது நாடாளுமன்றத்தின் மூலம் முறையான கூட்டமாகவும் ஆனது. அதன்படி இதுவரை 82 நிலக்கரி வயல்கள் ஏலமுறைப்படி ஒதுக்கப்பட்டுள்ளன. ஆறுவயல்கள் அரசுத்துறைகள் பெற்றுள்ளன.

இதனால் அரசின் கருவூலத்திற்கு என்ன பயன்? என்று கேட்கலாம். 2004 முதல் 2014 வரையலான காலகட்டத்தில் நிலக்கரி வயல்களைச் சுரங்கப்பணிக்காக ஒதுக்கீடு செய்ததில், எந்தவிதமான வருவாய் இழப்பும் இல்லை என்றே அரசு நினைத்திருந்தது. ஆனால் தலைமைத் தணிக்கையாளரோ, இவ்வாறு ஒதுக்கீடு பெற்ற தனியார் நிறுவனங்கள் ஒரு லட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஆதாயம் அடைந்ததாகக் கணக்கிட்டுத் தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுருந்தார். 2010-11ஆம் ஆண்டில் இந்திய நிலக்கரி நிறுவனத்தின் சராசரி நிலக்கரி விற்பனை விலை அடிப்படையில் இவ்வாறு மதிப்பிடப்பட்டது. ஆனால் தற்போதைய ஏலமுறையின்படி அதிகப்படியாக நான்கு இலட்சம் கோடி ரூபாய் கிடைக்கும் என்று கணக்கிட்டுள்ளனர். இந்த வருவாய், நிலக்கரிப்படுகை வளமிக்க மேற்கு வங்கம், ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், சத்தீஷ்கர் ஆகிய மாநிலங்களுக்கும் கிடைக்கும்.

மற்ற கனிம வனங்களைப் பொறுத்தவரையில் 2015 ஆம் ஆண்டின் சுரங்கம் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச்சட்டத்தின்படி, மாநில அரசுகளே ஏலம் விடலாம். இதன்படி இதுவரை ஆந்திரப்பிரதேசம், சத்தீஷ்கர், ஜார்கண்ட், கர்நாடகா, ஒடிஷா, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில், 21 கனிம வளப்பகுதிகள் ஏலம் மூலம் ஒதுகீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்த மாநிலங்களுக்கு ரூ 50,000 கோடிக்கும் அதிகமாக வருவாய் கிடைக்கும் எனத் தெரிகிறது. இன்னும் 10 மாநிலங்களில் மேலும் 71 கனிம வளப்பகுதிகள் ஏலமிடப்பட உள்ளன.

ஏலமுறையில் ஒதுக்கீடு செய்வதே அரசுக்கு ஆதாயமானது என்பதற்கு இன்னோர் எடுத்துக்காட்டு, அலைக்கற்றை அரசின் ஏல நடைமுறைகள் 2012ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டாலும், தற்போதைய அரசு அமைந்தபிறகுதான் இந்த நடவடிக்கை வேகம் பெற்றுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் அலைக்கற்றை ஒதுக்கீடு மூலம் கிடைக்கும் எதிர்பார்க்கப்பட்ட வருவாயில் எவ்விதக் குறைவும் இல்லை என்று அரசு கூறுகிறது. 2014-15ஆம் ஆண்டில் ரூ 10,791.08 கோடியும், 2015-1இல் ரூ 21,587 கோடியும், 2016-17 ஆம் ஆண்டில் ரூ 33,194 கோடியும் அலைக்கற்றை ஏலம் மூலம் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

மேலும், ஏலமுறையினால் வழக்கமான இயற்கை வளப்பகிர்வு முறையிலும் மாற்றம் ஏற்பட்டுப் பரவலாக ஒதுக்கீடுகள் கிடைத்துள்ளன. மின்னணு ஏலமுறையைப் பின்பற்றுவதால், மிகவும் வெளிப்படைத் தன்மையுடனும் இது நடைபெறுகிறது. ஏலமுறையைப் பாராட்டிய ஃபோர்ப்ஸ் இதழ், ‘‘இயற்கை வளங்களைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க இதுவே சரியான வழிமுறை. செல்வ வளமிக்க நாடாகத்திகழ வேண்டிய இந்தியா, அந்த நிலையே நோக்கி எடுத்துவைத்துள்ள முக்கிய அடி இது. இவ்வாறுதான் இவ்விஷயம் கையாளப்பட வேண்டும்’’ என்று எழுதியது.

**2. ஜன்தன்-ஆதார்&கைபேசி முக்கோணம்**

ஆங்கிலத்தில் ‘ஜாம் (Jam - Jandhan, Aadhar - Mobile) என்று சொல்லப்படுகிற ஜன்தன் - ஆதார் - கைபேசி என்ற முக்கோண உத்தி நிதிமேலாண்மையைச் சிறப்பாகக் கையாளும் வழியாகும். முதலில், ஏன் இந்த உத்தி தேவையாகிறது என்று புரிந்து கொள்வோம். சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நலவாழ்வுத் திட்டங்களுக்காக ஆண்டு தோறும் அரசு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழிக்கிறது. இதில் குறிப்பிடத்தக்க செலவு, பலதுறைகளில் தரப்படும் மானியம். மக்களின் அன்றாடப் பயன்பாட்டுகளுக்கான பொருள்களின் விலையைக் கட்டுக்குள் வைக்க அரசு தரும் மானியம் மிகவும் முக்கியமானது என்று 2015-16 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், சர்க்கரை, மண்ணெண்ணெய், சமையல்வாயு, நாப்தா, தண்ணீர், மின்சாரம், டீசல், ரசாயன உரங்கள், இரும்புத்தாது, ரயில் கட்டணம் என்று எண்ணற்ற பொருள்களுக்கும் சேவைகளுக்கும் மத்திய-மாநில அரசுகள் மானியங்களைப் பல வழிகளில் வழங்கி வருகின்றன. இவற்றின் மொத்த மதிப்பு சுமார் ரூ 3,78,000 கோடி அதாவது நம்நாட்டின் மொத்த வருவாயில் சுமார் 4.24 சதவீதம். இவ்வளவு மானியத்தையும் யார் அனுபவிக்கிறார்கள், ஏழைகளா? மற்றவர்களா? என்ற கேள்வி எழுகிறது.

இந்தமாதிரியான விலைக் கட்டுப்பாட்டுக்கான மானியங்கள், வசதி படைத்தவர்களையே அதிகம் சேர்கின்றன என்று பொருளாதார ஆய்வறிக்கை 2015-16 குறிப்பிடுகிறது. சமையல் எரிவாயு மானியத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம் நம் நாட்டின் மிகவும் ஏழையான மக்களில் 50 சதவீதம் பேர், மொத்த சமையல் வாயு விநியோகத்தில் 25 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்துகின்றனர். அதாவது அரசாங்கம் சமையல் வாயுவுக்காகத் தருகிற மானியத்தில் ஏழை மக்களுக்கு சராசரியாக ஒரு நபருக்கு மாதத்திற்குப் பத்து ரூபாய் மட்டும் கிடைக்க, வசதிபடைத்தவர்களுக்கு, மாதம் ஒன்றுக்குச் சராசரியாக ஒரு நபருக்கு ரூ 80/- வரை மானியம் கிடைக்கிறது.

ஏழை மக்களுக்கு என்று மலிவு விலையில் தரப்படும் மண்ணெண்ணெயில் 49 சதவீதம் மட்டுமே வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்குக் கிடைக்கிறது. ஏழையர் அல்லாத மற்றவர்களே 51 சதவீத மண்ணெண்ணையைப் பயன்படுத்துகின்றனர். இன்னும் சொல்லப் போனால் வசதிபடைத்த மக்களின் 40 சதவீதம் பேர், மலிவுவிலை மண்ணெண்ணெயில் 15 சதவீதத்தை அபகரித்துக் கொள்கின்றனர்.

இந்தக் குறையைப் போக்க என்ன வழி? மானிய உதவிகள் உண்மையில் தேவைப்படுகின்ற மக்களுக்கு மட்டுமே கிடைப்பதை உறுதி செய்வதற்கான மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன் முன்மொழிந்த யோசனைதான்

‘ஜாம்’ என்கிற ஜன்தன்-ஆதார்-கைபேசி முக்கோண உத்தி.

ஒரு குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்காவது வங்கிக் கணக்கு வேண்டும் என்ற திட்டமான ஜன்தன் திட்டப்படி இதுவரை 28 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. இதே போல, இந்தியக் குடிமக்களுக்கு, ஒவ்வொருக்கும் தனித்த அடையாளம் தரும் ஆதார் எண் இதுவரை 111 கோடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்து விடும்போது, யாருக்கு வங்கிமூலம் மானிய உதவி கிடைக்கிறது என்று தெரிந்துவிடும். இத்துடன் நம் நாட்டில் 100 கோடிக்கும் மேலான கைபேசி இணைப்புகள் உள்ளதால், அரசின் மானிய உதவி வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டதை உடனுக்குடன் கைபேசித் தகவல் மூலம் தெரியப்படுத்தி விடமுடியும். மேலும் கைபேசி மூலம் பணமில்லாப் பரிவர்த்தனைகளையும் அவர்கள் மேற்கொள்ள முடியும்.

2014-15 முதல் ‘ஜாம்’ என்ற உத்தியைத் தீவிரமாக அரசு பயன்படுத்திவருகிறது. பயனாளர்களுக்கு மானிய உதவியை நேரிடையாக வழங்குவதன் மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில் அரசுக்கு சுமார் ரூ 50,000 கோடி வரை மிச்சப்பட்டுள்ளது. அதாவது பொதுவிநியோக முறையில் ரூ 26,400 கோடி, நூறுநாள் வேலைத்திட்டம் என்கிற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தில் ரூ 7600 கோடி, சமையல் வாயு மானியத்தில் ரூ 26,400 கோடி என அரசின் செலவு மிச்சம் ஏற்பட்டது.

### 3. சரக்கு - சேவை வரி (GST)

சிறப்பான நிதிமேலாண்மையில் மனிதாபிமானத்தைப் பேணுகிறவையாக முதல் இரண்டு படிகளும் உள்ளன. அடுத்து, தொழில் நடத்துவதை எளிதாக்கும் வழி. இது சரக்கு - சேவை வரி மூலம் சாத்தியமாகும். நாடு முழுமைக்குமான சரக்கு - சேவை வரி விதிப்பு முறையை வரும் ஜூலை முதல் தேதியில் இருந்து நடைமுறைப்படுத்தும் எல்லாவிதமான ஆய்த்தப்பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதனால் இந்தியா முழுவதும் ஒரே சந்தையாகி விடுவதுடன், பலமுனை வரிவிதிப்புகள் முடிவுக்கு வந்துவிடும். வரி ஏய்ப்பும் தடுக்கப்படும். நாட்டின் மொத்த வருவாயில் மறைமுகவரிகளின் பங்கு விகிதமும் மேம்படும். தற்போது இது 5.2 சதவீதமாக உள்ளது. இந்தக்குறைவான விகிதத்திற்குக் காரணங்கள்: பலதுறைகள் சேவைவரி வரம்புக்குள் கொண்டு வரப்படவில்லை; விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில் வரிவிலக்குச் சலுகை உள்ளது; சிறு - குறுதொழில்களுக்கான வரிவிதிப்பு வரம்பு அதிகமாக உள்ளது; சமூகப் பொருளாதாரக் காரணங்களுக்காக பலவிதமான வரிச்சலுகைகள் வழங்கப்படுகின்றன.

வரவிருக்கும் சரக்கு - சேவை வரி விதிப்பு முறையில் விவசாய விளை பொருள்களுக்கு - குறிப்பாக உணவு தானியாங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்ற விதமான வரிச்சலுகைகள் பற்றி திட்டவட்டமான முடிவு வரவில்லை. என்றாலும், காலப்போக்கில், எல்லாவரிச்சலுகைகளும் இல்லாமல் போய்விடும். இதனால் வரி வருவாய் பெருகி, நாட்டின் மொத்த வருவாயில், மறைமுகவரிகளின் பங்கு கணிசமாக உயரக் கூடும். நாடு முழுவதும் ஒரே சீரான வரிவிதிப்பு முறை வருவதால் தொழில் துறையினருக்கு இது சாதகமாகவே இருக்கும்.

### 4. பட்ஜெட் செலவினங்கள்:

பொதுவாகத் திட்டங்களுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு மிக ‘ஆரவாரத்தோடு’ செய்யப்படுவதாகவும், உண்மையில் செலவுகள் செய்யும் போது ‘சத்தம் காட்டுவதில்லை’ என்றும் கூறப்படுகிறது. இந்தக்குறை நடப்பு பட்ஜெட் முதல் இருக்காது. அரசாங்கத் திட்டங்களைச் செயல்படுத்தும் முகமைகள் எவ்வளவு செலவிட்டிருக்கின்றன என்ற விவரங்கள் நாடளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். இதன்படி மத்திய அரசின் 68 அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் பல்வேறு திட்டங்களுக்கு பட்ஜெட் ஒதுக்கீடு எவ்வளவு, செலவிடப்பட்ட தொகை எவ்வளவு, திட்ட இலக்கில் எத்தனை சதவீதம் நிறைவேறியுள்ளது என்பன போன்ற விவரங்களை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து, வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவோம் என்று அரசு கூறியுள்ளது. திட்டமிட்டவாறு இலக்குகள் நிறைவேறாத பட்சத்தில் அதற்கான காரணங்களைக் கண்டறியவும், இலக்கினை எட்டத்தடையாக உள்ள காரணிகளைக்களையவும் இதன் மூலம் வழி ஏற்படும்.

### 5. செலவினத்தின் மறுவகைப்பாடு

இந்த ஆண்டு முதல் அரசின் செலவினங்களைத் திட்டச்செலவு, திட்டமில்லாச் செலவு என்று பகுக்கும் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. மாறாக, எல்லாச் செலவுகளும் மூலதனச் செலவு அல்லது

வருவாய்ச் செலவு என்று இரண்டாக வகைப்படுத்தப்படும். திட்டச்செலவு - திட்டமில்லாச் செலவு என்று பிரித்துச் செய்வதால், பல்வேறு திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு விவரம் முழுமையாகத் தெரிவதில்லை. மேலும், ஒரு சேவையை அளிக்க அரசுக்கு ஆகும் மொத்த செலவு விவரம் மதிப்பிட முடியாமல் போகிறது. திட்டச்செலவுகளில் மத்திய - மாநில அரசுகள் அதிககவனம் செலுத்துவதால், ஏற்கனவே உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கும் அத்தியவசிய பராமரிப்புச் செலவிற்கான ஒதுக்கீடு கூடக்கிடைப்பதில்லை. எனவே திட்டச்செலவு - திட்டமில்லாச்செலவு இரண்டையும் ஒருங்கிணைப்பதால், மூலதனச் செலவுகள் மற்றும் வருவாய்ச் செலவுகளுக்கான முழுத்தொகையும் பட்ஜெட் மூலம் கிடைத்துவிடும்.

### 6. ரயில் பட்ஜெட் - பொதுபட்ஜெட் இணைப்பு:

ரயில்வே துறைக்கென தனியாக பட்ஜெட் தயாரிக்கப்பட்டுவந்த 92 ஆண்டு கால நடைமுறை முடிந்துவிட்டது. பொதுபட்ஜெட்டில் ஒரு பகுதியாக, இந்த ஆண்டு முதல் ரயில் பட்ஜெட்டும் இருக்கும். இதனால் ரயில்வேயின் செயல்பாடுகள் கவனம் பெறுகின்றன. மேலும் அரசின் ஒட்டுமொத்த நிதி நிலைமையும் தெரிய வருகிறது. இரண்டையும் இணைத்து விட்டதால் தனித்தனி நடைமுறைகளும் முடிவுக்கு வந்துவிட்டன. தவிரவும், ஆண்டு தோறும் மத்திய அரசுக்கு ரயில்வேதுறை டிவிடெண்டு வழங்கி வருகிற முறையும் இனி இருக்காது. இதன் மூலம் ரூ 9,700 கோடி மிச்சமாகும்.

### 7. முன்கூட்டிய தாக்கலான பட்ஜெட்

இந்த ஆண்டு மத்திய பட்ஜெட் பிப்ரவரி முதல் தேதி அன்றே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. பட்ஜெட் அறிவிப்புகளை உள்ளடக்கிய நிதி மசோதவைச் சட்டமாக்கும் ஏனைய நடைமுறைகளும் மார்ச் 31க்குள் நிறைவடைந்து விட்டன. இதற்கு முன்னர், இந்த நடவடிக்கைகள் நிறைவு பெற மே ஜூன் மாதங்கள் வரை ஆகிவிடும் இதனால் பல்வேறு அமைச்சகங்கள், துறைகளுக்கான பணிகளை, அதற்குப்பின்னர்தான் மேற்கொள்ள முடியும். தற்போது மார்ச் மாதத்திற்குள்ளாகவே அனைத்துப்பணிகளும் முடிந்துவிட்டதால், அடுத்த நிதியாண்டுக்கான திட்டங்களை ஏப்ரல் மாதத்தில் இருந்தே அரசுத் துறைகள் செயல்படுத்த முடியும். மேலும் புதிய வரிவிதிப்புகளும் ஏப்ரல் முதல் தேதியில் இருந்தே அமலுக்கு வந்துவிடும்.

### பட்ஜெட் பற்றாக்குறை வரம்பு

2003ஆம் ஆண்டில், நிதிபொறுப்புடைமை மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டம் (FRBM) ஒன்றை அப்போதைய அரசு இயற்றியது. கண்மூடித்தனமாக அரசுகள் செலவுகளை அதிகரித்து, பற்றாக்குறையை விரிவாக்கிக் கொள்வதை கட்டுப்படுத்தும் நோக்கிலானது இந்தச் சட்டம். இந்தச்சட்டத்தின் செயல்பாடு பற்றிய பரிசீலனைக்குழுவின் அறிக்கை அண்மையில் தாக்கல் செய்யப்பட்டது. நாட்டின் மொத்த வருவாயில் அரசின் கடன் 60 சதவீதம் வரை மட்டும் இருக்கலாம் - அது மத்திய அரசுக்கு 40 சதவீதம், மாநில அரசுகளுக்கு 20 சதவீதம் என்று 2023 ஆம் ஆண்டுக்குள் எட்டப்படவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. மேலும் பட்ஜெட் பற்றாக்குறை மொத்த வருவாயில் மூன்று சதவீதத்தை அடுத்த மூன்றாண்டுகளுக்குத் தாண்டக் கூடாது என்றும் கூறியுள்ளது. அரிதான விதிவிலக்காக, பொருளாதாரக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் நீண்டகால நோக்கிலான மாற்றங்கள், அல்லது, எதிர்பாராத நிதி நெருக்கடியின் போது பற்றாக்குறை மேலும் அரைசதவீதம் கூடுதலாகலாம் என்றும் கூறியுள்ளது.

பட்ஜெட்டைத் தாக்கல் செய்து பேசுகையில் நிதியமைச்சர், அந்த அரிதான விதிவிலக்கைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தருணம் இது என்றாலும், (சரக்கு - சேவை வரி அமலாக்கத்தினால்) அந்தச்சலுகையைப் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர்த்திருக்கிறார். எனினும், உலக அளவிலான பொருளாதார மந்தத்தினால் தனியார் முதலீடுகள் மெத்தனமாகவே மேற்கொள்ளப்படுவதால், அரசின் செலவினத்தை அதிகரிக்க வேண்டிய காரணத்தால், 2017 - 18ல் நிதிப்பற்றாக்குறை, மொத்த வருவாயில் 3.2 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் மூன்று சதவீதத்திற்குள்ளாக பற்றாக்குறையைக் கொண்டுவரவும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். 2014 மே மாதம் இந்த அரசு பதவி ஏற்றது முதல், திறமையான நிதிநிர்வாகத்தைக் கைக்கொண்டுள்ளது. 2013-14இல் 4.5 சதவீதமாக இருந்த நிதிப்பற்றாக்குறை 2014-15இல் 4.1 சதவீதமாகவும், 2015-16இல் 3.9 சதவீதமாகவும் 2016-17இல் அது 3.5 சதவீதமாகவும் குறைந்து விட்டதே, அரசின் திறமையான நிதிநிர்வாகத்திற்குச் சான்றாகும். எனவே 2018-19 ஆம் ஆண்டு முதல் அரசின் நிதிப்பற்றாக்குறை மூன்று சதவீதத்திற்குள்ளாகவே இருக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை.

●

# வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குதல்

- **டேனிஷ் ஏ.ஹாஷிம்** - இந்திய தொழில் கூட்டமைப்பின் பொருளாதார விவகாரங்களுக்கான இயக்குனர்

- **ஐஸ்வர்யா நஹாதா** - இந்திய தொழில் கூட்டமைப்பின் பொருளாதார விவகாரங்கள் பிரிவில் ஆலோசகர்

**அறிமுகம்**

இந்தியாவில் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் முக்கியமான கூறுகளில் ஒன்றாக, வணிகத்துக்கான அனுமதியையும் அங்கீகாரத்தையும் வழங்குகின்ற அரசாங்கத்தின் நெறிமுறைப்படுத்தும் பங்கினைக் குறைப்பதுவே இருக்கிறது. இத்தகைய நெறிமுறைப்படுத்தும் நிலையில் இருந்து உதவி செய்யும் நிலைக்கு அரசாங்கத்தை மாற்றுதல், வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குதல் (EoDB) ஆகியனவும் முக்கியமானவையாக உள்ளன. இந்தத் திசையை நோக்கிய சீர்திருத்தங்களின் வேகம் தொழில் துறையில் போதுமானதாக இல்லை என நிரூபிக்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் தொழிலகப் பிரிவின் பங்கு 24.2%ஆக மட்டுமே இருந்தது. ஆனால் இதே காலப்பிரிவில் இது சீனாவில் 43.9%, தென்கொரியாவில் 38.7%, மலேசியாவில் 34.7%ஆக இருந்தது. தொழிலகப் பிரிவின் அதிகப்படியான வெளியீட்டுப் பொருளாக உற்பத்திப் பிரிவு அமைந்துள்ளது. அரசாங்கத்தின் ''இந்தியாவில் தயாரியுங்கள்'' என்ற இயக்கத்தின் வெற்றிக்கு முக்கிய காரணியாக .இதுவே அமையும். ஆனால் வணிகத்தை மேற்கொள்வதை எளிதாக்கும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாததால் உற்பத்திப்பிரிவு பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று எந்த ஒரு பொருளாதார நடவடிக்கைக்கும் அவசியம் தேவைப்படுகின்ற உள்கட்டமைப்பு வசதிகளும்கூட அதிகப்படியான செயல்முறைகள், விதிகளுக்கு உட்படுதல் மற்றும் அனுமதி பெறுதல் ஆகிய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு வழக்கமான உள்கட்டமைப்புத் திட்டத்துக்கு 19 அமைச்சகங்களிடம் இருந்து தடையில்லாச் சான்றிதழ்கள் வாங்க வேண்டி உள்ளது; மேலும் சுற்றுச்சூழல் முதல் உள்நாட்டு பாதுகாப்பு என்று சராசரியாக 56 அனுமதிகள் வாங்க வேண்டி உள்ளது; இந்தச் செயல்முறையை நிறைவு செய்ய தோராயமாக 24 மாதங்கள் ஆகும். இதனைத் தனிப்பட்டவர்களின் அனுபவச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன (புதுதில்லியில் நவம்பர் 2014ல் சி.ஐ.ஐ, வெளியிட்டுள்ள ''முதலீட்டுக்கான ஈர்ப்பை மேம்படுத்துதல்: நடைமுறைகளை வெளிப்படுத்துதல்'' என்ற அறிக்கையைப் பார்க்கவும்).

வணிகத்தை மேற்கொள்வதை எளிதாக்கும் செயலில் இந்தியாவின் முன் முயற்சி மோசமான நிலையில் உள்ளது என்பது உலக வங்கியின் ''வணிகத்தை மேற்கொள்ளுதல் அறிக்கை''யில் (2016) இருந்து சான்றாதாரத்துடன் காட்டப்படுகிறது. இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள 190 நாடுகளில் இந்தியாவின் தரநிலையானது 130 ஆகும். வணிகத்தை எளிதாக மேற்கொள்வதற்கான 7 காரணிகளில் (மொத்தம் 10 காரணிகள்) இந்தியா மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. கட்டுமான அனுமதிகளைப் பெறுதல் (185), வரிகளைச் செலுத்துதல் (172), ஒப்பந்தத்தை செயல்படுத்துதல் (172), வணிகத்தைத் தொடங்குதல் (155), எல்லைகள் கடந்து வர்த்தகம் மேற்கொள்ளுதல் (143), சொத்துகளைப் பதிவு செய்தல் (138) மற்றும் திவால் ஆவதைத் தீர்த்து வைத்தல் (136) ஆகியன அந்த மோசமான காரணிகள் ஆகும். இங்கு மிக முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூற வேண்டியது தில்லி மற்றும் மும்பை ஆகிய இரண்டு நகரங்களின் அடிப்படையில்தான் வணிகத்தை மேற்கொள்ளுதல் என்ற அறிக்கை அமைந்துள்ளது. எனவே இந்த அறிக்கை நாட்டின் பிற மாநிலங்களில் நிலவும் சூழலை முழுமையான அளவில் பிரதிபலிப்பதாக இருக்காது. இருந்தபோதிலும், மாநிலங்களுக்கு இடையேயான வணிகம் என்பது அரசு ஆணைகள், நெறிமுறைகள், விதிகள், செயல்முறைகள் ஆகியவற்றின் புதிர்ப்பாதைகளை எதிர் கொள்வதாகவே இப்பொழுதும் இருக்கின்றன. மேலும் சிவப்பு நாடா முறை, அதிகார வர்க்க நடைமுறைகள், ஊழல், தாமதம் போன்ற அம்சங்களுடன் சேர்ந்தே உள்ளன. எனவே வணிகம் மேற்கொள்ளத் தொடங்குதல் ஒரு சவாலான காரியமாகவே உள்ளது.

ஒட்டுமொத்த முதலீட்டுச் சூழலுக்கும் இன்றியமையாத கூறாக இருப்பது வணிகம் மேற்கொள்வதற்கான எளிதான வழிமுறைகள்தான். இவை மோசமான நிலையில் இருப்பதன் விளைவால் நாட்டில் பொருளாதார வாய்ப்புகளின் இழப்பு ஏற்படுகின்றது. இந்தக் கருத்துக்கு ஆதாரமாக எண்ணற்ற ஆய்வுகள் உள்ளன. உதாரணமாக டால்லர் மற்றும் பலர் சேர்ந்து ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் பொருளாதார மேம்பாடு

மற்றும் கொள்கை சீர்திருத்தம் குறித்த ஆராய்ச்சி மையத்தில் சமர்ப்பித்த ''முதலீட்டுச் சூழல் மற்றும் பொருளாதார செயல்திறன்: இந்தியாவில் இருந்து சில நிறுவன நிலையிலான சான்றுகள்'' என்ற ஆய்வுக்கட்டுரையில் (2002) அவர்கள் மோசமான முதலீட்டுச் சூழல் என்பது பெரிய அளவிலான முதலீடுகளைத் தடுக்கிறது என்கின்றனர். அதிலும் குறிப்பாக அதிக உற்பத்தித் திறன் கொண்ட தயாரிப்பு மற்றும் சேவைப்பிரிவுகளில் இந்தத் தடையானது ஏற்படுகின்றது; அதனால் வேலைவாய்ப்பும் வளர்ச்சி வாய்ப்பும் தேக்கமடைகின்றன என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

புதுதில்லியில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள ''இந்தியாவில் உருவாகி வரும் பொருளாதாரம்'' என்ற கட்டுரைத் தொகுப்பில் மனுயூலா ஃபெர்ரோ, டேவிட் ரோஸென்பிளாட், ஸ்டெர்ன் நிக்கோலஸ் ஆகியோர் இணைந்து எழுதி உள்ள ''இந்தியாவில் மோசமான வளர்ச்சிக்கு ஆதரவாக உள்ள கொள்கைகள்'' என்ற கட்டுரையில் (2004) அவர்கள் மோசமான முதலீட்டுச் சூழலை குறைந்த விவசாய உற்பத்தித் திறன் மற்றும் விவசாயம் சாராத துறை வளர்ச்சி ஆகியவற்றோடு தொடர்புபடுத்துகின்றனர். சி.வீரமணி மற்றும் பிஸ்வநாத் கோல்டார் இருவரும் புதுதில்லியில் உள்ள சர்வதேச பொருளாதார உறவுகள் ஆராய்ச்சிக்கான இந்தியக் கவுன்சிலில் சமர்ப்பித்துள்ள ''உற்பத்தித் துறையில் முதலீட்டுச் சூழலும் மொத்தக் காரணி உற்பத்தித் திறனும்: இந்திய மாநிலங்கள் குறித்த பகுப்பாய்வு'' என்ற கட்டுரையில் அவர்கள் மோசமான முதலீட்டுச் சூழலானது உற்பத்தித் துறையில் உற்பத்தித் திறன் வளர்ச்சியை பாதிக்கிறது என்கின்றனர். மாநிலங்களுக்கு இடையில் நிலவும் முதலீட்டுச் சூழல்களில் உள்ள வேறுபாடுகள்தான் முதலீட்டு நிலையில் உள்ள அதிக அளவு வேறுபாடுகளுக்கு முதன்மைக் காரணமாக உள்ளன. மேலும் பொருளாதார வளம், உற்பத்தித் திறன் வளர்ச்சி ஆகியவற்றின் வேறுபாடுகளுக்கும் காரணமாக உள்ளன. முதலீட்டுச் சூழல் என்பது பெரும்பாலும் மாநிலம் சார்ந்த விஷயமாக எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாறு கூறப்படுகிறது.

அண்மைக்கால ஆண்டுகளில் மத்திய அரசு வணிகத்தை எளிதாக மேற்கொள்வதற்கான குறிப்பிடத்தக்க முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. தற்போதைய நடப்பில் உள்ள விதிகளை எளிமைப்படுத்துதலுக்கும், பகுத்தாய்வு செய்தலுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆளுமையை திறனுடனும் திறமையாகவும் மேற்கொள்ளச் செய்வதற்கு தகவல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படவும் முக்கியத்துவம் தரப்படுகிறது (டி.சி.ஷர்மா 2016ல் எழுதி உள்ள ''இந்தியாவில் வணிகம் மேற்கொள்வதில் எளிமை - ஒரு பார்வை'' என்ற கட்டுரையை கூடுதல் விவரங்களுக்குப் பார்க்கவும்). மேலும் ''அரசாங்கத்தின் இறுக்கத்தைக் குறைப்போம், ஆட்சி ஆளுகையை அதிகரிப்போம்'' என்ற கோஷத்தை முன்வைக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. மத்திய அரசு நிலையிலும் மற்றும் மாநில அரசுகளின் நிலையிலும் பலவிதமான சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக, மத்திய அரசு நிலையில், தொழிற்சாலைக்கான உரிமத்துக்கு விண்ணப்பிக்கும் செயல்முறை மற்றும் தொழிலக தொழில்முனைவோர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியன ஆன்லைன் சேவையாக மாற்றப்பட்டு உள்ளன. அதேபோன்று தொழிற்சாலை உரிமம், வேலை கொடுப்போர் பதிவு செய்தல் உள்ளிட்ட சுமார் 20 மத்திய அரசு சேவைகள் இபிஸ் பிளாட்பாரத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன. (பிசினஸ் ஸ்டான்டர்டு (10-6-2016 தேதியிட்ட) பத்திரிகையில் வெளியாகி உள்ள ''இ பிஸ் போர்ட்டலில் மத்திய அரசின் 20 சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன: டி.ஐ.பி.பி'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்). இதேவிதமாக கம்பெனி நிறுவன உறவுகள் அமைச்சகமானது படிவம் 29ஐ அறிமுகப்படுத்தி உள்ளது. நிறுவனத்துக்கான பெயர் கிடைத்தல், இயக்குனர் அடையாள எண் மற்றும் கம்பெனியை இணைத்தல் ஆகிய மூன்று செயல்முறைகளை ஒரே செயல்முறையாக இந்தப் படிவம் இணைத்துத் தருகிறது. இப்போது ஒரு நிறுவனத்தை ஓரிரு வேலைநாட்களுக்குள்ளேயே பதிவு செய்துவிட முடியும். மேலும் தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகம் (இ.எஸ்.ஐ.சி) மற்றும் ஊழியர் வருங்கால வைப்புநிதி நிறுவனம் (இ.பி.எஃப்.ஓ) ஆகிய இரண்டு நிறுவனங்களும் நேரடித் தொடர்பு தேவைப்படாமலேயே பதிவு மற்றும் ஆவணம் சமர்ப்பித்தல் ஆகிய செயல்பாடுகளை ஆன்லைன் செயலாக மாற்றி உள்ளன.

இலட்சக்கணக்கான வர்த்தகர்களின் வாழ்வை எளிமையாக்கும் வகையில் அரசும் தொடர்ச்சியாகப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. மத்திய கலால் மற்றும் சுங்க வரி வாரியம் ''வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கு ஒற்றைச் சாளர இன்டர்ஃபேஸ்'' (ஸ்விஃப்ட்) என்பதைத் தொடங்கி உள்ளது. இறக்குமதியாளர்கள் இபோர்ட்டலில் (ஐஸ்கேட்) பொதுவான ஒருங்கிணைந்த அறிக்கையைத் தாக்கல் செய்ய இது உதவுகிறது. மேலும் பங்குதாரர்களாக உள்ள ஆறு அரசாங்க ஏஜென்சிகளுக்கும் சமர்ப்பிக்க

வேண்டிய அறிக்கை தேவை என்பது இப்போது இதனால் நீக்கப்பட்டு விட்டது.

1. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர அளவீடுகள் ஆணையம் (எஃப்.எஸ்.எஸ்.ஏ.ஐ),
2. தாவரத் தனிமைக்காப்பு,
3. விலங்குகள் தனிமைக் காப்பு,
4. மருத்து கட்டுப்பாட்டாளர்,
5. வனவிலங்கு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும்
6. ஜவுளி கமிட்டி

ஆகியனவே அந்த ஆறு அரசாங்க முகமைகள் ஆகும். அதாவது 9இல் இருந்து வெறும் 3ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மிக விரைவில் இந்த வசதியானது ஏற்றுமதியாளர்களுக்கும் கிடைக்க இருக்கிறது. அதேபோன்று சரக்குகளை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்குக் கட்டாயமாகத் தேவைப்படும் ஆவணங்களின் எண்ணிக்கையை மத்திய அரசு முன்பு இருந்த 10 மற்றும் 7 என்ற எண்ணிக்கையில் இருந்து இப்போது ஒவ்வொன்றுக்கும் 3 எனக் குறைந்துள்ளது. அண்மைக் காலத்தில் மத்திய அரசு இத்தகைய பலவிதமான முன்னோட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. வணிகம் மேற்கொள்வதற்கு மிகவும் உகந்ததாக சூழலை மாற்றுவதற்கு மாநிலங்களுக்கு இடையில் கூட்டு போட்டி மனப்பான்மையை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிதான் இதில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய நடவடிக்கை ஆகும்.

தொழிலகக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை (டி.ஐ.பி.பி) 2015இல் மிகவும் குறிப்பிடத்தக்க முன்னோட்ட நடவடிக்கையாக ‘‘வர்த்தக சீர்திருத்தச் செயல் திட்டம்’’ (பி.ஆர்,ஏ.பி) ஒன்றை அறிவித்தது. ‘‘வணிக சீர்திருத்தங்களை மாநில அரசுகள் அமலாக்குவதை மதிப்பீடு செய்தல்’’ என்பதை வருடாந்திர நடவடிக்கையாக இந்தச் செயல்திட்டம் மாற்றி உள்ளது. மேலும் இதன் முடிவுகள் (மாநிலங்களின் தரவரிசைப் பட்டியல் உட்பட) பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தெரிவிக்கப்படுகின்றன. இது மத்திய அரசின் ‘‘புகழ்ச்சி மற்றும் இகழ்ச்சி’’ கொள்கை என்று பரவலாகக் குறிப்பிடப்படுகின்றது. இது மாநிலங்களுக்கு இடையில் கூட்டுப் போட்டி மனப்பான்மையை வளர்த்தெடுப்பதில் வெற்றி பெற்றுள்ளது. உலக வங்கியின் டிபி தரவரிசைப்பட்டியல் மும்பை, புதுதில்லியை மட்டுமே கவனத்தில் எடுத்தது போன்று இல்லாமல் டிஐபிபியின் சீர்திருத்த மதிப்பீடு பலதரப்பட்ட காரணிகளையும் மாநிலங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

வணிகச் சீர்திருத்தங்களின் முதல் மதிப்பீடு (2015) என்பது 98 காரணிகளின் அடிப்படையில் 32 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது. பயனாளர்கள் (தொழிலகப் - பிரிவினர்) பார்வையின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதைவிட, டிஜபிபி - ஐயின் மதிப்பீடு மாநிலங்கள் அமலாக்கும் உண்மையான சீர்திருத்தங்கள் அடிப்படையில் செய்யப்பட்டது. உலக வங்கியின் டிபி தரவரிசை மதிப்பீடு பயனாளர் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. ஒவ்வொரு மாநிலம் / யூனியன் பிரதேசங்களும் 340 சீர்திருத்த செயல் திட்டத்தில் தங்களது பதில்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. விரிவான ஆய்வுக்கு உட்படுத்த டி.ஐ.பி.பிக்கு தேவையான சான்றாதாரங்களும் சமர்ப்பிப்பது கட்டாயமாக இருந்தது.

விதிகள் மற்றும் செயல்முறைகளைப் பகுப்பாய்வு செய்து சீரமைப்பதற்கான பரந்துபட்ட செயல்திட்டத்தைக் கவனத்தில் கொண்டும் அரசாள்கை நடைமுறைகளை மேலும் திறனுள்ளதாகவும் மின்னணு முறையிலும் ஆக்குவதைக் கருத்தில் கொண்டும் டி.ஐ.பி.பியானது இரண்டாம் சுற்று வருடாந்திர மதிப்பீட்டை வணிகத்தை எளிதாக மேற்கொள்வதற்கான 10 விரிவான குறிகாட்டிகளின் அடிப்படையில் செய்தது. இவை 340 வர்த்தக சீரமைப்புச் செயல்திட்டங்களை உள்ளடக்கியவையாக இருக்கின்றன. அவை:

i. தகவலை அணுகுதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் அம்சங்கள்
ii. ஒற்றைச் சாளரம்
iii. நிலம் கிடைத்தல்
iv. கட்டுமான அனுமதி கிடைக்க உதவும் அம்சங்கள்
v. சுற்றுச்சூழல் பதிவு கிடைக்க உதவும் அம்சங்கள்
vi. தொழிலாளர்களை நெறிப்படுத்தும் அம்சங்கள்
vii. மின் இணைப்பு பெறுதல்
viii. வருமானவரி தாக்கல் செய்தல்
ix. பரிசோதனை சீர்திருத்த அம்சங்கள்
x. வர்த்தகப் பூசல்களைத் தீர்த்து வைக்கும் அம்சங்கள்

ஆகியவை ஆகும்.

ஒவ்வொரு குறிகாட்டியையும் மேம்படுத்துவதற்கான அதிக அளவு வாய்ப்பு உள்ள வகையில்தான் டி.ஐ.பி.பி-ஆனது இந்தக் குறிகாட்டிகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. உதாரணமாக, ஒற்றைச் சாளரத்தைப் பொறுத்தளவில், சி.ஐ.ஐ - கே.பி.எம்.ஜி அறிக்கையானது (2014) இவ்வாறு கூறுகின்றது: கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட தொழில் நிறுவனங்களில் 78% நிறுவனத்தினர் பல்வேறு அரசாங்கத் துறைகளுக்குச் செல்வதைக் குறைத்துக் கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகக் கூறி

உள்ளனர். மேலும் 85% நிறுவனத்தினர் தடையில்லாச் சான்றிதழ்கள் பெறுவதற்காகச் செலவழிக்கும் நேரம் என்பது காரணமே இல்லாமல் அதிகமாக இருக்கிறது என்கின்றனர். அதேபோன்று நிலத்தைச் சேர்த்து பகுத்தல், நிலப்பயன்பாட்டை மாற்றுதல் மற்றும் அதிக விலை போன்ற பிரச்சனைகள் நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஏற்படுகின்றன என 69% நிறுவனங்கள் தெரிவித்து உள்ளன. இந்த ஆய்வின் மூலம் ஒரு வணிக நடவடிக்கையைத் தொடங்குவதில் சுற்றுச்சூழல் தடையில்லா சான்றிதழ் பெறுவதுதான் மிகப்பெரிய தடையாக இருக்கிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மத்திய சட்டங்கள் 44 மற்றும் மாநில சட்டங்கள் சுமார் 100 ஆகியவற்றை உள்ளடக்கிய முறையில் தொழிலாளர் ஏற்பு நடைமுறைகளைப் பொறுத்து 47% நிறுவனங்கள் மிதமான முதல் அதிகமான சிரமத்தை எதிர் கொள்கின்றன (விரிவான தகவலுக்கு 2014ல் மேற்கொள்ளப்பட்ட ''இந்தியாவில் வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை,'' என்ற சி.ஐ.ஐ - கே.பி.எம்.ஜி அறிக்கையைப் பார்க்கவும்).

இரண்டாம் சுற்று கணக்கெடுப்பின் முடிவுகள் இறுதி செய்யப்பட்டு 31-10-2016 அன்று அறிவிக்கப்பட்டன. இதை டி.ஐ.பி.பியின் வலைத்தளத்தில் பார்க்கலாம். சீர்திருத்தங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மாநிலங்களைத் தரவரிசைப் பட்டியலிடுதல் ஆகியவற்றைத் தாண்டியும், டி.ஐ.பி.பியின் முடிவுகள் சீர்திருத்தங்களுக்கான எண்ணற்ற ஆர்வமூட்டும் குறிப்புகளை முன்னோக்கிச் செய்வதற்குத் தருகின்றன. இந்தக் கட்டுரையானது டி.ஐ.பி.பியின் மாநிலங்களுக்கு இடையில் வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்ற இரண்டாம் சுற்று கணக்கெடுப்பின் ஆய்வு முடிவுகளைக் கருத்தில் கொண்டு பகுப்பாய்வு செய்து எடுத்துச் சொல்கின்றது.

## II. மாநிலங்களின் வணிக சீர்திருத்தங்கள் குறித்த டி.ஐ.பி.பி-யின் தரமதிப்பீடு பற்றிய பகுப்பாய்வு

வணிகத்தை எளிமையாக மேற்கொள்ளு தலுக்கான வர்த்தக சீர்திருத்தங்களில் ஒவ்வொரு மாநிலம் / யூனியன் பிரதேசங்களும் எவ்வளவு மதிப்பெண்கள் வாங்கி உள்ளன என்பதன் அடிப்படையில் டி.ஐ.பி.பியின் தரமதிப்பீட்டு வரிசை அமைந்துள்ளது (அட்டவணை1). கணக்கெடுப்பு முடிவுகளில் இருந்து ஒரு குறிப்பிட்ட வகை முறைமை வெளிப்படுகிறது. ஒரு மாநிலம் / யூனியன் பிரதேசம் 50%க்குக் கீழ் அல்லது அதற்கு மேல் மதிப்பெண் வாங்கி இருப்பதைப் பொறுத்து இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரித்தால் மொத்தமுள்ள 36 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் பிரிவுக்கு 18 என்று சமமாக உள்ளன. முதல் பிரிவு மாநிலங்கள் (முன்னணியில் உள்ளவை) சராசரியாக 90% எடுத்துள்ளன. இரண்டாம் பிரிவு மாநிலங்கள் (பின்தங்கி இருப்பவை) 8% மட்டுமே எட்டி உள்ளன. வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்ற கொள்கையின் 10 விரிவான குறிகாட்டிகளின் அடிப்படையில் முன்னணி மாநிலங்களைப் பார்க்கும் போது அவை சுற்றுச்சூழல் பதிவுக்கு உதவும் அம்சங்கள் என்ற குறிகாட்டியில் 99%க்கும் அதிகமாக பெற்றுள்ளன. வர்த்தகப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல் என்பது குறிகாட்டியில் 66% பெற்றுள்ளன (படம் 1). பின்தங்கிய மாநிலங்களைப் பொறுத்த அளவில், வர்த்தகப் பிர்ச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு 33% என்பதில் இருந்து பரிசோதனை சீர்திருத்த அம்சங்களுக்கு 2%க்குக் குறைவு என்பது வரை மதிப்பெண்களைப் பெற்றுள்ளன (படம் 2). சட்டீஸ்கர், பஞ்சாப், மத்தியப்பிரதேசம், ஜார்கண்ட், ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், பீகார் முதலான முன்னணிப் பிரிவில் உள்ள பல மாநிலங்கள் உற்பத்தியில் அவற்றின் சாதைனைக்காக அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. மாறாக முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்ற வேட்கையால் அவை வணிகத்தை எளிதில் மேற்கொள்ளுதல் என்ற சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி உள்ளன. இதுவே இனி இந்தியாவின் தொழிலக வரைபடத்தை மாற்றி அமைக்க உள்ளது.

கூட்டிணைவான போட்டியை அபிவிருத்தி செய்வதில் டி.ஐ.பி.பி-யின் வெற்றியைத் தொடர்ந்து பல மாநிலங்கள் வர்த்தகச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து உள்ளன என்பது இரண்டாம் கணக்கெடுப்பில் இருந்து தெரிய வருகின்றது. அதாவது முதலாவது கணக்கெடுப்பில் தெரிய வந்ததைவிட அதிக அளவு கூட்டிணைவு போட்டி மனப்பான்மை உருவாக்கப்பட்டு உள்ளது (அட்டவணை 1). இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்திய மாநிலங்களாக தெலுங்கானா (13ஆவது ரேங்க்கில் இருந்து 2வது ரேங்க்), ஹரியானா (14 ஆவது ரேங்க்கில் இருந்து 6), உத்ரகாண்ட் (23 ஆவது ரேங்க்கில் இருந்து 9), பஞ்சாப் (16 ஆவது ரேங்க்கில் இருந்து 12) மற்றும் பீகார் (21 ஆவது ரேங்க்கில் இருந்து 16) போன்ற மாநிலங்களைச் சுட்டிக் காட்டலாம். பல புதிய மாநிலங்கள் முன்னேற்றத்தைக் காட்டி இருக்கும் அதே வேளையில் முதல் இடத்தில் இருந்த குஜராத் டி.ஐ.பி.பியின் இரண்டாவது வர்த்தகச் சீரமைப்பு தரமதிப்பீட்டுக் கணக்கெடுப்பில் மூன்றாம் இடத்திற்குப் பின்தங்கி உள்ளது.

காரணிகள் மற்றும் மாநிலங்களைத் தாண்டி, மாநிலங்களின் சீர்திருத்தங்களுக்கான டி.ஐ.பி.பியின்

தரமதிப்பீட்டின் முக்கிய முடிவுகளை நாம் இப்போது பகுப்பாய்வு செய்வோம்.

### 1. ஒட்டுமொத்த முன்னேற்றம்; ஆனால் சீர்திருத்தங்கள் தொடர்ந்து நிலையானதாகவும் செயல்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

கடந்த ஓராண்டில் மாநிலங்கள் வணிகத்தை எளிதில் மேற்கொள்வதற்கான சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தை வெளிப்படுத்தி உள்ளன (அட்டவணை 1). தேசிய அமலாக்க சராசரி தற்போது 48.9% ஆக உள்ளது. கடந்த ஆண்டின் தேசிய சராசரி அளவான 32% உடன் ஒப்பிட இது குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றமே ஆகும். (இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழிலகக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் பத்திரிகைச் செய்தியான ‘‘வர்த்தகச் சீர்திருத்தங்கள் 2016க்கான மாநில அமலாக்குதல் குறித்த தரமதிப்பீடு’’ என்பதைப் பார்க்கவும்). இரண்டாவது கணக்கெடுப்பில் அதிகபட்ச மதிப்பெண் 98.8% (ஆந்திரப்பிரதேசம் மற்றும் தெலுங்கானா) ஆகும். முதல் கணக்கெடுப்பில் இருந்த அதிகபட்ச மதிப்பெண்ணான 71.1% (குஜராத்) என்பதோடு ஒப்பிட இது மிக அதிக அளவிலான வளர்ச்சியாகும். வணிகத்தை எளிதில் மேற்கொள்வதற்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் மாநிலங்களுக்கு இடையில் போட்டியை உருவாக்குதில் டி.ஐ.பி.பி வெற்றி பெற்றுள்ளது. ஒட்டுமொத்த சீர்திருத்தங்களைப் பொறுத்து 16 மாநிலங்கள் 75%க்கும் மேல் மதிப்பெண் பெற்றுள்ளன. வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்ற விஷயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் உலக அளவில் தற்போது பிரதிபலித்து உள்ளது. உலகப் பொருளாதாரக் கழகம் தயாரித்துள்ள சர்வதேச போட்டி மனப்பான்மைக்கான குறியீட்டு எண் அளவின்படி இந்தியா 16 ரேங்க் முன்னேறி உள்ளது (39ஆம் இடத்துக்கு நகர்ந்துள்ளது). இந்தக் கழகம் 138 நாடுகளைப் பட்டியல் இட்டுள்ளது (ஜெனிவாவில் உள்ள உலகப் பொருளாதாரக் கழகம் வெளியிட்டுள்ள ‘‘சர்வதேச போட்டி மனப்பான்மை அறிக்கை 20162-17’’ என்பதைப் பார்க்கவும்). சீர்திருத்த முயற்சிகள் ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து நிலைத்து வருவது முக்கியமான அம்சமாகும். சீர்திருத்தங்களுக்கான செயல்திட்ட வடிவமைப்பு செயல்படுத்தக் கூடியதாக இயக்கத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். சீர்திருத்தங்களை அமல்படுத்துவதற்கான மாநிலங்களின் மாறிவரும் திறன் மற்றும் தொழிற்சாலைகளின் தேவை ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு சீர்திருத்தங்கள் தொடர வேண்டும்.

**அட்டவணை 1: தொழிலகக் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை மேற்கொண்ட மாநிலங்களின் வர்த்தக சீர்திருத்தங்கள் குறித்த தரவரிசை மதிப்பீடு - ரேங்க், மதிப்பெண் மற்றும் மாற்றங்கள்**

| மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் | 2ஆம் கணக்கெடுப்பின்படி ரேங்க் | 2ஆம் கணக்கெடுப்பின் மதிப்பெண் (%) | முதலாம் கணக்கெடுப்பின் ரேங்க் (%) | 2ஆம் கணக்கெடுப்பின் மதிப்பெண் (%) | முதலாம் கணக்கெடுப்பில் இருந்து 2ஆம் கணக்கெடுப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | 1 | 98.78 | 2 | 70.12 | 40.9 |
| தெலுங்கானா | 2 | 98.78 | 13 | 42.45 | 132.7 |
| குஜராத் | 3 | 98.21 | 1 | 71.14 | 38.1 |
| சட்டீஸ்கர் | 4 | 97.32 | 4 | 62.45 | 55.8 |
| மத்தியப்பிரதேசம் | 5 | 97.01 | 5 | 62 | 56.5 |
| ஹரியானா | 6 | 96.95 | 14 | 40.66 | 138.4 |
| ஜார்கண்ட் | 7 | 96.57 | 3 | 63.09 | 53.1 |
| ராஜஸ்தான் | 8 | 96.43 | 6 | 61.04 | 58.0 |
| உத்தரகண்ட் | 9 | 96.13 | 23 | 13.36 | 619.5 |
| மகாராஷ்டிரம் | 10 | 92.86 | 8 | 49.43 | 87.9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒடிசா | 11 | 92.73 | 7 | 52.12 | 77.9 |
| பஞ்சாப் | 12 | 91.07 | 16 | 36.73 | 147.9 |
| கர்நாடகம் | 13 | 88.39 | 9 | 48.5 | 82.2 |
| உத்தரப் பிரதேசம் | 14 | 84.52 | 10 | 47.37 | 78.4 |
| மேற்கு வங்கம் | 15 | 84.23 | 11 | 46.9 | 79.6 |
| பீகார் | 16 | 75.82 | 21 | 16.41 | 362.0 |
| ஹிமாசலப் பிரதேசம் | 17 | 65.48 | 17 | 23.95 | 173.4 |
| தமிழ்நாடு | 18 | 62.8 | 12 | 44.58 | 40.9 |
| தில்லி | 19 | 47.62 | 15 | 37.35 | 27.5 |
| கேரளம் | 20 | 26.97 | 18 | 22.87 | 17.9 |
| கோவா | 21 | 18.15 | 19 | 21.74 | 16.5 |
| திரிபுரா | 22 | 16.67 | 26 | 9.29 | 79.4 |
| டாமன் & டையூ | 23 | 14.58 | NA | NA | NA |
| அசாம் | 24 | 14.29 | 22 | 14.84 | 3.7 |
| தத்ரா & நாகர் ஹவேலி | 25 | 1.79 | NA | NA | NA |
| புதுச்சேரி | 26 | 1.49 | 20 | 17.72 | 91.6 |
| நாகலாந்து | 27 | 1.49 | 31 | 3.41 | 56.3 |
| மணிப்பூர் | 28 | 1.19 | NA | NA | NA |
| மிசோராம் | 29 | 0.89 | 28 | 6.37 | 86.0 |
| சிக்கிம் | 30 | 0.6 | 27 | 7.23 | 91.7 |
| அருணாச்சலப் பிரதேசம் | 31 | 0.3 | 32 | 1.23 | 75.6 |
| ஜம்மு & காஷ்மீர் | 32 | 0.3 | 29 | 5.93 | 94.9 |
| சண்டீகர் | 33 | 0.3 | 24 | 10.04 | 97.0 |
| மேகாலயா | 34 | 0.3 | 30 | 4.38 | 93.2 |
| அந்தமான் & நிக்கோபார் தீவுகள் | 35 | 0.3 | 25 | 9.73 | 96.9 |
| இலட்சத்தீவு | 36 | 0.3 | NA | NA | NA |
| **தேசிய சராசரி** | - | **48.9** | - | **48.9** | - |


ஆதாரம்: http://eodb.dipp.gov.in என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் தரவுகளில் இருந்து கணக்கிடப்பட்டுள்ளது.

**2. பல மாநிலங்கள் நன்றாகச் செயல்பட்டுள்ளன; ஆனால் அவை மேலும் சிறப்பாகச் செயல்பட்டு இருக்கலாம்.**

முன்னிலையில் உள்ள 18 மாநிலங்களும் வணிகத்தை எளிதாக மேற்கொள்வதற்கான 10 குறிகாட்டிகளில் பெரும்பாலான குறிகாட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன. இந்த மாநிலங்கள் 8 குறிகாட்டிகளைப் பொறுத்த அளவில் 75%க்கும் அதிகமாகச் செயல்பட்டுள்ளன. 6 அம்சங்களில் இவை 89%ஐத் தாண்டி விட்டன. எனினும் வர்த்தகப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் அம்சங்கள் மற்றும் நிலம் கிடைத்தல் தொடர்பான விஷயங்களில் அபிவிருத்திக்கு மேலும் வாய்ப்புகள் இருக்கின்றன. முன்னணி மாநிலங்களின் சிறப்பான செயல்திறன் வெளிப்படுத்தும் செய்தி என்னவென்றால், மேலும்

தீவிரமான சீர்திருத்தங்களை அமலாக்க வேண்டும் என்றாலும் அந்த மாநிலங்களால் சீர்திருத்தங்களை நிறைவேற்ற முடியும் என்பதே ஆகும். இந்த மாநிலங்களுக்கு என்றே தனிப்பட்ட சீர்திருத்த செயல்திட்டத்தை டி.ஐ.பி.பி உருவாக்க முன்வர வேண்டும். அடுத்த 35 ஆண்டுகளில் உலகில் உச்சநிலையில் உள்ள 20 நாடுகளில் எளிதாக வணிகம் செய்வதற்கான குறிகாட்டிகளை இந்த மாநிலங்கள் அடைய டி.ஐ.பி.பி உதவ வேண்டும்.

**படம் 1: வணிகத்தை எளிதில் மேற்கொள்ளுதலுக்கான காரணிகள் அடிப்படையில் பட்டியலில் முதலில் உள்ள 18 மாநிலங்களின் சராசரி மதிப்பெண்கள்**





ஆதாரம்: http://eodb.dipp.gov.in. என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் தரவுகளில் இருந்து எடுக்கப்பட்டது.

## 3. பல மாநிலங்கள் கீழ்நிலையில் உள்ளன, இவற்றுக்கு தனிப்பட்ட வித்தியாசமான அணுகுமுறை தேவை

மேலே குறிப்பிட்ட 18 மாநிலங்கள் மட்டுமல்லாமல் கீழ்நிலையில் உள்ள பிற மாநிலங்கள் ஒட்டுமொத்தமாக 50%க்குக் குறைவாக மிக மோசமாகவே செயல்பட்டுள்ளன (படம் 2) வணிகத்தை எளிதாகச் செய்தல் என்பதற்கான 9 குறிகாட்டிகளில் பின்தங்கிய மாநிலங்கள் 16% மதிப்பெண் என்ற அளவைத் தாண்டி மேலே செல்ல முடியவில்லை. இந்த மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் (இலட்சத்தீவு, அந்தமான்-நிகோபார் தீவுகள், மேகாலயா, சண்டிகர், ஜம்மு காஷ்மீர், அருணாச்சலப் பிரதேசம், சிக்கிம், மிசோராம், மணிப்பூர், நாகலாந்து முதலானவை) வணிகத்தை எளிமையாக மேற்கொள்ளுதல் என்பதில் தங்களுடைய இருப்பை வெளிப்படுத்திக் கொள்ள முடியாமல் உள்ளன. மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதையும் இவற்றால் எடுத்துக்காட்ட முடியவில்லை. எனவே இந்த மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் சீர்திருத்தங்களுக்கென்று தனிப்பட விசேஷமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த மோசமான தரவரிசைப் பட்டியல் நிலைமையானது இந்த மாநிலங்களில் முதலீடு செய்ய நினைக்கும் முதலீட்டாளர்களுக்கு தயக்கத்தையே ஏற்படுத்தும். இந்த மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசு உதவ வேண்டும். அதே சமயம், வேறு அம்சங்களில் அதாவது அந்தப் பகுதிகளில் உள்ள உள்ளார்ந்த சாதகமானவற்றை அறிந்து செயல்படுத்தவும் உதவ வேண்டும். உதாரணமாக குறு மற்றும் சிறு தொழில் மேம்பாடு, சுற்றுலா ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். இந்தியா போன்ற அளவு மற்றும் வேறுபாடுகள் உள்ள ஒரு நாட்டில் ''அனைவருக்கும் ஒரே அளவு'' என்ற அளவுகோல் பொருந்தாது. நாட்டில் உள்ள மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள் அகியவற்றை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்து அதற்கேற்ப அவற்றின் சீர்திருத்த முன்னுரிமைகளை வகுப்பது பயன் தருவதாக இருக்கும்.

**படம் 2: வணிகத்தை எளிதில் மேற்கொள்ளுதலுக்கான காரணிகள் என்ற அடிப்படையில் பட்டியலில் கீழ்நிலையில் உள்ள 18 மாநிலங்களின் சராசரி மதிப்பெண்கள்**




ஆதாரம்: http://eodb.dipp.gov.in. என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் தரவுகளில் இருந்து எடுக்கப்பட்டது.

வணிகத்தை எளிதாக மேற்கொள்வதற்கு முன்னணியில் உள்ள மற்றும் பின்தங்கி உள்ள மாநிலங்களுக்கு என வெவ்வேறான அணுகுமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்ற தேவையின் அடிப்படையில், டி.ஐ.பி.பியின் கணக்கெடுப்பு முடிவுகள் தரமதிப்பீட்டு அடிப்படையில் மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் பிரித்துக் காட்டுகின்றன. மாநிலங்களின் செயல்பாடு 25-75% வரை என்ற குறைந்தபட்ச தரமதிப்பீடு

பெற்றுள்ள மாநிலங்களும் இதில் பட்டியலிடப்பட்டுள்ளன (அட்டவணை 2). வணிகத்தை எளிமையாக மேற்கொள்வதற்கான அனைத்துக் காரணிகளையும் பொறுத்து இது உண்மையாக இருக்கிறது. டி.ஐ.பி.பி பரிந்துரைத்துள்ள சீர்திருத்தங்களை அமல்படுத்துவது எளிமையாக இருக்கிறது அல்லது சிரமமாக இருக்கிறது என்பதன் அடிப்படையில் மாநிலங்கள் பிரித்துப் பார்க்கப்படுகின்றன. எனவே இந்த இரண்டு பிரிவாக உள்ள மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கு என்று தனித்தனியான அணுகுமுறைகள் தேவையாக உள்ளன.

**அட்டவணை 2: வணிகத்தை எளிதில் மேற்கொள்வதற்கான 10 காரணிகளில் பல்வேறு தர அளவுகளில் மதிப்பெண் பெற்றுள்ள மாநிலங்களின் எண்ணிக்கை**

| தர மதிப்பு | தகவலை அணுகுதல் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் அமசங்கள் | ஒற்றைச் சாளரம் | நிலம் கிடைத்தல் | கட்டுமான அனுமதி | சுற்றுச் சூழல் பதிவு கிடைக்க உதவும் அம்சங்கள் | தொழிலாளர்களை நெறிப் படுத்தும் அம்சங்கள் | மின் இணைப்பு பெறுதல் | ஆன் லைனில் வருமான வரி தாக்கல் செய்தல் | பரிசோதனை சீர்திருத்த அம்சங்கள் | வர்த்தகப் பூசல்களைத் தீர்த்து வைக்கும் அம்சங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0-25 % | 15 | 19 | 15 | 17 | 13 | 14 | 16 | 14 | 18 | 0 |
| 25-50 % | 5 | 3 | 5 | 3 | 2 | 2 | 2 | 2 | 0 | 22 |
| 50-75 % | 1 | 2 | 7 | 4 | 2 | 2 | 2 | 2 | 1 | 6 |
| 75-100 % | 15 | 12 | 9 | 12 | 19 | 18 | 16 | 18 | 17 | 8 |

ஆதாரம்: http://eodb.dipp.gov.in. என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் தரவுகளில் இருந்து கணக்கிடப்பட்டுள்ளது.

### 4. தில்லி பின்தங்கி உள்ளது. சிறப்புக் கவனம் இதற்குத் தேவைப்படுகிறது

டி.ஐ.பி.பி-யின் சீர்திருத்தங்கள் குறித்த இரண்டாவது தரமதிப்பீட்டில் தில்லி பெற்ற மதிப்பு 48% ஆகும். அதனுடைய தரவரிசைப் பட்டியல் 19 ஆகும் (அட்டவணை 1). உற்பத்திப் பொருளைத் தயாரிக்கும் முன்னணி தயாரிப்பாளர்களில் ஒன்றாக தில்லி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பானது பொதுவாக இல்லை என்றாலும் உலக வங்கியின் ''வணிகத்தை மேற்கொள்ளுதல்'' என்ற ஆய்வறிக்கைக்கு மும்பையுடன் இணைந்து தில்லியும் நிர்ணயக் காரணியாக இருப்பதால் தில்லியின் உற்பத்தி மதிப்பு என்பது முக்கியமானதாகிறது. மேலும் இந்தியா அடுத்த மூன்று ஆண்டுகளில் உலக வங்கியின் அறிக்கை தற்போது தந்துள்ள தரவரிசைப் பட்டியலில் 130ஆவது இடத்தில் இருந்து 50ஆவது இடத்திற்கு முன்னேற வேண்டும் என முயற்சிக்கிறது (பிஸினஸ் ஸ்டேன்டர்டு இதழில் ஜுன் 10, 2016ல் வெளிவந்த முன்னர் சுட்டிக்காட்டிய கட்டுரையைப் பார்க்கவும்). எனவே வணிகத்தை எளிமையாக மேற்கொள்வதற்கான செயல்திறனில் தரமதிப்பீட்டில் உச்சமாக உள்ள 10 மாநிலங்களுள் ஒன்றாக தில்லியும் மும்பையுடன் இணைந்து இடம்பெற வேண்டும் என்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டாக வேண்டும்.

### 5. சீர்திருத்தங்கள் குறித்த தொழிற்சாலைப் பிரிவினரின் பார்வையும் முக்கியமானதாக இருக்கிறது.

தொடர்ந்து வழக்கமாக தனியார் துறையில் இருந்து அரசாங்க அதிகாரிகள் தகவல்களைப் பெற்றுத் தருகின்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டிய தேவையும் உள்ளது என்பதை அரசாங்கம் தெரிந்து வைத்திருக்கவில்லை (ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் நவம்பர் 2004ல் டானி ரோட்ரிக் சமர்ப்பித்த ''இருபத்தோராம் நூற்றாண்டில் தொழிலகக் கொள்கை'' என்ற செயல்திட்ட


கட்டுரையைப் [RWP04-047]) பார்க்கவும்). டி.ஐ.பி.பி -யின் தரமதிப்பீடு என்பது மாநில அரசுகள் தருகின்ற பதில்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. தொழிலகப் பிரிவில் இருந்து அரசுக்குத் தகவல் கிடைப்பது என்ற அம்சம் தரமதிப்பீட்டு அறிக்கையில் இல்லை. இதன் விளைவாக, பெரும்பான்மையான மாநிலங்களில், சீர்திருத்தங்கள் குறித்து அரசாங்கம் என்ன நினைக்கிறது, தொழிற்சாலைப் பிரிவினர் என்ன நினைக்கின்றனர் என்பதற்கு இடையில் பெரிய இடைவெளி உள்ளது. உதாரணமாக, ஒற்றைச் சாளரம் என்ற அம்சத்தில் பல மாநிலங்கள் 90%க்கு மேல் பெற்றிருந்தாலும் அனைத்து மாநிலங்களிலும் இந்த ஒற்றைச் சாளர அமைப்பானது திறம்படச் செயல்படவில்லை. இதேவிதமாகவே வணிகத்தை மேற்கொள்வதில் எளிமைக்கான குறிகாட்டிகள் பலவற்றிலும் இடைவெளி உள்ளது. 100% பெற்ற மாநிலங்களில்கூட இந்த இடைவெளியானது இருக்கிறது. மாநிலங்களில் பெரும்பாலான சீர்திருத்தங்கள் அண்மையில்தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை வேரூன்றி பலன்தர சிறிது காலம் ஆகும். அதற்கிடையில், சீர்திருத்தம் குறித்த அரசின் பார்வைக்கும் தொழிலகப் பிரிவினரின் பார்வைக்கும் இடையில் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இந்தத் திசையில் பயணிப்பதற்கு, டி.ஐ.பி.பி தொழிலகப் பிரிவினரின் பார்வையின் அடிப்படையில் மாநிலங்களைத் தரவரிசைப்படுத்தத் தொடங்கலாம்.

இங்கு தொழிற்சாலைப் பிரிவினரின் பார்வையும் முக்கியம். வர்த்தகச் சூழலை மேம்படுத்துவதில் குறைந்த அளவே பங்காற்ற முடிகின்ற மாநில அரசுகள் தங்களது தரவரிசையை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும். இதற்கு மிகச் சரியான உதாரணமாக உகாண்டாவைக் குறிப்பிடலாம். (செப்டம்பர் 26, 2015 தேதியிட்ட தி எக்கானமிஸ்ட் இதழில் வெளிவந்துள்ள ''வர்த்தகத்தை மேற்கொள்ளுதல் அறிக்கை - தரவரிசை இடத்தை மேலேறச் செய்தல்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்). 2006ல் உகாண்டா நாடானது உலக வங்கியின் தரவரிசைப்பட்டியலில் 139ஆவது இடத்தில் இருந்தது. இப்போது அது 56ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளது. என்றாலும், உலகின் மிக ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக உகாண்டா இப்பொழுதும் உள்ளது.

### 6. சிறந்த நடைமுறைகளை ஏற்பதற்கும் அதைப் பரவலாக்குவதற்கும் நிறைய வாய்ப்பு உள்ளது.

மாநிலங்களுக்கு இடையில் வணிகத்தை எளிதாக மேற்கொள்வதற்கான எண்ணற்ற சிறந்த நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன என்பதை தரமதிப்பீட்டு ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கான 10 குறிகாட்டிகளில் 8 குறிகாட்டிகளில் 10 மாநிலங்கள் 90%க்கும் 100%க்கும் இடையில் மதிப்பெண்கள் பெற்றுள்ளன. இந்த மாநிலங்கள் பிற மாநிலங்களுக்கு சிறந்த நடைமுறைகளுக்கான உதாரணங்களாகத் திகழ முடியும் (படம் 3). 90%க்கும் 100%க்கும் இடையில் தரமதிப்பைப் பெற்றுள்ள அதிகபட்ச மாநிலங்கள் எதில் அதிக அளவு தரமதிப்பைப் பெற்றுள்ளன எனப் பார்த்தால் அது சுற்றுச்சூழல் சான்றிதழ் பெறுதல் என்ற குறிக்காட்டியே ஆகும். இதில்தான் 10 மாநிலங்கள் அடங்குகின்றன. இந்தக் குறிகாட்டி இதற்கு முன்னர் வணிகம் தொடங்குவதில் மிகப் பெரும் சவாலாக இருந்தது ஆகும். இதற்கு அடுத்து தொழிலாளர் நெறிமுறைப்படுத்துதல் குறிகாட்டியில் 17 மாநிலங்களும் ஆன்லைனில் வருமான வரி தாக்கல் செய்தலில் 16 மாநிலங்களும் வருகின்றன.

**படம் 3: சிறந்த நடைமுறைகள் - வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கான பல்வேறு காரணிகளில் 90%க்கம் 100%க்கும் இடைப்பட்ட தரமதிப்பு பெற்றுள்ள மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை**




ஆதாரம்: http://eodb.dipp.gov.in. என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் தரவுகளில் இருந்து எடுக்கப்பட்டது.

வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கான 10 குறிகாட்டிகளில் ஒவ்வொன்றிலும் 90%க்கும் 100%க்கும் இடைப்பட்ட தரமதிப்பை பெற்றுள்ள முதல் மூன்று மாநிலங்கள் அட்டவணை 3ல் பட்டியலிடப்பட்டுள்ளன. வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கான பல்வேறு காரணிகளில் மாநிலங்கள் தங்களது வலிமையை

வெளிப்படுத்தி உள்ளன. சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இத்தகைய மாநிலங்கள் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இதர மாநிலங்கள் இத்தகைய மாநிலங்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இங்கே கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான அம்சம் என்னவென்றால் அதிக தரமதிப்பு பெற்றுள்ள மாநிலங்களில் பெரும் பான்மையானவை வரலாற்று ரீதியில் தொழிற் சாலை நிறைந்த மாநிலங்களாக இல்லாதவை ஆகும். எனினும் இவை விரைவிலேயே வர்த்தகச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி உள்ளன.

**அட்டவணை 3: வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கான 10 குறிகாட்டிகளில் ஒவ்வொன்றிலும் முதல் 3 இடங்களைப் பிடித்துள்ள மாநிலங்கள்**

| வரிசை எண் | வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கான குறிகாட்டிகள் | முதல் 3 மாநிலங்கள் (90%க்கும் 100%க்கும் இடையில் தரமதிப்பு பெற்றவை) |
|---|---|---|
| 1. | தகவலை அணுகுதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் அமசங்கள் | உத்தரகண்ட், ராஜஸ்தான், மேற்கு வங்கம் |
| 2. | ஒற்றைச் சாளரம் | ஹரியானா, உத்தரகண்ட், பஞ்சாப் |
| 3. | நிலம் கிடைத்தல் | குஜராத், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா |
| 4. | கட்டுமான அனுமதி கிடைக்க உதவும் அம்சங்கள் | ஹரியானா, ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான் |
| 5. | பரிசோதனை சீர்திருத்த அம்சங்கள் | உத்தரகண்ட், ராஜஸ்தான், ஜார்கண்ட் |
| 6. | சுற்றுச்சூழல் பதிவு கிடைக்க உதவும் அம்சங்கள் | பஞ்சாப், ஹிமாசலப் பிரதேசம், |
| 7. | தொழிலாளர்களை நெறிப்படுத்தும் அம்சங்கள் | ஹரியானா, உத்தரகண்ட், பஞ்சாப் |
| 8. | மின் இணைப்பு பெறுதல் | உத்தரகண்ட், ராஜஸ்தான், ஜார்கண்ட் |
| 9. | ஆன்லைனில் வருமானவரி தாக்கல் செய்தல் | ராஜஸ்தான், உத்தரகண்ட், ஹரியானா |
| 10. | வர்த்தகப் பூசல்கைளத் தீர்த்து வைக்கும் அம்சங்கள் | தெலுங்கானா |

ஆதாரம்: http://eodb.dipp.gov.in. என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் தரவுகளில் இருந்து எடுக்கப்பட்டது.

### 7. சீர்திருத்தங்கள் குறித்து மத்திய அரசையும் தரமதிப்பீடு செய்ய வேண்டும்.

வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பது குறித்து முன்னணியில் உள்ள மற்றும் பின்தங்கி உள்ள மாநிலங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கவும் மாநிலங்களில் சீர்திருத்த செயல்களை விரைவுபடுத்தவும் மத்திய அரசின் அமைச்சகங்கள் / துறைகளுக்கும்கூட இத்தகைய சீர்திருத்தங்கள் குறித்த தரமதிப்பீட்டைச் செய்வது பயனுள்ளதாக இருக்கும். வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதில் தொடர்புடைய பல பிரச்சனைகள், அதாவது தொழிலாளர் சட்டங்கள், வரிவிதிப்பு, சுற்றுச்சூழல், மூன்றாம் தரப்பு அனுமதி/சுய சான்றிதழ்கள் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்றவை மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டியவை விஷயங்கள் ஆகும்.

### 8. போட்டித்திறன் குறித்தும் மாநிலங்களுக்கு இடையில் தரவரிசை மதிப்பீடு செய்ய வேண்டும்.

வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை குறித்த சீர்திருத்தங்களில் பல மாநிலங்கள் 90% தரமதிப்பு பெற்றிருந்த போதிலும்கூட அவை இன்னமும் முதலீட்டாளர்களுக்கு உகந்த இலட்சிய சூழலை உருவாக்கி வழங்கவில்லை. ஒரு மாநிலத்தின் வர்த்தகச் சூழ்நிலையை மதிப்பீடு செய்வதில் வணிகம் செய்வதில் எளிமை என்பது ஒரு மிக முக்கியமான காரணியாக இருப்பதால், இதை மட்டுமே கொண்டு வர்த்தகத்தை மேற்கொள்வதில் அந்த மாநிலம் போட்டித்திறனுடன் இருப்பதாக உறுதிப்படுத்த முடியாது. வணிகம் மேற்கொள்வதில் எளிமை என்பதைத் தாண்டியும் பிற காரணிகள் உள்ளன. இவை முதலீட்டுக்கான முடிவு எடுப்பதில் முக்கிய பங்கு வகிப்பவையாக உள்ளன. ‘‘முதலீடு

செய்ய முடிவு எடுக்கும் போது தொழில் முனைவோர்கள் உள்ளீட்டுப் பொருட்களின் செலவு, உள்கட்டமைப்பு வசதிகளின் பொருத்தம், நிறுவனங்களின் தரம் போன்ற பல காரணிகளைப் பார்ப்பார்கள்'' (ஜியூசிப்பி ஐயரோசி உலக வங்கியில் ஜனவரி 2009ல் சமர்ப்பித்த ''16 இந்திய மாநிலங்களில் முதலீட்டுக்கான சூழல்'' என்ற செயல்திட்ட கட்டுரையைப் பார்க்கவும்).

தொழில்முனைவோர் மேலும் பொது வசதிகள் கிடைக்கின்றதா என்றும் பார்ப்பார்கள். அதாவது பொது ஆய்வுக்கூடங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகள், தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள், உடல்நலம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், துப்புரவு மற்றும் துப்புரவில் தர நிலைகள் ஆகியவை கிடைக்கின்றதா என்றும் பார்ப்பார்கள் (டானி ரோட்ரிக்கின் முன்னரே சுட்டிக்காட்டி உள்ள 2004ஆம் ஆண்டின் செயல்திட்டக் கட்டுரையைப் பார்க்கவும்). பொதுச்சேவைகளைத் திறம்பட வழங்குதல் என்பதும் மற்றொரு முக்கியமான அம்சமாகும். பெரும்பாலான மாநிலங்கள் சிக்கல் இல்லாத, ஊழல் இல்லாத, அரசு அலுவலகங்களில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சேவைகள் கிடைக்கின்ற அம்சங்களை உறுதிப்படுத்தும் வகையில் சேவைகளுக்கான உரிமைகள் சட்டத்தை இயற்றி இருந்தாலும்கூட, அடிமட்டச் சூழல் என்பது அப்படியேதான் உள்ளது. எனவே முதலீட்டுச் சூழலுக்கான விரிவான காரணிகள் என்ற அடிப்படையில் மாநிலங்கள் தரமதிப்பீடு வரிசைப் படுத்தப்படுவதும் மிக முக்கியமானதாகும். இது ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த போட்டித் தன்மையைப் புரிந்து கொள்ள உதவும்.

### 9. பொது அதிகாரப் பட்டியலில் உள்ள சட்டங்கள் மாநிலங்களுக்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும் மற்றும் அவற்றின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை குறித்த பல குறிகாட்டிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாநிலங்கள் அடிமட்ட நிலையில் முதலீட்டாளர்களை திருப்தி செய்து முதலீடுகளை ஈர்க்கவில்லை. இந்தப் பிரச்சனைக்கும், இதுபோன்ற பிற முக்கியமான நடவடிக்கைகளுக்கும் மேலும் தீவிரமான சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. தொழிலாளர் சட்டங்கள் போன்ற அம்சங்களில் அதிக அளவு சீர்திருத்தங்கள் தேவை. மாநிலங்களுக்கு இதை ஒரு விருப்பச் செயலாக மட்டுமே விட்டுவிடாமல், டி.ஐ.பி.பியானது பொது அதிகாரப் பட்டியலில் உள்ள முக்கியமான தொடர்புடைய சட்டங்களைத் திருத்துமாறு மாநிலங்களை ஊக்கப்படுத்த வேண்டும். இது வணிகத்தை எளிதில் மேற்கொள்ள உதவும். அத்தகைய சட்டங்களை வகுப்பதற்கு முன்வருமாறு மாநில அரசுகளை மத்திய அரசு முன்பே கேட்டுக் கொண்டுள்ளது (ஆகஸ்ட் 24, 2015 தேதியிட்ட மின்ட் இதழில் வெளிவந்துள்ள அஸிட் ரஞ்சன் மிஷ்ராவின் ''31 ஆகஸ்ட் அன்று வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை குறித்த தரவரிசைப்பட்டியல்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்). பல மாநிலங்கள் தகுந்த தொடக்கநிலை வேலைகளை ஆரம்பித்து உள்ளன. இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் மற்றும் வேறு சில மாநிலங்களில் தொழிலகப் பூசல்கள் சட்டம், 1947; ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், 1970; தொழிற்சாலைகள் சட்டம், 1948 போன்ற சட்டங்களின் வரம்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதை உதாரணமாகச் சொல்லலாம். இதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால், மத்திய அரசானது அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏழாவது ஷெட்யூல்டைத் திருத்துவதன் மூலம் மாநிலங்களுக்கு சட்டங்கள் இயற்றுவதில் அதிக அளவு தன்னாட்சியை வழங்க வேண்டும். இந்த ஷரத்துதான் பொதுஅதிகாரப் பட்டியலின் கீழ் கொள்கைச் செயல்பாடுகளின் நீண்ட பட்டியலைத் (47 பதிவுகள்) தருகின்றது. இவற்றில் பெரும்பாலான சட்டங்கள் (தொழிலாளர் சங்கங்கள், தொழிலக மற்றும் தொழிலாளர் பிரச்சனைகள், வனம், தொழிற்சாலைகள், கொதிகலன்கள் மற்றும் மின்சாரம் போன்றவற்றோடு தொடர்புடையவை) வணிகத்தை எளிதில் மேற்கொள்வதற்கு அதனோடு நேரிடையாகத் தொடர்புடையவை ஆகும். மாநிலக் கூட்டாட்சி என்ற திசையை நோக்கி நகரும் போது, அத்தகைய பெரும்பாலான கொள்கைச் செயல்பாடுகள் பொது அதிகாரப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு அவை மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும் (டிசம்பர் 10, 2015ல் இந்தியா டுடே இதழில் வெளியான ஷங்கர் அய்யர் எழுதி உள்ள ''மத்திய அரசு X மாநில அரசு'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

வணிகத்தை எளிதில் மேற்கொள்ளுதல் என்ற விஷயத்தில் மற்ற மாநிலங்களைவிட நாம் நன்றாகச் செயல்பட வேண்டும் என்று மாநிலங்களுக்கு இடையில் உருவாகி வரும் போட்டியைக் கருத்தில் கொண்டால், வர்த்தகச் சீர்திருத்தங்களை விரைந்து நடைமுறைப் படுத்துவதற்கு அவர்களுக்கு கூடுதல் வாய்ப்பு கிடைக்கும்.

## III. சுருக்கம் மற்றும் முடிவுகள்

வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதில் நாடு மோசமான செயல்திறனில் இருந்தாலும்கூட (உலக வங்கியின் வணிகத்தை மேற்கொள்ளுதல் தரவரிசைப் பட்டியலில் வெளிப்பட்டுள்ள முறையில்), ''இந்தியாவில் தயாரியுங்கள்'' என்ற இயக்கத்தின் தொடக்கத்தால், வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை கொடுத்து வருகின்றது. மத்திய அரசு அதனளவில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி வருவதோடு, மாநிலக் கூட்டாட்சியில் போட்டித் தன்மையையும் ஏற்படுத்தி வருகிறது. மாநிலங்களில் மேற்கொள்ளப்டும் வர்த்தகச் சீர்திருத்தங்களின் அடிப்படையில் வருடாந்திர மதிப்பீடு மற்றும் தரவரிசைப்படுத்துதலை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது. இந்த முயற்சியானது தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளிலேயே தேசிய நிலையில் வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்ற அம்சத்தில் குறிப்பிடத்தக்க அளவில் நன்மைகள் கிடைத்துள்ளன. கடந்த ஆண்டின் மதிப்பான 32% என்பதைத் தாண்டி இப்போது 48.9% மதிப்பு என்ற நிலை தேசிய அளவில் எட்டப்பட்டுள்ளது.

''வர்த்தகச் சீர்திருத்தங்களை மாநிலங்களில் நடைமுறைபடுத்துவது குறித்த மதிப்பீடு 2016'' என்ற டி.ஐ.பி.பியின் அண்மைக்கால இரண்டாம் சுற்று கணக்கெடுப்பில் 36 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் பாதி எண்ணிக்கையில் மாநிலங்கள் குறிப்பிடத்தக்க செயல்திறனை வெளிப்படுத்தி உள்ளன. இவை சராசரியாக 90% மதிப்பைப் பெற்றுள்ளன. அடுத்த பாதி எண்ணிக்கையிலான மாநிலங்கள் வெறும் 8% மதிப்பை மட்டுமே பெற்றுள்ளன. இந்த முதல் பாதி மற்றும் இரண்டாம் பாதி மாநிலங்களுக்கு இடையில் உள்ள மிகப்பெரும் இடைவெளியானது இந்த இரு பிரிவுக்கும் தனித்தனி தகுதிநிலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற தேவையை வலியுறுத்துகிறது. இதில் முன்னணி மாநிலங்களுக்கு அதி தீவிரமான சீர்திருத்தங்கள் தேவையாகும். பின்தங்கி உள்ள மாநிலங்களுக்கு கூடுதலான கால அவகாசம், ஆதரவு மற்றும் பலவகையான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். முன்னணி மாநிலங்களின் சிறந்த நடைமுறைகளைப் பின்தங்கி உள்ள மாநிலங்களும் கடைபிடிக்கச் செய்ய தீவிர முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். பின்தங்கிய மாநிலங்களின் பட்டியலை நோக்கி நகர்ந்துள்ள தில்லி தற்போது 19ஆம் இடத்தில் உள்ளது. இதை மும்பையின் தகுதிநிலைக்கு ஏற்ப (மும்பையின் ரேங்க் 10) பொது நீரோட்டத்தில் இணைக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான் உலக வங்கியின் வர்த்தகத்தை மேற்கொள்ளுதலின், தரவரிசைப் பட்டியலில் இந்தியா முன்னேற முடியும்.

டி.ஐ.பி.பி-யானது மாநில அரசுகள் தருகின்ற பின்னூட்டங்களின் அடிப்படையில்தான் மாநிலங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்கின்றது. வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பது குறித்த தொழிற்சாலைப் பிரிவினரின் பார்வை இந்த மதிப்பீட்டு அறிக்கையில் இல்லை. இத்தகைய சீர்திருத்தங்கள் குறித்த தொழிற்சாலைப் பிரிவினரின் பார்வை குறிப்பிடத்தக்க அளவு சாதகமான அளவில் முன்னேறி இருந்தாலும் பல விஷயங்களில் அதிக மதிப்புகளை ஈட்டியுள்ள மாநிலங்களின் பார்வைக்கு ஈடாக இல்லை. இந்த மாநிலங்களின் பார்வை மற்றும் தொழிற்சாலைப் பிரிவினரின் பார்வை என்ற இரண்டுக்கும் உள்ள இடைவெளியை நிரப்பும் வகையில் அடுத்தக்கட்ட சீர்திருத்தங்கள் அமைந்தாக வேண்டும் என்ற தேவையானது உணரப்பட்டுள்ளது. இந்தத் திசையில் இனி டி.ஐ.பி.பியானது தொழிற்சாலைப் பிரிவினரின் பார்வையையும் முறையாகக் கணக்கில் எடுத்துக் கொண்டு வர்த்தகச் சீர்திருத்தங்களை மதிப்பீடு செய்வதைக் கருதிப் பார்க்கலாம். இவ்வாறு செய்வதானது அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை திறம்பட நடைமுறைப் படுத்துவதை உறுதி செய்தாக வேண்டிய மாநில அரசுகளின் பொறுப்பை அதிகப்படுத்தும்.

டி.ஐ.பி.பி-யின் வர்த்தகச் சீர்திருத்தங்கள் குறித்த மதிப்பீட்டுக்கான வாய்ப்பை விரிவுபடுத்திக் கொண்டே செல்வதற்கு ஏற்ற வகையில் பிற அம்சங்களும் உள்ளன. முதலாவது வர்த்தகச் சீர்திருத்தங்களை மதிப்பீடு செய்வதில் மேலும் கூடுதலான விரிவான காரணிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது (உள்ளீட்டுப் பொருட்கள் கிடைத்தல், உள்கட்டமைப்பு வசதிகள், சட்டம் மற்றும் ஒழுங்கு நிலவரம் முதலானவை). மாநிலங்களின் ஒட்டுமொத்த போட்டித்தன்மை / முதலீட்டுச் சூழல் ஆகியவற்றுக்கு அதிக அளவு தாக்கத்தை இவை ஏற்படுத்துகின்றன. வணிகத்தை மேற்கொள்வதில் எளிமைக்கான குறிகாட்டிகளில் சிறப்பான செயல்பாடு என்பது மட்டுமே முதலீட்டாளர்களுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. பிற தேவையான விஷயங்கள் இல்லை என்ற நிலைமையில் இத்தகைய சிறப்பான செயல்பாட்டால் முழுப்பயன் ஏற்படாது. இரண்டாவது,

சீர்திருத்தச் செயல்முறைகளை விரைவுபடுத்துவதற்கு, டி.ஐ.பி.பியானது பொது அதிகாரப் பட்டியலின் கீழ் வருகின்ற வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை குறித்த அம்சங்களையும் நடைமுறைப்படுத்துமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொள்ளலாம் (தொழிலாளர் சட்டங்கள், நிலம் தொடர்பான சீர்திருத்தங்கள் முதலானவை). இதனோடு பொது அதிகாரப் பட்டியலை கணிசமாக நீக்கச் செய்யவும் பரிந்துரைக்கலாம். இது மாநிலங்களுக்கு இடையில் கூட்டுறவு ஆட்சி முறைக்கான வாய்ப்பை அதிகரிக்கும். மூன்றாவது, டி.ஐ.பி.பியானது மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகள் ஆகியவை மேற்கொண்டுள்ள வர்த்தகச் சீர்திருத்தங்களைத் தரமதிப்பீடு செய்யும் முயற்சியைத் தொடங்கலாம். இவ்வாறு செய்வதானது வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்பதற்கான சீர்திருத்தங்களை மேலும் ஊக்கப்படுத்துவதாக அமையும்.

நிறைவாகச் சொல்வதென்றால், வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்ற விஷயத்தில் மத்திய அரசும் அதே போன்று மாநில அரசுகளும் எடுத்து வரும் பலதரப்பட்ட முன்னோட்ட நடவடிக்கைகளுக்காக அவற்றை உண்மையில் பாராட்ட வேண்டும். அடிமட்ட நிலையில், இந்த ஆரம்பக்கட்ட வேலைகள் பலன் அளிக்கத் தொடங்கி உள்ள நிலையில், இந்தச் சீர்திருத்தங்கள் தொடர்ச்சியாக நிலைத்திருக்க வேண்டிய தேவையும் உள்ளது. மேலும் கூடுதலான நடவடிக்கைகளை இணைக்கவும் வேண்டி உள்ளது. இவ்வாறு செய்தால்தான், அடுத்த 3 ஆண்டுகளில் வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை என்ற அம்சத்தில் இந்தியாவை உலகின் முதல் 50 நாடுகள் பட்டியலுக்குள் இடம்பெறச் செய்ய முடியும்.

"இந்தியாவில் தயாரியுங்கள்" என்ற முன்னோட்டத் திட்டம் உண்மையில் வெற்றிரமாக நடைமுறைப்படுத்தப்படும். இதைவிட முக்கியமானது என்னவென்றால், வணிகத்தை மேற்கொள்வதில் எளிமை குறித்த தரவரிசைப் பட்டியலில் இந்தியா முன்னிலையில் இடம்பெறுவது என்பது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நலத்தை மேம்படுத்துவதாக மாறியாக வேண்டும் என்பதே ஆகும். •




# டிஜிட்டல் இந்தியா திட்டம்: இந்தியாவை டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமுதாயமாகவும் அறிவார்ந்த பொருளாதாரமாகவும் மாற்றும் திட்டம்

- ஓம்கார் ராய்

இந்திய மென்பொருள் பூங்கா தலைமை இயக்குனர்

பங்கேற்கத்தக்க, உள்ளடக்கிய, பொறுப்பு நிறைந்த மற்றும் வெளிப்படையான அரசை உருவாக்கும் பின்னணியில் மிகப்பெரிய ஜனநாயகத்தை குடிமக்களுக்கு டிஜிட்டல் அதிகரம் அளித்து அதனை ஒரு ஆழமான ஜனநாயகமாக மாற்றுவதற்கு டிஜிட்டல் இந்தியா ஒரு புதிய செயல்பாட்டுக்கு அழைப்பு விடுக்கிறது

### டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் அவசியம்

ஒவ்வொரு தொடக்கத்திற்கும் ஒரு காரணம் உள்ளது. சமுதாயத்தின் அடிப்படைக் கூறுகளை அதிகாரம் கொண்டவையாக மாற்றுவதற்கான யோசனைகள் உருவாக்கம் ஒரு காரணமாகும். இந்தியா ஓர் உலகளாவிய வளரும் பொருளாதாரமாக உருவெடுத்து வரும் நிலையில், இந்த நாடு பங்கேற்பு ஜனநாயகத்தில் மேம்பாடு அடைய வேண்டியது முக்கியமாகும். அனைத்து குடிமக்களும் பொதுத் தகவல்களை அணுகக்கூடிய அமைப்பு, அரசுக் கொள்கைகள் குறித்த விவாதங்கள், சமூக பொருளாதார வேறுபாடுகளை மீறி நாட்டிற்கான கொள்கைகளை உருவாக்குவதில் பங்களிக்க வேண்டும். நிர்வாகம் என்பது தற்போது ஒரு வழிப் பாதை அல்ல, அது அனைவரையும் உள்ளடக்கியதாகவும், விவாதங்கள் மற்றும் இணைந்து உருவாக்கப்படுவதாகும். பெரும்பாலானவர்கள் இளைஞர்களாக உள்ள இந்தியா போன்ற முற்போக்கான நாட்டில், நாட்டின் சமூக பொருளாதார குறியீட்டை அளிப்பதில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும்.

உலகத் தன்மைக்கு ஏற்ப சமுதாயம் மாறி வரும் நிலையில், தொழில்நுட்பத்தில் குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் விரைவான மாற்றம் ஆச்சரியத்தை அளிக்கக்கூடியதாக உள்ளது. இது அரசு நிர்வாகத்தில் குடிமக்கள் பங்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து குடிமக்களையும் டிஜிட்டல் முறையில் இணைத்து அதன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தை முக்கிய ஊக்கியாக ஆக்குவதற்கு அரசைத் தூண்டி விட்டுள்ளது. மக்கள் டிஜிட்டலை பயன்படுத்த செய்து அவர்களுக்கு வெளிப்படையான நிர்வாக முறையில் அணுகுதலை ஏற்படுத்திக் கொடுக்க தற்போதைய அரசு விரும்புகிறது. இதுதான் டிஜிட்டல் இந்தியாவை அரசு நிர்வாகத்தின் மையப்புள்ளியாகக் கொண்டு வருவதற்கான சாதகப் புள்ளியாக உள்ளது. இதன் மூலம் நல்ல நிர்வாகம் ஏழைகள் மற்றும் பணக்காரர்கள் என அனைத்து மக்களுக்கும் கிடைக்கும்.

### டிஜிட்டல் இந்தியா திட்டத்தை இயக்குவது எது?

ஒவ்வொரு திட்டமும் அதன் முக்கிய தொலைநோக்குப் பார்வையால் வழிநடத்தப்படுகிறது. டிஜிட்டல் இந்தியா திட்டமும் தகவல் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்தி அரசு நிர்வாகம் மற்றும் பொதுச் சேவைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்ற அரசின் தொலைநோக்குப் பார்வையால் ஊக்குவிக்கப்படுகிறது. இந்தியத் திறன் மற்றும் இந்தியத் தொழில்நுட்பம் இணைந்து நாளைய இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதுதான் இந்தியாவை டிஜிட்டல் மூலம் இணைக்கப்பட்ட நாடாக ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தை வலியுறுத்துவதாக உள்ளது. டிஜிட்டல் இந்தியா திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட போது, அரசு இந்த திட்டத்திற்கான தனது தொலைநோக்குப் பார்வையை தெளிவாக வெளியிட்டது. இந்தியாவை டிஜிட்டல் முறையில் அதிகாரம் பெற்ற சமுதாயமாகவும் அறிவுசார்ந்த பொருளாதாரமாகவும் மாற்ற வேண்டும் என்பது தான் இந்தத் திட்டத்தின் தொலைநோக்குப் பார்வையாகும். டிஜிட்டல் இந்தியா மூன்று முக்கிய பகுதிகளில் தனது தொலைநோக்குப் பார்வையைக் கொண்டுள்ளது. அனைத்து குடிமக்களும் பயன்படுத்துவதற்கான டிஜிட்டல் உள்கட்டமைப்பை உருவாக்குதல், தேவைப்படும் நேரத்தில் நிர்வாகம், சேவைகள் மற்றும் குடிமக்களுக்கு டிஜிட்டல் அதிகாரம் அளித்தல் ஆகியவையே அவை.

அனைத்துக் குடிமக்களும் பயன்படுத்து வதற்கான டிஜிட்டல் உள்கட்டமைப்புக்களை உருவாக்குதல் என்பது டிஜிட்டல் இந்தியாவின் பெரும் இலக்குகளை எட்டுவதற்கு உதவும் தொலை நோக்குப் பார்வையாகும். நல்ல சேவைகளை அளிக்க ஒரு நாட்டுக்கு நல்ல இணைப்பு வேண்டும் என்பது முதல் தேவையாகும். இந்தியாவின் மிகுந்த பின்தங்கிய கிராமங்களுக்கும் டிஜிட்டல் இணைப்பு

வசதியை அகண்ட அலைவரிசை மற்றும் உயர் வேக இணைய தள இணைப்பு மூலம் அளிக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். இது அரசு சேவைகள் அனைத்து மக்களுக்கும் அளிக்கப்படுவதை உறுதி செய்வதுடன், சமுதாய பலன்கள் மற்றும் நிதி உள்ளடக்கம் ஆகியவற்றை அடைவதையும் உறுதி செய்யும்.

தேவைப்படும் போது அரசு நிர்வாகம் மற்றும் சேவைகள் என்ற இரண்டாவது தொலை நோக்குப் பார்வை நிர்வாக நடைமுறையில் வெளிப்படைத் தன்மை மற்றும் விரைவு ஆகியவற்றில் கண்ணோட்டம் செலுத்துகிறது. பல மாநில அரசுகள் இகவர்னன்ஸ் எனப்படும் மின்னணு நிர்வாகத்தை தசாப்தங்களுக்கு முன்னதாகவே தொடங்கிவிட்ட போதிலும், அரசு திட்டங்களில் மக்கள் உள்ளடக்கம் என்பது இன்னமும் எட்டப்படவில்லை. இந்தியாவில் மின்னணு நிர்வாகம் என்பது மத்திய மாநில அரசுகள் காகிதப் பணிகளை கணினிமயமாக்கவும், கொள்கை உருவாக்கும் நடைமுறைகளை தானியங்கி நடைமுறைக்கு மாற்றத் தொடங்கிய போதே ஆரம்பித்துவிட்டது.

மூன்றாவது தொலைநோக்குப் பார்வையானது மக்களுக்கு டிஜிட்டல் அதிகாரம் அளிப்பதில் கண்ணோட்டம் செலுத்துகிறது. டிஜிட்டல் இணைப்பு என்பது அனைத்து மக்களுக்கும் ஒரு சம நிலையை ஏற்படுத்துகிறது. பூகோளப் பாகுபாடு, சமூகப் பொருளாதாரப் பாகுபாடு இன்றி இன்றைய தினம் இந்தியர்கள் டிஜிட்டல் திறன் கொண்டவர்களாக உள்ளனர். இணையதளம் மற்றும் மொபைல் ஃபோன்கள் பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள நேர்மறையான மாற்றம் இங்கு குறிப்பிடப்பட வேண்டும். டிஜிட்டல் கல்வி, டிஜிட்டல் ஆதாரங்கள் மற்றும் இணைக்கப்பட்ட டிஜிட்டல் மேடைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் இந்தியாவை டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமுதாயமாக மாற்றுவதே டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் தொகுப்புகளை உருவாக்குதல்

எந்தவொரு திட்டமும் வெற்றி பெற வேண்டும் என்றால் அதற்கு ஒரு திடமான கட்டமைப்பு தேவைப்படுகிறது. டிஜிட்டல் இந்தியா திட்டத்தை அதிக சிறப்பானதாக ஆக்க இந்திய அரசு டிஜிட்டல் இந்தியாவின் ஒன்பது தூண்களை விவரித்துள்ளது. ஒவ்வொரு தூணும் இந்த திட்டத்தின் நோக்கத்திற்காக ஆதரவு அளிப்பது மட்டுமின்றி, இந்தத் திட்டம் தடையின்றி வெற்றி பெற முழுமையான பங்களிப்பையும் அளிக்கிறது.

பிராட்பேண்ட் ஹைவே என்னும் டிஜிட்டல் இந்தியாவின் முதலாவது தூண் தேசிய கண்ணாடி இழை நெட்வொர்க் மூலம் 2.5 இலடசம் கிராமங்களை இணைக்கத் திட்டமிட்டுள்ளது. இது கிராமப்புற மக்கள் அரசுத் திட்டங்களை எளிதாகவும் சிறப்பாகவும் அணுக அதிகாரமளிக்கும். தேசிய கண்ணாடி இழை கட்டமைப்பை ஏற்படுத்தும் வகையில் மத்திய அரசு ரூ. 1000 கோடி மூலதனத்தில் பாரத் பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. 641 மாவட்டங்கள் மற்றும் 6600 வட்டங்களில் உள்ள 2,50,000 கிராமப் பஞ் சாயத்துக்களை இணைக்கும் வகையில் தேசிய கண்ணாடி இழை கட்டமைப்பை தேசிய பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் ஏற்படுத்தும். அனைத்துப் பஞ் சாயத்துக்களிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் இது உலகளாவிய அணுகுதலை அளிக்கும்.

இரண்டாவது தூணான மொபைல் இணைப்புக்கான உலகளாவிய அணுகுதல், நாட்டில் மொபைல் அணுகுதல் இல்லாத அனைத்து பகுதிகளுக்கும் மொபைல் அணுகுதலை அளிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். இன்று நமது நாட்டில் சுமார் 42,000 கிராமங்களில் மொபைல் வசதி இல்லை. 2014 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் ரூ. 16,400 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை தொலைத்தொடர்புத் துறை நடைமுறைப்படுத்தும் முகமையாக செயல்படுகிறது. 2018ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில முழுமையான மொபைல் இணைப்பு வசதி இருக்கும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

பொது இணைய அணுகுதல் திட்டம் மூன்றாவது தூணாகத் திகழ்கிறது. ஒரு கிராமப் பஞ் சாயத்துக்கு ஒரு பொதுச் சேவை மையம் என்ற நிலையில் 2.5 இலட்சம் பொதுச் சேவை மையங்களை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. தற்போது இந்தியாவில் 2.42 இலட்சம் பொது சேவை மையங்கள் 1.62இலட்சம் கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ளது. இந்தப் பொதுச் சேவை மையங்கள் அரசு மற்றும் வர்த்தக சேவைகளை அளிக்கும் பல செயல் விநியோகப் புள்ளிகளாக இருக்கும்.

நான்காவது தூண் ‘மின்னணு நிர்வாகம் - தொழில்நுட்பம் மூலம் அரசை சீரமைத்தல் ஆக செயல்படும். இது பல்வேறு அரசுத் துறைகளின் சேவை வினியோகம் சிறப்பாக இருக்கும் வகையில் எளிமையாகவும் சிறப்பாகவும் இருக்க அரசு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த உதவும்.

டிஜிட்டல் இந்தியாவின் ஐந்தாவது தூணாக திகழ்வது இகிராந்தி எனப்படும் சேவைகளை மின்னணு முறையில் வழங்கும் திட்டமாகும்.

இநிர்வாகம் மற்றும் எம்நிர்வாகம் ஆகியவற்றைக் கொண்டு இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் நல்ல நிர்வாகத்தை அளிக்கும் இகிராந்தி என்பது நிர்வாகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இநிர்வாகத்தில் மாற்றத்தை செய்யும் தொலை நோக்கு பார்வையைக் கொண்டதாகும். ஏற்கனவே இந்தத் திட்டத்தின் கீழ் 44 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய தினம் 3325 சேவைகளை அளித்து இகிராந்தி பெரும் வெற்றி பெற்றுள்ளது.

'அனைவருக்கும் தகவல்' என்பது ஆறாவது தூணாகும். இது நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை அளிக்கிறது. திறந்த தகவல் மேடையின் மூலம் அமைச்சகங்கள்/துறைகள்பொதுப் பயன்பாட்டுக்காக தகவல்களை வெளியிடுகிறது. தகவல்கள் இணையத்தில் வெளியிடப்படுவது ஆவணங்களை எளிதாகவும் வெளிப்படையாகவும் அணுக உதவுகிறது.

டிஜிட்டல் இந்தியாவின் ஏழாவது தூண் மற்றும் முக்கியமான தூண் மின்னணு உற்பத்தியாகும். மின்னணு பொருட்களுக்கான தேவை ஆண்டுக்கு 22 சதவிகிதம் என்ற அளவில் வேகமான வளர்ச்சியை சந்தித்து வருகிறது என்றும் 2020இல் இது 400 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் என்றும் அரசின் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. மின்னணு பொருட்கள் உற்பத்தித் துறைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மத்திய அரசு நாட்டில் மின்னணுத் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு முய்ற்சிகளை மேற்கொண்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 1.28 லட்சம் கோடி முதலீட்டுடன் 250 முதலீட்டு திட்டங்கள் மின்னணு உற்பத்திக்காகப் பெறப்பட்டுள்ளன.

எட்டாவது தூணான வேலைகளுக்கு தகவல் தொழில்நுட்பம் என்ற தூண் சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் துறைகளில் வேலை கிடைக்கும் வகையில் பயிற்சி அளிப்பதில் கண்ணோட்டம் செலுத்துகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களைச் சேர்ந்த 10 மில்லியன் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. தகவல் தொழில்நுட்ப சேவைகளை அளிக்க ஏற்ற வர்த்தகங்களை மேற்கொள்ளும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளின் ஒரு பகுதியாக 3 இலட்சம் பேருக்கு வினியோக முகவர்களாக பயிற்சி அளிக்கவும் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்திய பி.பீ.ஓ மேம்பாட்டுத் திட்டம் மூலம் நாடு முழுவதும் 48,300 இடங்களை நாடு முழுவதும் பி.பீ.ஓ செயல்பாடுகளில் உருவாக்க தொழில்முனைவோரை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கிராமப்புறங்கள் மற்றும் சிறு நகரங்களில் 50,000 பணியிடங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 493 கோடி மதிப்பிலான இந்தத் திட்டம் மனித ஆற்றல் மற்றும் உள்கட்டமைப்புகளை சிறுநகரங்களில் உருவாக்கி அதன் மூலம் அடுத்த கட்ட தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் ஆகியவற்றுக்கு அடித்தளம் அமைக்கப்படும். இதேபோல் வடகிழக்கு பி.பீ.ஓ. மேம்பாட்டுத் திட்டம் வட கிழக்கு பிராந்தியத்தில் பி.பீ.ஓ/தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் துறைக்கு ஊக்கம் அளித்து வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். 5000 இடங்கள் என்ற இலக்கு கொண்ட இந்த திட்டம் வட கிழக்கு பிராந்தியத்தில் 15000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். இது தவிர இந்த அரசு கிராமப்புற பணி ஆற்றலுக்கு தொலைத்தொடர்பு மற்றும் தொலைத்தொடர்பு சார்ந்த சேவைகளில் பயிற்சி அளிக்கவும் இதன்மூலம் ஐந்து லட்சம் பேருக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

இறுதியாக குறுகிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்தக் கூடிய விரைவான அறுவடைத் திட்டங்கள் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் ஒன்பதாவது தூணாகும். தகவல்களுக்கான ஐ.டி. மேடை, அனைத்து பல்கலைக்கழகங்களிலும் வைஃபை சேவை, அரசுக்குள் பாதுகாப்பான மின்னஞ்சல், பொது வைஃபை ஹாட்ஸ்பாட்கள் மற்றும் குறுந்தகவல் அடிப்படையிலான வானிலை தகவல்கள் ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

## நல்ல நிர்வாகத்திற்கான டிஜிட்டல் இந்தியா முயற்சிகள்

நல்ல நிர்வாகம் என்பது வெளிப்படைத் தன்மை மற்றும் குடிமக்கள் சாத்தியம் ஆகியவற்றில் இருந்து ஏற்படுகிறது. டிஜிட்டல் இந்தியா நாடு முழுவதும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டமாக ஆக்கவும், நல்ல நிர்வாகத்தை உறுதிப்படுத்தவும், இந்திய அரசு பல்வேறு முயற்சிகளை ஏற்றுப் பின்பற்ற முடிவு செய்துள்ளது. டிஜி தன் அபியான், ஆதார் பே, பீம் செயலி, சி.எஸ்.சி., டிஜி லாக்கர், திஷா, நேரடி மானிய மாற்றம், மற்றும் இபஞ்சாயத்து ஆகியவை இத்தகைய சில முயற்சிகளாகும். கறுப்புப் பணத்திற்கு எதிராக அரசு மேற்கொண்ட ரொக்க மதிப்பிழப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக குறைந்த ரொக்க பரிவர்த்தனைகளை மேற்கொள்ள மக்கள் ஊக்குவிக்கப்பட்டு, டிஜி தன் அபியான்

முயற்சி மேற்கொள்ளப்பட்டு, மக்களும் வர்த்தகர்களும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். நாடு முழுவதும் டிஜி தன் மேளாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, பல்வேறு டிஜிட்டல் கட்டண முறைகளை மக்கள் பதிவிறக்கம் செய்து, நிறுவி மற்றும் பயன்படுத்த அரசு ஊக்குவித்து வருகிறது. அதே நேரத்தில் அரசு டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்காக பீம் எனற செயலியை அறிமுகம் செய்துள்ளது. டிசம்பர் 30ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்ட பீம் செயலி, பயன்பாடு அதிகரித்துள்ளது. இதுவரை 17 மில்லியன் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ள பீம், மூலம் இதுவரை 19.17 இலட்சம் பரிவர்த்தனைகள் செய்யப்பட்டு இருப்பதாக சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது. பீம் செயலி மூலம் 950 கோடி ரூபாய் மதிப்பிலான பரிவர்த்தனைகள் 2017 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் செய்யப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய உயிரித் தொழில்நுட்பம் அடிப்படையிலான அடையாள முறையை இந்திய அரசு பயன்படுத்தி வருகிறது. நிதி உள்ளடக்கம், பொதுத் துறை விநியோக சீர்திருத்தங்கள், நிதி பட்ஜெட்களை நிர்வகித்தல், சிக்கலற்ற, வசதியான, மக்களை மையப்படுத்திய நிர்வாகம், ஆகியவற்றுக்காக ஆதார் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் 113 கோடி மக்களிடம் தற்போது ஆதார் அட்டை உள்ளது. வங்கிக் கணக்குத் தொடங்கவும், மானியத்தை நேரடியாக வங்கிக் கணக்கில் பெறவும் ஆதார் அட்டை முக்கியமாக உள்ளது. ஆதார் அட்டைக்காக பதிவு செய்யப்பட்ட கட்டை விரல் ரேகையைக் கொண்டு பயனர் வங்கிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம். ஏப்ரல் 14 முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ள ஆதார் பே என்பது 100 கோடிக்கும் அதிகமான மக்கள் கொண்ட நாட்டுக்கு மிகுந்த உள்ளடக்கம் கொண்ட மேடையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

டிஜிட்டல் சமுதாயத்தை உருவாக்க இந்திய அரசு தீவிரமாக பணியாற்றி வரும் நிலையில், 2.5 இலட்சம் கிராமப் பஞ்சாயத்துக்களிலும் பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்தப் பொது சேவை மையம் என்பது ஏராளமான சேவைகளை ஒரே விநியோக மேடையில் அளிக்கும்.

இந்தியாவை டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமுதாயமாகவும் அறிவார்ந்த பொருளாதாரமாகவும் மாற்ற இந்த அரசு எந்தச் செயலையும் செய்யத் தவறாது. இந்த அரசு டிஜி லாக்கர் என்ற முன்னோடித் திட்டத்தை அறிமுகம் செய்து அதன் மூலம் அனைத்து பொது ஆவணங்களையும் பொது இடத்தில் பகிர்ந்து கொள்வதற்கான இடத்தை அளிக்கும் முயற்சியாகும். டிஜி லாக்கர் மூலம் காகிதமின்றி அரசு ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெறலாம். இன்றைய தினம் 40 இலட்சத்துக்கும் அதிகமான டிஜிட்டல் லாக்கர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 20இலட்சம் ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஆதார் உடன் இணைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

## 2017-18 பட்ஜெட்டில் டிஜிட்டல் இந்தியா திட்டம் குறித்த அரசின் கண்ணோட்டம்

டிஜிட்டல் இந்தியா திட்டத்தை விரைவுபடுத்த அரசு 2017-18 பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளது. நாட்டில் கட்டணங்களை அதிகரிக்கவும், இணையதள இணைப்பை அதிகரிக்க கிராமப் புறங்களுக்கு கண்ணாடி இழை கேபிள் இணைப்புகளை அளிக்கவும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. பல்வேறு டிஜிட்டல் கட்டண முறைகளைப் பயன்படுத்தி 2500 கோடி டிஜிட்டல் கட்டணங்களை மேற்கொள்ள அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மார்ச் 2017ல் 10 லட்சம் பி.ஓ.எஸ். முனையங்களை அமைக்கவும், செப்டம்பர் 2017இல் 20 இலட்சம் ஆதார் அடிப்படையிலான பி.ஓ.எஸ். முனையங்களையும் அமைக்குமாறு வங்கிகளுக்கு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 1.5இலட்சம் கிராமப் பஞ்சாயத்துக்களில் கண்ணாடி இழை மூலம் உயர் வேக அகண்ட அலைவரிசை கிடைக்கச் செய்யப்படும் என்றும் 2018ஆம் ஆண்டுக்குள் குறைந்த கட்டணத்தில் டிஜிட்டல் சேவைகளை அணுக வகை செய்யப்படும் என்றும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. பாரத் நெட் கீழ் கண்ணாடி இழை 1.55 இலட்சம் கிலோ மீட்டர் தொலைவுக்கு அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக பாரத் நெட் திட்டத்துக்கு 10,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ள்து.

### நிறைவாக :

அரசின் முயற்சிகள் மற்றும் உறுதிப்பாடுகளின் மூலம் டிஜிட்டல் இந்தியா திட்டம் அதன் இலக்குகளை குறிப்பிடத்தக்க வெற்றியுடன் எட்டும். இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு அளிக்க மக்கள் முன்வந்திருப்பதால், இந்தியாவை உலகின் டிஜிட்டல் அதிகாரம் பெற்ற பெரும் சமுதாயமாக ஆவதில் எந்தச் சிரமமும் இல்லை. வரும் நாட்களில் இந்தியா டிஜிட்டல் முறையில் வளர்ந்த நாடாக மாறுவதை டிஜிட்டல் இந்தியா திட்டம் உறுதிப்படுத்தும் வகையில் பல புதிய இலக்குகளை இந்திய அரசும் இந்திய மக்களும் எட்டுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை..

•

# ஆரவாரமில்லாத பன்னாட்டுப் பொருளாதாரச்சூழலில் இந்தியா ஒரு பிரகாசமான புள்ளி.

- **D.S.மாலிக்** - கூடுதல் தலைமை இயக்குநர்,
(ஊடகம், தகவல் தொடர்பு)

ஆரவாரமில்லாத பன்னாட்டுப் பொருளாதாரச் சூழலில் இந்தியா பிரகாசமான புள்ளிகளில் ஒன்றாகத்திகழ்கிறது. 2016-17இல் இந்தியா 7.1% என்ற ஆரோக்கியமான வளர்ச்சியை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2015-16இல் 7.9% வளர்ச்சியை இந்தியா எட்டியிருந்தது. 2014-15இல் இது 7.2% ஆகவும், 2013-14 இல் 6.5% ஆகவும் இது இருந்தது. 2014-15, 2015-16 ஆகிய ஆண்டுகளில் இயல்புக்கு குறைவான அளவில் பருவமழை இருந்தபோதிலும் வளர்ச்சி வேகம் குறிப்பிடத்தகுந்த வகையில் இருந்தது. உயர்மதிப்புடைய ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்ட போதிலும் 2016-17 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி 7.1% என்ற ஆரோக்கியமான பதிவை உருவாக்கும் என்று கணிக்கப்படுகிறது. இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 2017-18இல் மேலும் வளர்வதற்கு இசைந்ததாக இருக்கும் என்று நிபுணத்துவம் கொண்ட முகமைகளின் கணிப்புகள் தெரிவிக்கின்றன. உலகப்பொருளாதாரமன்றம் 138 நாடுகளுக்குத் தயாரித்துள்ள உலகளாவிய போட்டிக்குறியீட்டைப் பொறுத்தவரை (GCI) 2016-17இல் இந்தியா 39வது இடத்திற்கு வந்துள்ளது. 2013-14இல் இந்தியா 148 நாடுகளில் 60வது இடத்தில் இருந்தது.


கடந்த 3 ஆண்டுகளில் இந்தியப்பொருளாதாரம், அதன் பேரியல் பொருளாதார ஸ்திரத்தன்மையில் பின்வரும் சுட்டிக்காட்டிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

| | 2011-12 to 2013-14 (3 ஆண்டு சராசரி) | 2014-15 to 2015-16 (2 ஆண்டு சராசரி) | 2016-17 * |
|---|---|---|---|
| பணவீக்கம் CPI (NS) | 9.8 | 5.4 | 4.6 |
| பணவீக்கம் WPI | 7.4 | 0.2 | 3.5 |
| CAD (% of GDP) | 3.6 | 1.2 | 0.7 |
| ஒட்டுமொத்தஉள்நாட்டு உற்பத்திவளர்ச்சி (GDP) % | 6.0 | 7.6 | 7.1 |
| உலக GDP வளர்ச்சி (%) | 3.7 | 3.3 | 3.1 |
| அந்நியசெலாவணி இருப்பு (அமெரிக்க பில்லியன் டாலர்) | 296.9 | 350.9 | 362.8 |
| மொத்த அந்நிய நேரடி முதலீடு (பில்லியன் டாலர்) | 21.1 | 33.6 | 21.3 |
| நிதி பற்றாக்குறை (% of GDP) | 5.1 | 4.0 | 3.5 |

(*): For 2016-17, CPI inflation till February 2017, WPI inflation till Dec 2016, CAD till December 2016, Net FDI till H1 2016-17, foreign exchange reserves till February 2017, GDP growth is as per 1stadvance estimate and fiscal deficit is budget estimate 2016-17

**நிதிநிலைமை:**

இந்தியாவின் நிதிநிலைமை வசதியானதாக மாறி உள்ளது. ஒட்டுமொத்த உற்பத்திக் குறியீட்டில் (GDP) நிதிப்பற்றாகுறையின் விகிதம் 2013-14இல் 4.5%இல் இருந்து படிப்படியாகக் குறைந்துகொண்டு வருகிறது. 2014-15இல் இந்த விகிதம் 4.1% ஆகவும், 2015-16இல் 3.9% ஆகவும், 2016-17 திருத்திய மதிப்பீட்டில் 3.5% ஆகவும் இருக்கிறது. இது 2017-18 இல் 3.2% ஆக இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது.





**பணவீக்கம்:**

தற்போதைய அரசாங்கம் மே 2014இல் பொறுப்பேற்றது. பணவீக்கம் தொடர்ச்சியாக அதிக அளவில் இருந்து கொண்டிருந்த காலம் அது. அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளில், உணவு நிர்வாகத்தையும், விலைவாசியையும் மதிநுட்பத்துடன்

கண்காணித்து வந்தது. பிடிவாதமாக அகலமறுத்து, தொடர்ச்சியாக நிலவிவந்த பணவீக்கத்தை இதனால்தான் கட்டுப்படுத்த முடிந்தது. நுகர்வோர் விலைக்குறியீட்டு வீக்கம் மூன்று நிதியாண்டுகளாக தொடர்ச்சியாகக் கட்டுப்பாட்டில் உள்ளது. நுகர்வோர் விலைக்குறியீட்டு வீக்க (கூட்டு) சராசரி 2013-14 இல் 9.5% ஆக இருந்தது. 201415இல் இது 5.9% ஆகவும், 2015-16இல் 4.9% ஆகவும் இருந்தது. சென்ற நிதியாண்டின் பிப்ரவரி 2017 வரையான கால கட்டத்தில் இது மேலும் சரிந்து 3.7% ஆக இருந்தது. உணவு வீக்கமும் மிகவும் குறைந்து காணப்பட்டது. நுகர்வோர் விலைக்குறியீடு அடிப்படையிலான உணவு வீக்கம் 2014-15இல் இரட்டை இலக்கத்தில் இருந்தது. இது 2014-15இல் 6.4% ஆகக் குறைந்தது. 2015-16இல் இது 4.9% ஆனது. பிப்ரவரி 2017 வரையிலான சென்ற நிதியாண்டில் இது மேலும் குறைந்து 4.4% என்று ஆனது. பிப்ரவரி 2017இல் இது 2% ஆக இருந்தது.

ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து 2016 ஆகஸ்ட் முதல் 2021 மார்ச் 31 வரையிலான காலகட்டத்திற்கு, பணவீக்க இலக்கை அரசாங்கம் 4% ஆக நிர்ணயித்தது. இதில் சகிப்பு அளவு +/ 2% ஆக இருக்கலாம்.




ஆதாரம்: உணவுப்பொருள் வழங்கு நிறுவனம்

**வணிகம்:**


நிதானமாக நடைபெற்றுவரும் உலக வணிக வளர்ச்சியோடு ஒட்டிய நிலையில் இந்தியாவின் ஏற்றுமதி 2014-15இல் 1.3% ஆகவும், 2015-16இல் 15.5% ஆகவும் சரிவினைக்கண்டது. 2016-17 (ஏப்ரல் - பிப்ரவரி) இல் இந்த எதிர்மறை வளர்ச்சிப்போக்கு தலைகீழாக மாற்றப்பட்டது. 2015-16 (ஏப்ரல் - பிப்ரவரி) காலத்தில் ஏற்றுமதி வளர்ச்சி 2.5% என்று ஆனது. 239.4 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற மதிப்பில் இருந்து 245.4 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற மதிப்பிற்கு ஏற்றுமதி அதிகரித்தது. மாதாந்திர ஏற்றுமதி வளர்ச்சி விகிதங்கள் செப்டம்பர் 2016 வரை நேர்மறை ஆட்சி நிலையில் இருந்தன.

2015-16இல் இந்தியாவின் இறக்குமதி 15.0% அளவுக்கு வீழ்ச்சிகண்டு 381.0 பில்லியன் அமெரிக்க டாலர் என்று ஆனது. 2014-15இல் இது 448.0 அமெரிக்க பில்லியன் டாலராக இருந்தது. இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் சர்வதேசக் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியாகும். 2016-17 (ஏப்ரல் பிப்ரவரி) காலத்தில் இறக்குமதி 3.7% குறைந்து 340.7 பில்லியன் அமெரிக்க டாலராக ஆனது. இதற்கு முந்தைய ஆண்டில் இதே கால கட்டத்தில் இது 353.7 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

இந்தியாவின் வர்த்தகப்பற்றாக்குறை 2012-13 இல் 190.3 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருந்தது. இருப்பினும் 2015-16 இல் இது 13.8% குறைந்து 118.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்று ஆனது. 2014-15 இல் 137.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவைக்காட்டிலும் இது குறைவானது. 2016-17இல் (ஏப்ரல்-பிப்ரவரி) காலத்தில் வர்த்தகப்பற்றாகுறை 95.3 அமெரிக்க பில்லியன் டாலராக குறைந்தது. இதற்கு முந்தைய ஆண்டில் இதே கால கட்டத்தில் வர்த்தகப்பற்றாகுறை 114.3 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

**நாட்டின் செலுத்துதல் நிலை:**

இந்தியாவின் ஏற்றுமதி நிதானமாக இருந்தபோதிலும், வெளிநாடுகளுக்குப்பணம் செலுத்தும் இந்தியாவின் நிலை வசதியானதாகவே இருந்தது. நடப்புக்கணக்குப்பற்றாக்குறை வேகமாகக் குறைய ஆரம்பித்தது. 2013-14 இல் இருந்த நடப்புக்கணக்குப் பற்றாக்குறையான 88.2 அமெரிக்க பில்லியன் டாலர் (GDP யில் 4.8%), 2015-16 இல் 22.2 அமெரிக்க பில்லியன் டாலராக (GDP யில் 1.1%) ஆகக்குறைந்தது. நடப்புக்கணக்குப்பற்றாக்குறை ஒட்டுமொத்த அடிப்படையில் 2015-16 இல் இருந்த 1.4% என்ற நிலையிலிருந்து வெகுவாகக் குறைந்து 2016 ஏப்ரல்-டிசம்பரில் 0.7% ஆனது.




ஆதாரம் : இந்திய ரிசர்வ்வங்கி

### அந்நிய மூலதனம்:


அந்நிய நேரடி மூலதனம் 2013-14 இல் இருந்த 43.6 அமெரிக்க பில்லியன் டாலர் என்ற நிலையிலிருந்து, 2014-15 இல் 51.8 அமெரிக்க பில்லியன் டாலர் ஆகவும், 2015-16 இல் 59.5 அமெரிக்க பில்லியன் டாலர் ஆகவும் அதிகரித்தது. 2016-17 இல் (ஏப்ரல்-டிசம்பர்) நிகர அந்நிய நேரடி முதலீடு 31.2 அமெரிக்க பில்லியன் டாலர். 2015-16 (ஏப்ரல்டி-சம்பர்) இல் இது 27.2 அமெரிக்க பில்லியன் டாலர் ஆகும்.

அந்நிய நிகர நேரடி முதலீடு 2015-16 முதல் பாதியில் இருந்த () 3.5 அமெரிக்க பில்லியன் டாலர் என்பதில் இருந்து அதிகரித்து, 2016-17 முதல் பாதியில் 8.2 அமெரிக்க பில்லியன் டாலர் ஆக ஆனது. ஆயினும் டிசம்பர் 2016, ஜனவரி 2017 ஆகிய மாதங்களில் நிகர அந்நிய மூலதனத்தொகுப்பு வெளியேற்றம் முறையே 5.8 அமெரிக்க பில்லியன் டாலர், 0.5 அமெரிக்க பில்லியன் டாலர்களாக இருந்தன.

அமெரிக்க கூட்டாட்சியின் கொள்கைகளும், அமெரிக்க இருப்பு நிதி மீதான வட்டி விகிதங்களுமே இந்த நிலைக்கான காரணங்கள் ஆகும். வெளிநாட்டில் மூலதனம் செய்துள்ள பணத்தின் வெளியேற்றம் இந்தியச் சந்தைகளை மட்டுமே சார்ந்திருப்பதல்ல. பொருளாதாரத்தில் முன்னேறி இருக்கும் நாடுகளில் செய்யப்படும் தொகுப்பு முதலீடுகளில் இருந்து, அரும்பிவரும் பெரும்பாலான பொருளாதாரங்கள் அதிக இலாபம் பெற்றுவிடும் நிலையைத் தவிர்ப்பதற்காக அதிலிருந்து வெளியேற்றப்பட்டது இதற்கான காரணமாகும்.

### அந்நிய செலாவணி இருப்புகள்:

அந்நிய செலாவணி இருப்புகள் இதுவரை இல்லாத அளவுக்கு உச்சமான அளவைத்தொட்டுள்ளன. செப்டம்பர் 2016 இறுதியில் இது 371.9 பில்லியன் அமெரிக்க டாலர். இருப்பினும், நவம்பர் 2016இல் இது 361.1 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகக் குறைந்துவிட்டது. அந்நிய செலாவணிச் சந்தையில் இந்திய ரூபாயை நிலைப்படுத்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி தலையிட்டதாலும், அந்நியப்பணத்தில் செய்யப்பட்டிருந்த FCNR (B) நிலையான வைப்புத் தொகையில் ஒரு பகுதி முதிர்ச்சி அடைந்ததால் திருப்பித்தரப்பட்டதாலும் இது நேரிட்டது. 2017 ஜனவரி இறுதியில் அந்நிய செலாவணி இருப்புகள் 363.0 பில்லியன் அமெரிக்க டாலர் ஆக இருந்தன. டிசம்பர் 2016இல் இது 358.9 பில்லியன் அமெரிக்க டாலர். பேரியல் பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மையினால் அந்நிய செலாவணி விகிதத்தில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கத்திற்குத் தடுப்பாக இருக்கக்கூடிய விதத்தில் தற்போதைய நிலை உள்ளது.




ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி

### ரூபாயின் பரிமாற்ற விகிதம்:

ரூபாயின் சராசரி மாதாந்திரப்பரிமாற்ற விகிதம் 2016-17இல் (ஏப்ரல்-பிப்ரவரி) ஒரு அமெரிக்க டாலருக்கு 67.2 ரூபாயாக இருந்தது. இதற்கு முந்தைய ஆண்டின் இதே கால கட்டத்தில் இருந்ததை விடவும் 2.8% மதிப்பிறக்கத்தைக் காட்டுவதாக இது இருந்தது. அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகளை அடுத்து அமெரிக்க டாலரை வலுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும், கூட்டாட்சி நிதி இருப்பின் மீதான நிதிக்கொள்கைகளை இறுக்கமாகியதும் இதற்கு முக்கியமான காரணங்களாகும். இருப்பினும் 2016-17 இல் இந்திய ரூபாய் மிகச் சிறப்பாக செயல்பட்டுள்ளது.

அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு குறைவது பொருளாரதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு மெய்யான செயல்விளைவு மாற்ற விகிதத்தின் (REER) படி மதிப்பிடப்படுகிறது. REER மதிப்பீட்டின் படி, 2015-16 (ஏப்ரல்-ஜனவரி) காலத்தை ஒப்பிடும் போது 2016-17 (ஏப்ரல்-ஜனவரி) யில் 1.7% உயர்வு இருந்தது.

### வெளிநாட்டுக்கடன்:

செப்டம்பர் 2016 இறுதியில், இந்தியாவின் கடன் அளவு 484.3 பில்லியன் அமெரிக்க டாலர் ஆக இருந்தது. மார்ச் 2016 இறுதியில் இருந்ததை விடவும் 0.8 பில்லியன் அமெரிக்க டாலர் குறைந்து (0.2%) இது காணப்பட்டது.

வெளிநாட்டுக்கடன்களின் பெரும்பாலான சுட்டிக்காட்டிகள் செப்டம்பர் 2016இல் முன்னேற்றத்தைக்காட்டின. ஒட்டுமொத்த வெளிநாட்டுக்கடனில் குறுகிய காலக்கடனின் பங்கு மார்ச் 2016இல் இருந்த 17.2% என்பதிலிருந்து செப்டம்பர் 2016 இல் 16.8% ஆகக் குறைந்து காணப்பட்டது. இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்புகள் செப்டம்பர் 2016 இறுதிவரையிலான ஒட்டுமொத்தக்கடன் அளவிற்கு 76.8% பாதுகாப்பை அளிக்கின்றன. இந்தப் பாதுகாப்பு மார்ச் 2016இல் 74.3% ஆக இருந்தது.

கடன் குறிகாட்டிகளின்படி, குறைவான பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய தேசங்களில் இந்தியாவும் ஒன்றாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. கடன் பெற்றுள்ள மற்ற வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடத்தகுந்த வகையில் இது இருக்கிறது. உலக வங்கி வெளியிட்டிருக்கும் "சர்வதேசக்கடன் புள்ளி விவரம் 2017" வளர்ந்து வரும் நாடுகளின் 2015ஆம் ஆண்டு வெளிநாட்டுக்கடன் பற்றிய தரவுகளைத் தந்துள்ளது.

இந்தியாவின் ஒட்டுமொத்த வெளிநாட்டுக்கடன் விகிதத்திற்கும், ஒட்டுமொத்த தேசிய வருமானத்திற்குமிடையே உள்ள விகிதம் 23.4% ஆக இருந்தது. இந்த விகிதத்தை மிகக்குறைவாகக் கொண்டிருக்கும் நாடு இந்தியாவாகும். அந்நியசெலாவணி வைப்புநிதி வெளிநாட்டுக் கடனுக்குத்தரும் பாதுகாப்பு என்ற நிலையில் இந்தியா 69.7% பெற்று 6வது உயரிய இடத்தில் இருக்கிறது.

**வேளாண்மையும் உணவு நிர்வாகமும்:**

பிப்ரவரி 20, 2017இல் வெளியான வருவாய் பற்றிய இரண்டாவது உயர்தர மதிப்பீட்டின்படி வேளாண்மையிலும் அது சார்ந்த பிரிவுகளிலும் ஒட்டுமொத்த மதிப்புக்கூட்டப்பட்ட வளர்ச்சி விகிதங்கள் 2016-17இல் 4.4.% ஆகவும், 2015-16இல் 0.8% ஆகவும், 2014-15இல் (-) 0.2% ஆகவும் இருந்தன. உணவு தாணியங்கள் பற்றி வேளாண்மை அமைச்சகம் 15.02.2017இல் வெளியிட்டுள்ள இரன்டாவது உயர்தர மதிப்பீட்டின்படி உணவு உற்பத்தி 2016-17இல் 251.57 மில்லியன் டன்களாகவும், 2014-15இல் 252.02 மில்லியன் டன்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தொழில் பிரிவு:**

மத்திய புள்ளியியல் நிறுவனம் 28.02.2017இல் வெளியிட்டுள்ள தேசிய வருவாய் பற்றிய இரண்டாவது உயர்தர மதிப்பீடுகளின்படி, தொழில்துறையில் ஒட்டுமொத்த மதிப்புக்கூட்டு வளர்ச்சி விகிதங்கள் 2016-17இல்5.8%, 2015-16இல் 8.2%, 2014-15இல் 6.9% உற்பத்தித்துறையில் ஒட்டுமொத்த மதிப்புக்கூட்டு வளர்ச்சி 2016-17இல் 7.7.%, 2015-16இல் இது 10.6%, 2014-15இல் இது7.5%

மையமான 8 தொழில் துறைகளுக்கான குறியீட்டில் (கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருள்கள், கரி, மின்சாரம், ஸ்டீல், உரம்) 4.8% வளர்ச்சி 2016-17 (ஏப்ரல்-ஜனவரி)யில் பதிவானது. 2014-15இல் 4.5% என்ற அளவிலும், 2015-16இல் 3.4% எனும் அளவிலும் பதிவாகி உள்ளன. 2015இல் மின் துறையில் உதய் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட பிறகு, பெரும்பாலான மாநிலங்கள் ஒட்டுமொத்த தொழில்நுட்ப, வணிக இழப்புகளைக் குறைப்பதற்கு முக்கியமான முயற்சிகளை மேற்கொண்டன.

இந்தத் திட்டம் ஏற்கனவே 2014-15இல் இருந்த பங்கீட்டு நிறுவனங்களின் (DISCOM) 62% கடன்களைப்பற்றி குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டன. சாலைப்போக்குவரத்து நெடுஞ் சாலை அமைச்சகம் வெளியிட்டிருக்கும் 2016 ஆம் ஆண்டிறுதிப் பகுப்பாய்வின்படி, 2016 நவம்பர் வரை 5688 கிலோமீட்டர் நீள நெடுஞ்சாலைகள் போடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதில் 2016 நவம்பர் வரை 4021 கிலோமீட்டர் நீள நெடுஞ்சாலைகள் போடப்பட்டுள்ளன. 2015-16இல் 6029 கிலோமீட்டர் நீள நெடுஞ்சாலைகளும், 2014-15இல் 4410 கிலோமீட்டர் நீள நெடுஞ்சாலைகளும் போடப்பட்டன.

இந்தியப்பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் இதுவரை விவரிக்கப்பட்ட சாதனைகளின்படி பார்க்கும்போதும், சரக்கு மற்றும் சேவை வரி எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க மறைமுக வரிச் சீர்திருத்தம் ஜூலை 1, 2017 முதல் அறிமுகமாக உள்ள நிலையிலும் இந்தியப்பொருளாதாரம் மிக உயரிய சாதனைகளை வரும் ஆண்டுகளில் நிகழ்த்தப்போகிறது என்ற எளிமையான முடிவுக்கு நாம் வரலாம்.

●

# இந்தியாவின் உள்கட்டமைப்பிற்கு மோடி அரசு தரும் உந்துதல்

- K.R. சுதாமன்

40 ஆண்டுகள் அனுபவம் உள்ள பொருளாதாரப் பத்திரிகையாளர்

இந்தியாவின் உள்கட்டமைப்பில் உள்ள இடைவெளி மிகவும் பெரியதாக இருக்கிறது. இதனை இட்டு நிரப்புவதற்கு குறைந்தது 20 ஆண்டு காலம் பிடிக்கும் என்று நிதி அமைச்சர் அண்மையில் கூறியுள்ளார். அதே சமயத்தில், வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் இந்த சிக்கல் பெருமளவிலான முதலீட்டிற்கான ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, இந்த அரசாங்கம் உள்கட்டமைப்பு மேம்பாட்டின் மீது மிகச்சரியாகவே கவனத்தை செலுத்தியிருக்கிறது. உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான உந்துதல் தரப்படுவது தெளிவாகவே தெரிகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் பற்றிய முழுத்தோற்றத்தையும் கணக்கெடுப்பது இந்த முன்னேற்றத்தை முழுமையான நோக்கில் பார்ப்பதற்குத் துணை செய்யும். இரயில்வே, சாலைகள், கப்பல், விமானம், உள்நாட்டு நீர்வழிகள், எரிசக்தி (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்பட), எதுவாயினும் இணைப்பிற்கு உதவக்கூடிய பிரம்மாண்டமான வளர்ச்சியைக் கண்டுள்ளன. ஆயினும் அவை, விடுதலைக்குப் பிந்தைய 70 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் நமது தேவைகளை ஈடுசெய்வதற்கு ஏற்ற வகையிலான குறிப்பிடத்தகுந்த முன்னேறத்தை அடையவில்லை.

உள்கட்டமைப்பை நிறுவுவதற்கு திறமைமிக்கத் தொழிலாளர்களும், மின்னணுமயமாக்கலும் தேவைப்படுகின்றன. இந்தியாவில் உற்பத்தி என்ற திட்டத்துடன் கொண்டுவரப்பட்ட திறன்மிகு இந்தியா, மின்னணு இந்தியா, தூய்மை இந்தியா ஆகிய முன் முயற்சிகளுக்கான புகழ் முழுவதும் அரசாங்கத்தையே சாரும். உலகத்தரமிக்க உள்கட்டமைப்பை உருவாக்கி உலகத்தின் உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாகுவதற்கு இவை உதவும்.

2017 இல் முடிவடையும் 12வது ஐந்தாண்டுத்திட்டத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு 1 டிரில்லியன் டாலரை செலவிட அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதில் பெரும்பகுதி மூலதனம் தனியார் துறையிலிருந்து வர இருக்கிறது.

பொருளாதாரத்தை உயர் வளர்ச்சிப் பாதையில் உந்துவதற்கான வழியாக உள்கட்டமைப்பு உள்ளது. ஆயினும், சுமையைத்தாங்க இயலாததாக இந்தியாவின் உள்கட்டமைப்பு இருக்கிறது. நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ற நிலையில் வளர்ச்சி என்ற நிலையில் இருந்து மாறி தேவைகளுக்கு ஏற்ற வளர்ச்சி என்ற நிலையை எட்டியிருப்பது, உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தகுந்த திருப்பம் ஆகும். நிதி ஒதுக்கீட்டிற்குத் தகுந்த வளர்ச்சி என்பது வேளாண்மையைப் பெரிதும் பாதித்துள்ளது. இதன் காரணமாக உரகச்சாலைகள், குளிர்பதனச்சேமிப்பு, நீர்ப்பாசன வசதிகள் போன்றவற்றிற்கான தேவைகள் ஒரு போதும் நிறைவேறவே இல்லை.

கடந்த 15 ஆண்டுகளில் உள்கட்டமைப்பில் எதிர்கொள்ளப்பட்ட சவால்களில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு நவீனமயமாதலையும், புள்ளிவிவரங்களையும் செயல்படுத்த அரசாங்கம் தலைப்பட்டுள்ளது. 1.25 கோடி மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் 35 வயதுக்கும் குறைவானவர்கள். மிகுந்த செலவு பிடிக்கும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தைவிட வேறெதுவும் இங்கு சிறந்தாக இருக்க இயலாது. இந்த நிதியாண்டில் 7.5% என்ற அளவில் பொருளாதார வளர்ச்சி மீட்சி கண்டிருக்கும் இனிதான இடத்தில் இந்தியா ஏற்கனவே இருக்கிறது. சீனா உள்பட பல பொருளாதாரங்கள் வேகம் குன்றி இருக்கும் சமயத்திலும், உலகளாவிய தேவை உற்சாகம் அளிப்பதாக இல்லாத நிலையிலும் கூட இது நேர்ந்திருக்கிறது.

இத்தகைய சூழலில், அரசாங்கம் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு உந்துதல் தருவதுதான் பொருத்தமானது. பொருளாதார அறிஞர்கள் கூறுவது போல, உலக அரங்கில் தேவை மிகுதிப்பட ஆரம்பிக்கும் போது வழங்கலுக்குத் தேவைப்படும் அவசியமான ஒரு தளத்தை உள்கட்டமைப்பு அமைத்துத்தரும். எண்ணெய், ஸ்டீல், சிமெண்ட், போன்ற பொருள்களின் விலை குறைந்திருக்கும் வேளையில், உள்கட்டமைப்பை மேம்படுத்துவது அர்த்தமுடைய முயற்சியாக இருக்கும். இதனால் செலவினங்களில் ஆதாயம் கிட்டும். வளர்ந்த நாடுகளின் ஓய்வூதிய நிதியம், பிற முதலீட்டாளர்களிடம் இருக்கும் முதலீட்டு நிதி போன்றவை முதலீடு செய்வதற்கான வாய்ப்பிற்காகக் காத்திருக்கின்றன. தற்போது எந்த ஒரு உலக நாடும் பெருமளவிலான நீண்டகாலமுதலீடுகளில் ஆர்வம் கொண்டிருக்க வில்லை. தங்கமான தருணத்தில்

முதலீடு செய்யலாம் என்றே உலக முதலீட்டாளர்கள் காத்திருக்கின்றனர்.

சீனா போன்ற வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் தடுமாறும் வேளையில், இந்தியாவின் பேரியல் பொருளாதார அளபுருக்கள் வலுவுடையனவாக அமைந்து உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான உந்துதலுக்கு உகந்ததாக இருக்கிறது. பண்வீக்கம் 4% க்கும் கீழ் இருப்பதால் நிதிப் பற்றாக்குறை சமாளிக்ககூடிய அளவில் உள்ளது. வட்டி விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளது. வேளாண் வளர்ச்சி மீண்டும் பாய்ச்சல் கண்டுள்ளது. உள்கட்டமைப்பை உயர்த்துவதற்கேற்ற பொருளாதாரச்சூழல் கனிந்துள்ளது. அரசாங்கம் ஏற்கனவே பேராவலுடன் திட்டம் ஒன்றை உருவாக்கி 3 முதல் 4 ஆண்டுகளில் 1 டிரில்லியன் டாலர் அளவிற்கு செலவிடுவதற்கு திட்டமிட்டுள்ளது. இந்த ஆண்டின் முதல் காலாண்டில், மூலதனச் செலவினம் 18% அளவுக்கு அதிகரித்துள்ளது. நின்றுபோய் இருந்த பல திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டு வேகம் கண்டுள்ளன. உள்கட்டமைப்பில் நீண்டகாலமுதலீடு செய்வதற்கு அந்நிய முதலீட்டாளர்கள் அதிகமான ஆர்வத்தைக்காட்டுவதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துள்ளன.

ஜுலை 2014 இல் அரசாங்கம் ரயில்வேயில் அந்நிய முதலீடு பற்றி அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது. மொத்தம் 120 டிரில்லியன் டாலர் முதலீட்டில் ஒரு பகுதி தேசத்தின் ரயில் கட்டமைப்பிற்கு செலவிடப்படும். இதில் புதிய ரயில் பாதைகள், 400 ரயில் நிலையங்கள், 15 பில்லியன் டாலரில் புல்லட் ரயில் சேவை, 12.5 பில்லியன் டாலரில் சரக்கு ரயில் போக்குவரத்துப்பாதை போன்றவை அடங்கும். சென்ற ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் நாடெங்கும் ரயில் - துறைமுக இணைப்பு மேம்படும் விதத்தில் கூடுதல் சரக்கு ரயில் பாதைகள் அறிவிக்கப்பட்டன. மும்பை - டெல்லி, ஹரியானா - கொல்கத்தா சரக்கு ரயில் பாதைகளுக்கான பணிகள் தொடங்கி சுறுசுறுப்பான வேகத்தில் நடைபெற்றுவருகின்றன. கொல்கத்தா - விஜயவாடா, டெல்லி - சென்னை, கொல்கத்தா - மும்பை ஆகிய மேலும் மூன்று சரக்கு ரயில் பாதைகள் அமைக்கப்பட உள்ளன.

6 பில்லியன் டாலர் தேசிய உள்கட்டமைப்பு முதலீட்டு நிதி அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உள்கட்டமைப்புத் துறையிலும், அந்நிய முதலீட்டாளர்கள் மத்தியிலும் இது நம்பிக்கையை உருவாக்கும். இந்த நிதியத்தில் அரசாங்கம் 49% பங்குகளைப் பெற்றிருக்கும். பணம் மிகுதியாக உள்ள பொதுத்துறை நிறுவனங்களும், வெளிநாட்டு மூலதன முதலீட்டாளர்களும் கட்டுப்படுத்தக்கூடிய அளவிலான பங்குகளை வைத்திருப்பார்கள். இந்த நிதியம் வெளியில் உள்ள தொழில் முறை சார்ந்த முதலீட்டு நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படும்.

1990 களில் பொருளாதார சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, வளர்ச்சிக்கான நிதி நிறுவனங்களை அரசு கைவிட்டது. இந்தத் துறையில் முதலீட்டுப் பிரச்னைகள் உருவாவதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று. இது தவிர, நீண்டகால நிதி திரட்டல்களையும், பெருநிறுவனப் பத்திரங்கள், உள்கட்டமைப்புப்பத்திரங்கள் போன்றவற்றையும் மாற்று ஆதாரங்களாக உருவாக்க அரசு தவறிவிட்டது. இதன் காரணமாக, உள்கட்டமைப்பிற்கு அதிக அளவிலான கடன் தருவதற்கு வணிக வங்கிகள் நிர்பந்திக்கப்பட்டன. வர்த்தக வங்கிகள் இயல்பாகவே குறுகிய கால, நடுத்தர கால அளவிலான வைப்புத் தொகைகளையே பெற்றுக்கொள்ளும் இயல்பு கொண்டவை. உள்கட்டமைப்புத் திட்டங்கள் பொதுவாக நீண்ட சூல்கொள்காலமும், மிகக் குறைவான வேகத்தில் திரும்பவரும் தன்மையும் கொண்டவை. எனவே, இந்தத் துறைக்கு குறைவான வட்டியில் நீண்ட காலத்திற்கு நிதி தேவைப்படுகிறது. இதற்கான நிதி பொதுவாக ஓய்வூதிய நிதி, காப்பீட்டுநிதி ஆகியவற்றில் இருந்தும், பெருநிறுவனப்பத்திரங்கள், உள்கட்டமைப்புப் பத்திரங்கள் ஆகியவற்றில் இருந்தும் பெறப்படும். இத்தகைய ஏற்பாடுகள் இல்லாத நிலையில் வணிக வங்கிகள் கடன் கொடுக்க நிர்பந்திக்கப்பட்டன. இதன் காரண்மாக சொத்துக்களுக்கும் கடனுக்கும் இடையே பொருத்தப்பாடின்மை உருவானது. செயல்படாத சொத்துக்களை நிர்வகிக்க இயலாத நிலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

உள் கட்டமைப்பு வளர்ச்சியில் இந்தியா 2014 முதல் இரண்டாவது நிலையில் இருந்து வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் 43 லட்சம் கோடி ரூபாய் இந்தியாவிற்கு தேவைப்படுவதாக CRISIL எனும் மதிப்பீட்டு முகமை தெரிவிக்கிறது.

இதன்படி தோராயமாக ஆண்டுக்கு 8.6 இலட்சம் கோடி தேவைப்படும். எரிசக்தி, போக்குவரத்து, நகர்ப்புற உள்கட்டமைப்பு ஆகிய மூன்றனுக்கு மட்டுமே 43 இலட்சம் கோடி தேவைப்படும். 10/15 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட தனியார் முதலீடுகள் வெளியேறும் நிலையில் இருப்பதால், புதிய அந்நிய முதலீட்டாளர்கள் உள்ளே வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

புதுப்பிக்கத்தக்க மாற்றுஎரிசக்தித் துறையிலும் ஆர்வம் காட்டப்படுகிறது. பசுமை எரிசக்தியை தற்போதுள்ள 30 GW என்ற அளவில் இருந்து 100 GW அளவிற்கு 2022ஆம் ஆண்டில் உயர்த்த அரசு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

புதுப்பிக்கத்தக்க அனைத்து எரிசக்திகள், உள்கட்டமைப்பு, நெடுஞ்சாலை, ரயில் உள் கட்டமைப்பு ஆகியவற்றிற்குப் பொதுவான சொத்து வகைகள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். அரசின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மீதான கவனத்தை இது காட்டுகிறது. அரசாங்கம் சமீபத்தில் முதலீட்டு ஒப்பந்தங்களில் உசிதங்களைக் கைவிட்டு விதிமுறைகளின்படி அந்நிய முதலீடுகளையும், தனியார் முதலீடுகளையும் ஈர்க்கும் தன்மைக்கு மாறிஉள்ளது.

ஜப்பான், கொரியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் அரசுகளுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு இந்தியா ஆர்வத்துடன் முயன்று வருவது பற்றிய ஆதாரங்கள் குவிந்து வருகின்றன.

ஜப்பானிய நிறுவனங்கள் சரக்குப் போக்குவரத்துக்காக அர்ப்பணிக்கப்பட்ட ரயில் பாதையை அமைக்க 5 பில்லியன் டாலர் அளவுக்கு முதலீடு செய்வதற்கான எதிர்பார்ப்புடன் இருக்கின்றன. கனடாவில் உள்ள 268 பில்லியன் டாலர் ஓய்வூதிய அமைப்பு 2 பில்லியன் டாலரை ஏற்கனவே முதலீடு செய்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் முதலீட்டு அமைப்பு இதைப்போலவே ஆர்வம் கொண்டுள்ளது என்கிறார் கோயல்.

முழுமையான வளர்ச்சியைக் காண்பதற்கு கூட்டுறவுடன் போட்டியிடக்கூடிய கூட்டாட்சியை உருவாக்கவேண்டிய தேவையை மத்திய அரசாங்கம் கடந்த 3 ஆண்டுகளாக வலியுறுத்திவருகிறது. மத்திய மாநில அரசுகளுக்கிடையே ‘பெரியண்ணன்’ உறவு முறை நீண்டகாலமாக நிலவிவந்தது. மாநிலங்களின் பன்முகத்தன்மையைக் கணக்கில் கொள்ளாமலும், உள்ளூர்த்தேவைகளை அறியாமலும் “ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தும்” என்ற அணுகுமுறை பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த காரணங்களுக்காகவே மாநிலங்களை அதிகாரமுள்ளதாகவும், வலுவுள்ளதகவும் ஆக்குவதற்கென நிதி ஆயோக் உருவாக்கப்பட்டது.

மாறிவரும் தன்மை கொண்ட சீர்திருத்தங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்திவருகிறது. ஜன்தன், ஆதார், கைபேசி ஆகிய மூன்றும் தனித்தன்மையுடன் இணைந்து ஆதாயங்களை நேரடியாக வழங்கும் திட்டம் உருவாகியுள்ளது. அரசாங்கத்திடம் உள்ள அபூர்வமான வளங்கள் வீணாகிவிடாமல் இது தடுக்கும். இப்படி கிடைக்கும் வளங்கள் கட்டமைப்பு வளர்ச்சிக்கு உள்செலுத்தப்படும். பொது செலவினங்களுக்கு ஒதுக்கீடு அதிகமாக செய்யப்படுவதன் மூலம் இது தெளிவாகிறது. உள்நாட்டு தனியார் மூலதனம் வராத நிலையில் பொருளாதாரத்தை உந்திச்செலுத்துவது காலத்தின் தேவையாக இருக்கிறது. ஜுலை முதற்கொண்டு கொண்டுவரப்படும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) அரசாங்கத்தின் வருவாயை மேலும் பெருக்கும். இதன் மூலம் உள்கட்டமைப்பிற்கு அதிகம் செலவிடமுடியும். GST அறிமுகமாவதன் மூலம் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆண்டுக்கு 1.5 முதல் 2 சதவீதம் வரை உந்தப்படும் என்று பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் பெரும் பகுதி உள்கட்டமைப்பிற்கு செய்யப்படும் முதலீடுகளின் மூலமே கிடைக்கும்.

ஒரு பொருளாதாரம் ஆண்டுக்கு 8 முதல் 9% வளருமானால் ரயில்வே உள்ளிட்ட தளவாடங்கள் பிரிவு குறைந்தபட்சம் 2% க்கும் மேல் வளர்ச்சி அடையும். ரயில்வே மூலதன செலவினம் 1 இலட்சம் கோடி எனும் அளவுக்கு மேல் மிக சரியாகவே அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. ரயில்வேயின் மூலதனச் செலவினம் 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்த 40 ஆயிரம் கோடியிலிருந்து நிலையாக அதிகரித்து 1 இலட்சம் கோடியை எட்டிஉள்ளது.

சாலைப்போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சகமும், கப்பல் போக்குவரத்து அமைச்சகமும் அரசின் முதலீட்டு இலக்கான 3 ஆண்டுகளில் ரூ.25 ட்ரில்லியன் (376.56 பில்லியன் டாலர்) என்பதை அறிவித்துள்ளன. இதில் ரூ.8 ட்ரில்லியன் (120.49 பில்லியன் டாலர்) முதலீடு 27 தொழில் கொத்துக்களை வளர்த்தெடுப்பதற்கும், கூடுதலாக ரூ.5 ட்ரில்லியன் (75.30 பில்லியன் டாலர்) சாலை, ரயில்வே, துறைமுக இணைப்பிற்கான திட்டங்களுக்கும் ஆனது. 2016 ஆம் ஆண்டு உலக வங்கியின் தளவாட முன்னேற்றக்குறியீட்டில் (LPI) இந்தியா 19 நாடுகளை முந்தியது. 160 நாடுகளில் 35வது இடத்தில் இந்தியா இருந்தது.

இந்தியாவின் எரிசக்தித்துறை அடுத்த 4/5 ஆண்டுகளில் 250 பில்லியன் டாலர் மூலதன சாத்தியம் கொண்டதாக இருக்கும். இதனல், எரிசக்தி உற்பத்தி, பகிர்மானம், பங்கீடு, கருவிகள் போன்றவற்றிற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கும்.

இந்தியக் கட்டுமான உபகரணத் தொழில் 4 ஆண்டு கால இடைவெளிக்குப்பிறகு இப்போது உயிர்ப்பு கண்டுள்ளது. 2019-20 இல் 5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இது வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தற்போதைய அளவு 2.8 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். சர்வதேச முதலீட்டாளர்களின் கணிசமான ஆர்வத்தை இந்தியா ஈர்த்துவருகிறது என்பது இதன் பொருள்.

ஸ்பானிஷ் நிறுவனங்கள் பல இந்தியாவின் உள்கட்டமைப்பு, அதிவேக ரயில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சீர்மிகு நகரங்கள் போன்றவற்றின் மேம்பாட்டிற்கு இணைந்து செயல்பட ஆர்வம் காட்டுகின்றன. NASA அமைப்பின் தொழில்நுட்பக் கூட்டாளியான ஸ்கைட்ரான் இன்கார்ப் நகர்ப்புறப் போக்குவரத்திற்கு PODCAR முறையை வளர்த்தெடுத்துவருகிறது. இந்தியாவில் இந்த அமைப்பு 1 கிலோ மீட்டர் நீளத்திற்கு முன்மாதிரி தடத்தை இந்திய அரசின் தேவைக்கேற்ப தன் செலவிலேயே அமைத்திடத் திட்டமிட்டுள்ளது. உலகளாவிய தனியார் பங்கு நிறுவனங்கள், வங்கியல்லாத நிறுவனங்கள், இறையாண்மை கொண்ட செல்வ நிதி அமைப்புகள், உலகளாவிய ஓய்வூதிய நிதி அமைப்புகள் போன்றவை இந்தியாவில் மில்லியன் கணக்கான டாலர்களை உள்கட்டமைப்புத்துறையில் முதலீடு செய்வதற்கு வரிசையில் காத்திருக்கின்றன. தொழிற்சாலைப் பாதைகள், தில்லி - மும்பை, லூதியானா - கொல்கத்தா, கொல்கத்தா விசாகப்பட்டினம் - விஜயவாடா, சென்னை - தூத்துக்குடி, சென்னை - பெங்களூரு, பெங்களூரு - மும்பை ஆகிய வழித்தடங்கள் ஜப்பான், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பிரிட்டிஷ் உதவியுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவற்றோடு கூட 100 சீர்மிகு நகரங்கள் உள்கட்டமைப்புப் பிரிவில், தொலைபேசி உட்பட பல்வேறு துறைகளில், மிகப்பெருமளவிலான முதலீடுகளை உருவாக்கக் காத்திருக்கின்றன.

பிரதமரின் தூய்மை இந்தியா திட்டம் மகாத்மா காந்தியின் 150வது ஆண்டான 2019 ஆம் ஆண்டு வாக்கில் இந்தியாவில் திறந்தவெளி கழிப்பிடங்களே இல்லாத நிலையை எட்டுவதற்குக் கருதியுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளிலும், இலட்சக்கணக்கான தனிநபர் மற்றும் பொதுக் கழிப்பிடங்களை உருவாக்குவதிலும், சாண எரிவாயுக்கலங்கள், குடிநீர் வசதிகளை நாட்டில் அதிகரிக்கவும் முதலீட்டு வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.

ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் அரசின் சீர்மிகு நகரங்கள் திட்டத்தில் ஆர்வம் காட்டி பல பில்லியன் டாலர்களை முதலீடு செய்ய உறுதி பூண்டுள்ளன.

மலேசியக் கட்டுமானத்தொழில் வளர்ச்சி மன்றம் (CIBD) இந்தியாவில் புது தில்லி ரயில் நிலையம் அருகில் உள்ள சீர்மிகு சிறு நகரம், உத்திரப்பிரதேசத்தில் கார்க்முக்தேஷ்வரில் ஒரு பசுமைத்திட்டம், கங்கைநதித்தூய்மைத்திட்டம் போன்ற நகர்ப்புற வளர்ச்சி, வீட்டு வசதித்திட்டங்களில் 30 பில்லியன் டாலர் முதலீடு செய்யக்கருதியுள்ளது. சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் ரூ. 3.17 டில்லியன் (47.7 பில்லியன் டாலர்) அளவுக்கு முதலீடு செய்துள்ளது. கப்பல் அமைச்சகம் 80 ஆயிரம் கோடி ரூபாய் (12.0 பில்லியன் டாலர்) பணத்தை கடந்த இரண்டு ஆண்டுகளில் உலகத்தரமிக்க நெடுஞ்சாலை, கப்பல் போக்குவரத்து ஆகிய துறைகளில் முதலீடு செய்துள்ளது. மொத்தம் 15 ஆயிரம் கிலோ மீட்டரில் 6604 கிலோ மீட்டர் தூரம் தேசிய நெடுஞ்சாலைக்கான இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பிப்ரவரி 2017 இறுதியில் அவை அமைத்து முடிக்கப்பட்டன.

நாட்டின் உள்கட்டமைப்பு சிறப்புறுவதற்கென, 2017-18 மத்திய பட்ஜெட்டில் அரசாங்கம் பலவிதமான புதிய முன்முயற்சிகளை எடுத்துள்ளது. உள்கட்டமைப்பு நிதி ஒதுக்கீடும், பாதுகாப்பு மூலதனச்செலவும் முறையே 10%, 20.6% என்ற அளவில் அதிகரிக்கப்பட்டு உள்கட்டமைப்பிற்கு முறையே ரூ.396135 கோடியும், ரூ.86488 கோடியும் 2016-17 திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. இரயில்வே செலவின ஒதுக்கீடு 8% அதிகரித்து 131000 கோடியாக உள்ளது. 2017-18இல் இதனைக் கொண்டு 3500 கிலோ மீட்டர் நீள இரயில் பாதை அமைக்கப்படும். வாங்கத்தகுந்த விலையில் கிடைக்கக்கூடிய வீட்டு வசதி ஏற்பாட்டிற்கு உள்கட்டமைப்புத்தகுதி தரப்பட்டுள்ளது. நிலம், கட்டிடம் ஆகியவற்றில் செய்யப்ப்படும் நீண்ட கால முதலீடுகளுக்குக் கட்டாய முதலீட்டுக்காலம் 3 ஆண்டிலிருந்து 2 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்திய இரயில்வே 5 பில்லியன் டாலர் இரயில்வே மேம்பாட்டு நிதியை (RIDF) உருவாக்கத்திட்டமிட்டுள்ளது. சந்தையில் இருந்து பல்வேறு உள்கட்டமைப்புகளுக்கு முதலீட்டைப் பெறுவதற்கு இது உதவும். அரசின் ஊரக வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு தருவதற்காகவும், ஊரக உள்கட்டமைப்பை உருவாக்கவும், நகர்ப்புற

வளர்ச்சி, வேளாண் காப்புறுதி ஆகியவற்றிற்கெனவும் கூடுதல் செலவினமாக ரூ.59978.29 கோடி (8.96 பில்லியன் டாலர்) அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் கிசான் சின்சயி திட்டம் (PMKSY) நீர்ப்பாசன ஆதாயத்திட்டம் ஆகியவற்றின் கீழ் (AIBP), 2016-17 வாக்கில் 23 முதல் முன்னுரிமைத்திட்டங்களை முடித்துவைக்கவும், 2017-18இல் இரண்டாவது முன்னுரிமைத் திட்டங்களை முடிக்கவும், டிசம்பர் 2019 வாக்கில் மீதமுள்ள 45 மூன்றாம் முன்னுரிமைத்திட்டங்களை முடிக்கவும் வழிவகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புறங்களில் கரிக்காற்று அதிகம் சேர்வதைக்குறைக்கும் நோக்கத்தோடு அரசாங்கம் 8000 கிலோ மீட்டர் நீளத்திற்கு நடைபாதைகளையும், 106 நகரங்களில் மேலும் அதிகமான மிதிவண்டிப்பாதைகளையும் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.80 ஆயிரம் கோடி செலவில் உருவாக்கிட இருக்கிறது.

மத்திய மின் ஆணையுரிமை அமைப்பு (CEA) இந்தியாவின் மின் பகிர்மானப்பிரிவில் 13வது ஐந்தாண்டுத்திட்டத்தின் போது (2017-2022) ரூ. 2.6 லட்சம் கோடி முதலீட்டை எதிர்பார்க்கிறது. மண்டலங்களுக்கிடையேயான இணைப்பில் மின் பகிர்மானத்திறனை இந்த அமைப்பு 45700 மெகாவாட் ஆக அதிகரிக்க இருக்கிறது.

பொது நிதியில் இருந்து ரூ.35600 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்ட 75 சாலைத்திட்டங்களில் இருந்து தீர்வை வரி மூலம் கிடைக்கும் வருவாய் 2700 கிலோ மீட்டர் நீள சாலைகளை உருவாக்குவதற்குப் போதுமான நிதியை வழங்கும்.

2017-20 ஆம் நிதியாண்டுகளில் நகர்ப்புறங்களில் அடிப்படை உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான அம்ருத் திட்டத்தின் கீழ் 6 மாநிலங்களில் ரூ.2863 கோடி முதலீட்டிற்கு நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய விமான ஆணையம் (AAI) முதலீட்டு செலவினத்தை 201718இல் 25% அதிகரித்து, கூடிக்கொண்டே போகும் விமானப்போக்குவரத்தை சமாளிக்கும் விதத்தில், முக்கியமாக 12 விமான நிலையங்களின் கொள்திறத்தை விரிவாக்குவதற்காக ரூ.2500 கோடியை செலவிட இருக்கிறது. விமான நிலைய ஆணையம் இந்தியா முழுவதும் 13 மண்டல விமான நிலையங்களில் நகரங்களில் உள்ளது போன்ற உள்கட்டமைப்பை உருவாக்கவும், தனியார் உதவியுடன் தங்குமிடங்கள், வாகன நிறுத்தம் இன்ன பிற வசதிகளை உருவாக்கி விமான சேவை அல்லாத வருவாயைப் பெருக்கிடவும் திட்டமிட்டுள்ளது.

100 சீர்மிகு நகரங்களை நாடு முழுவதும் உருவாக்குவதற்கென இந்திய அரசு ரூ.50ஆயிரம் கோடியை ஒதுக்கியுள்ளது. 93 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கான மொத்த முதலீட்டில் நெடுஞ் சாலைத்திட்டங்களை அடுத்த 3 ஆண்டுகளில் அரசு செயல்படுத்த இருக்கிறது. இதற்காக தேசிய நெடுஞ்சாலை உருவாக்கத்திட்டம் (NHDP) ஏற்படுத்தப்பட உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாகும் இது. அவசியமான சட்டக்கட்டமைப்பு, முடிவு எடுப்பதில் வெளிப்படைத்தன்மை, திட்டங்களுக்கு விரைவாக அனுமதி அளித்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

இந்தியாவின் துறைமுகப்பிரிவு வரும் ஆண்டுகளில் மிகப்பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவின் பெரிய துறைமுகங்களில்சரக்குப்போக்குவரத்து 943.06 மெட்ரிக் டன் ஆகவும், சிறிய துறைமுகங்களில் 815.20 மெட்ரிக் டன் ஆகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதனோடு கூட இந்திய விமானச் சந்தை 2020 இல் உலகில் மூன்றவது பெரிய சந்தையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 336 மில்லியன் உள்நாட்டுப்பயணிகளையும், 85 மில்லியன் வெளிநாட்டுப்பயணிகளையும் கையாளும். இதற்குத் தேவைப்படும் மூலதனம் 120 பில்லியன் டாலர் ஆக இருக்கும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. கழுத்தை உடைக்கும் வேகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்றுவரும் உள்கட்டமைப்பு மேம்பாடு பொருளாதாரத்தை உயர்ந்தெழும் நிலையில் வைத்து, வரும் ஆண்டுகளில் அதனை அதிக வளர்ச்சிப் போக்கில் கொண்டு சேர்க்கும். சாலைப்பிரிவில் தினமும் 2/3 கிலோமீட்டர் நீளத்திற்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு வந்தன. இப்போது இந்த நிலை மாறி, தினமும் 40 கிலோமீட்டர் அளவுக்கு சாலைகள் போடப்பட்டு வருகின்றன. வரும் காலங்களில் இது இன்னமும் அதிகரிக்கும். சாலைகள், ரயில்பாதைகள், துறைமுகங்கள், மெட்ரோ ரயில் இவை போன்ற எதுவாயினும், அவற்றில் உள் கட்டமைப்பு வளர்ச்சி தற்போது வெளிப்படையாகத் தெரிகிறது.

---

K.R.சுதாமன், 40 ஆண்டுகால அனுபவம் கொண்ட பொருளாதாரப் பத்திரிகையாளர்.

# ஜம்முகாஷ்மீர் சாளரம்

இந்தியாவிலேயே மிக நீளமான சுரங்கப்பாதைச் சாலையை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

செனானி-நாஷ்ரி இடையேயான இந்தியாவிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை வாகனப்போக்குவரத்து சாலையை ஜம்முகாஷ்மீரில் பிரதமர் அண்மையில் திறந்துவைத்தார்.

இந்தியாவில் உற்பத்தி, திறன் மேம்பாடு ஆகிய அரசாங்கத்தின் முன் முயற்சிகளுக்குப் பொருத்தமான இலட்சிய உதாரணமாக 9 கிலோமீட்டர் நீளம் உடைய இரட்டை சுரங்க வழிப்பாதை திகழ்கிறது. எல்லாப் பருவ நிலைகளிலும் பயன்படுத்தக்கூடிய இந்தச் சுரங்கப்பாதை ஜம்முகாஷ்மீரில் உதம்பூருக்கும், ராம்பன்னுக்கும் இடையில் உருவாக்கப்படுள்ளது. இது இந்தியாவிலேயெ மிக நீளமான சுரங்கப் போக்குவரத்துப் பாதை மட்டுமல்ல. ஆசியாவிலேயே மிக நீளமான இருவழி சுரங்கப்பாதையுமாகும். மிகவும் கடினமான இமயமலை நிலப்பரப்புகளில் ஒன்றில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த சுரங்கப்போக்குவரத்துப்பாதை கடல் மட்டத்தில் இருந்து 1200 கிலோ மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது. ஜம்முவுக்கும், ஸ்ரீநகருக்கும் இடையேயான பயணத்தில் இரண்டு மணி நேரத்தை இது குறைக்கிறது. எல்லாப் பருவநிலைகளிலும் பயன்படுத்தக்கூடியதாக இந்தப்பாதை அமைந்துள்ளது. இதுவரை பயன்பாட்டில் இருந்துவந்த சாலையில் மிகவும் அதிகமான போக்குவரத்து நெருக்கடிகளும், நிலச்சரிவு, பனி, கூரிய வளைவுகள், வாகனங்கள் பழுதுபட்டு நின்று போதல், விபத்துக்கள் போன்ற பலவிதமான பிரச்னைகள் இருந்து வந்தன. இந்த பழைய நிலவழிச் சாலையின் நீளத்தைவிடவும் 41 கிலோமீடர் நீளம் குறைவானதாக சுரங்கப் போக்குவரத்துப்பாதை அமைந்திருக்கிறது.

286 கிலோ மீட்டர் நீளமுள்ள ஜம்மு - ஸ்ரீநகர் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் இந்த சுரங்கப்பாதையும் ஒரு பகுதியாகும். இந்தப்பாதை 9 கிலோ மீட்டர் நீளமும், இருவழிச்சாலை



வசதிகளும் கொண்டது. இதே அளவு கொண்ட தப்பிக்கும் வழிகள் உடைய இணையான சுரங்கப்பாதையும் இதனுடன் இருக்கிறது. முக்கியமான இந்த சுரங்க வழித்தடங்கள் இரண்டும் ஆங்காங்கே ஒழுங்கான இடைவெளிகளில் 29 குறுக்குப்பாதைகளைக் கொண்டவையாக உள்ளன. அவ்சர சமயங்களின் போதும், பழுதுகள் ஏற்படும் போதும் வாகனங்களையும், பயணிகளையும் வெளியேற்றுவதற்கு இந்தக்குறுக்குப் பாதைகளைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.intha sura இந்த சுரங்கப்பாதையின் தெற்குப்பகுதியிலும், வடக்குப்பகுதியிலும் இரண்டு சிறிய பாலங்கள் இருக்கின்றன. நான்கு வழி அணுகுச்சாலையும், சுரங்கப்பாதையின் இருபுறங்களிலும் சுங்கச்சாவடிகளும்



இருக்கின்றன. 5 மீட்டர் உயரதிற்குள்ளிருக்கும் வாகனங்கள் மட்டுமே இந்தப்பாதையில் செல்ல அனுமதிக்கப்படும். வாகனங்களின் உயரத்தைக் கணிக்கக்கூடிய தனிவிதமான உணர்விகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சுரங்கப்பாதைக்குள் திறம்படச் செயல்படும், குறுக்காக உலவும் காற்றொட்ட வசதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு 8 மீட்டர் இடைவெளியிலும் புதிய காற்றை உள்புகுத்தக்கூடிய நுழைவாயில்களும், ஒவ்வொரு 100 மீட்டர் இடைவெளியிலும் காற்று வெளிச்செல்லும் வழிகளும் இருக்கின்றன. காற்றோட்டம், தகவல் தொடர்பு, மின்சாரம், நடைபெறக்கூடிய சம்பவங்களை அறிந்துகொள்ளும் அமைப்பு, ஆபத்தில் உதவி கோரும் அழைப்புக் கருவிகள், தீயணைப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றை முழுமையாக ஒருங்கிணைக்கும் கட்டுப்பாட்டு அமைப்பும் உள்ளது. சுரங்கவழிப் பாதைக்குள் சென்றுகொண்டிருக்கும் போக்குவரத்தைப் பற்றி அறிந்துகொள்ளும் நுட்பங்கள், மனிதர்கள் இல்லாமல் தாமாகவே இயங்கி திறம்படச் செயல்படும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் இருக்கின்றன. எந்தவிதமான பாதுகாப்பு அச்சுறுத்தலையும் கண்டறியக்கூடிய, காட்சிப்படுத்தும் மேம்பட்ட சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. உலகில் வெகு சில சுரங்கப்பாதைகளே இத்தகைய வசதிகளைப் பெற்றுள்ளன.

இந்தத் திட்டம் சுற்றுசூழலுக்கு உகந்ததாக உள்ளது. ஜம்முஸ்ரீநகர் பாதையில் பயணம் செய்வதில் மிச்சமாகக்கூடிய நேரம், ஒரு நாளைக்கு 27 லட்சம் ரூபாய் மதிப்பிலான எரிபொருளையும் மிச்சப்படுத்துகிறது. இவையன்றி, அதிக அளவில் காடுகளை அழித்திடாமல் இந்தப்பாதை அமைக்கப் பட்டுள்ளது. செனானிநஷ்ரி இடையேயான சுரங்கப்பாதை மாநிலத்தின் பொருளாதாரத்தில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்கும். திறன்மிகு இந்தியா முன்முயற்சியின்படி உள்ளூர் மக்களின் திறன்கள் வளர்த்தெடுக்கப்பட்டு, மேம்படுத்தப் பட்டுள்ளன. சுரங்கக் கட்டுமானப்பணியில் இவர்களும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டனர். இந்தத் திட்டதின் மூலம் 2000க்கும் மேற்பட்ட ஜம்முகாஷ்மீர் இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இங்கு வேலைபார்த்தவர்களில் 94% பேர் ஜம்மு காஷ்மீரத்தினர். நாடு முழுவதிலும் இருந்து வந்திருந்த 600 முதல் 900 பேர் இந்த திட்டத்தில் 3 ஷிப்டுகளில் கடந்த 4 ஆண்டுகளாகப் பணிபுரிந்தனர்.

இந்த தருணத்தின் போது பேசிய பிரதமர், இந்த சுரங்கப்பாதை ஜம்முவுக்கும் காஷ்மீரத்துக்கும் இடையே உள்ள தூரத்தை மட்டும் குறைத்திடவில்லை. இந்தப்பள்ளத்தாக்கில் சுற்றுலா, வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை அதிகரித்து மாநிலத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்க இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பையும் நல்கி இருக்கிறது என்றார். சுரங்கப்பாதையின் முழு நீளத்திற்கும் அவர் பயணித்தார். அப்போது, பாதையின் சிறப்பம்சங்கள் பற்றி அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. சாலைப்போக்குவரத்துநெடுஞ் சாலைத்துறை அமைச்சர் பேசும் போது, ஜம்முகாஷ்மீரில் நெடுஞ்சாலைத் திட்டங்களில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூ.7000 கோடி முதலீடு செய்யப்படும் என்றும், ரூ.2100 கோடி செலவில் ஜம்முவைச் சுற்றிலும் ஒரு சுற்றுவட்டப்பாதையும், ரூ.2200 கோடி செலவில் ஸ்ரீநகரைச் சுற்றிலும் ஒரு சுற்றுவட்டப்பாதையும் அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். லேஹ் - லடாக் இடையே ஜோசியா சுரங்கப்பாதை ரூ..6000 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருவதாகவும், 2016-17இல் ஜம்மு காஷ்மீரில் ரூ.1019 கோடி செலவில் 72 திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

•


அடுத்த மாத இதழில்

**“இந்திய இளைஞர்கள் வளரும் சக்தி”**

பற்றிய சிறப்புக் கட்டுரைகள் இடம் பெறும்